

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | அக்டோபர் 03, 2013 | புரட்சி 12 | முழக்கம் 38 | விலை: ரூ.3.00

## அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்களில் ஆயுத பூஜை போடுவதை நிறுத்துக!

## அக்.7 இல் கழகம் ஆர்ப்பாட்டம்

மதச் சார்பற்ற நாட்டில் மத நிகழ்வுகளுக்கு அரசு அலுவலகங்களில் இடமிருக்கக் கூடாது. ஆனால், அரசு அலுவலகங்களிலும் குறிப்பாக காவல் நிலையங்களில் ஆயுத பூஜை கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

அரசு அலுவலகங்களில் கடவுள் படங்களை மாட்டக் கூடாது என்று அண்ணா முதல்வரானவுடன் தி.மு.க. ஆட்சியில் அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணைகள் மீறப்பட்டு, கடவுள் படங்கள், பூஜைகள் நடந்து வருகின்றன.

பல்வேறு மதத்தினரும், மதத்தில் நம்பிக்கை இல்லாதவர்களும் பணியாற்றும் அலுவலகங்கள், கோயில்களாகவோ பஜனை மடங்களாகவோ மாற்றப்படக் கூடாது. இந்த நிகழ்வுகள் மத அடிப்படையில் தேர்தலில் போட்டியிடும் பா.ஜ.க. போன்ற கட்சிகளின் பரப்புரைக்கு மறைமுக வழியமைக்கும் ஆபத்தும் அடங்கியுள்ளன.

எனவே, அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜைகள் கொண்டாட்டத்தை நடத்த அரசு அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தி,

அக்டோபர் 7 ஆம் தேதி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கழகத் தோழர்கள் ஆர்ப்பாட்டங்களுக்கு தயாராகுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– தலைமைக் கழகம்**

## மோடிக்கு கருப்புக்கொடி: திருச்சியில் கழகத்தினர் கைது



26.9.2013 அன்று திருச்சிக்கு வருகை தந்த நரேந்திர மோடிக்கு எதிராக திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக காலை 11.30 மணிக்கு திருச்சி மத்திய பேருந்து நிலையம் பெரியார் சிலை அருகில் மாவட்டத் தலைவர் மீ.இ. ஆரோக்கியசாமி தலைமையில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மண்டல அமைப்பாளர் புதியவன், மாவட்டச் செயலாளர் கந்தவேல்குமார், மாவட்ட அமைப்பாளர் குணா, நாகை மாவட்டச் செயலாளர் மகேஷ், திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் காளிதாஸ், தஞ்சை மாவட்ட அமைப்பாளர் பாரி, பெரம்பலூர் மாவட்டத் தலைவர் தாமோதரன், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தைச் சார்ந்த தனவேந்திரன், செந்தில், திருச்சி மாவட்டத் தோழர்கள் பொன்னுசாமி, முருகானந்தம், மயிலாடுதுறை தோழர்கள் சங்கர், அன்பரசன், ரமேஷ், ஜாகிர் உசேன், இயற்கை, பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து ராஜேஷ் குமார், கற்பனை பித்தன், கண்ணையன், செந்தில்குமார் ஆகிய தோழர்கள் கைது செய்யப்பட்டனர். இரவு 9 மணிக்கு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

மாலை 6 மணிக்கு தோழர்கள் கைது செய்யப்பட்டிருந்த திருமண மண்டபத்தில் ஆதித் தமிழர் பேரவையின் நிதிச் செயலாளர் நீலவேந்தன் மறைவுக்கு வீரவணக்கம் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மண்டல அமைப்பாளர் புதியவன் தலைமையேற்று நடத்தினார். விடுதலை சிறுத்தைகளின் திருச்சி புறநகர் மாவட்டச் செயலாளர் தமிழமுதன் கலந்து கெண்ட நினைவேந்தல் உரை நிகழ்த்தினார்.

**செய்தி : குணா**

# ஜாதி ஒழிப்புப் போராளி நீலவேந்தன் வீரமரணம்

ஜாதி ஒழிப்புப் போராளியும், பெரியார்-அம்பேத்கர் கொள்கையில் உறுதி மிக்கவரும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் மேடைகளிலும் தோழர்களிடத்தும் நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டிருந்தவருமான தோழர் நீலவேந்தன், அருந்ததியருக்கு 6 விழுக்காடு உள் ஒதுக்கீடு கோரி திருப்பூர் பார்க் சாலையில் எம்.ஜி.ஆர். சிலை அருகே தீ வைத்து, எரித்துக் கொண்டு உயிராயுதமானார். 26.9.2013 அதிகாலை 2 மணியளவில் திருப்பூரில் இந்த கோர சம்பவம் நடந்து முடிந்துவிட்டது. ‘தீக்குளிப்பு’ என்ற ‘உயிரிழப்பு’ சமூகப் போராளிகளுக்கு உகந்தது அல்ல என்பது நமது உறுதியான கருத்து. மேடைகளில் பெரியார்-அம்பேத்கர் சிந்தனைகளை அற்புதமாக பேசக் கூடிய ஒரு வலிமையான பேச்சாளரை செயல் வீரரை நாம் இழந்திருக்கிறோம்.

செய்தி அறிந்தவுடன் கழகப் பொருளாளர் இரத்தினசாமி, அமைப்புச் செயலாளர் தாமரைக் கண்ணன், பல்லடம் மண்டல அமைப்புச் செயலாளர் விஜயன், வெளியீட்டுச் செயலாளர் தமிழ்ச் செல்வி, மேட்டூர் மண்டல அமைப்புச் செயலாளர் சக்திவேல், மற்றும் கோவை திருப்பூர் சேலம் மாவட்ட கழகத் தோழர்கள் பெருமளவில் திரண்டனர். ஆதித் தமிழர் பேரவை நிறுவனர் அதியமான், சென்னையி லிருந்து கண் அறுவை சிகிச்சை செய்த நிலையில், கார் மூலம் திருப்பூர் வந்தார். ஆதித் தமிழர் பேரவைத் தோழர்கள் ஏராளமாக வந்திருந்தனர். மாலை 4 மணியளவில் அனுப்பர்பாளையம் மின் மயானத்தில் ஊர்வலமாக எடுத்துச் சென்று எவ்வித மூடச் சடங்குகளும் இன்றி உடல் எரியூட்டப் பட்டது. இறுதி ஊர்வலம் 3 மணி நேரம் நடந்தது.

சென்னையில் நிகழ்ச்சியில் இருந்த கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி செய்தியறிந்து, அடுத்த நாள் திருப்பூர் கழகப் பொறுப்பாளர்களுடன் அனுப்பர்பாளையத்திலுள்ள நீலவேந்தன் இல்லம் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். 32 வயதே ஆன நீலவேந்தன் - வழக்குரைஞர். இன்னும் திருமணமாகவில்லை. தாய் தந்தையோடு சகோதரி ஒருவர் இருக்கிறார். அவரும் ஒரு வழக்கறிஞர். பேச்சு, செயல், சிந்தனைகளில் ஆற்றல் மிக்க தோழரின் இழப்பு சமுதாயத்துக்கான இழப்பே ஆகும். திராவிடர் விடுதலைக் கழகம் வீர வணக்கத்தை உரித்தாக்குகிறது!

### இராணுவ வாகன மறியலில் சிறைச் சென்ற போராளி

தோழர் நீலவேந்தன் அவர்களின் இயற்பெயர் ஸ்ரீதர். இவர் திருப்பூர் மாவட்டம், அனுப்பர்பாளையத்தில் 9.4.1979 அன்று பிறந்தார். இவரது தந்தை பழனிச்சாமி, தாயார் செல்வி ஆவார். இவர் உடன்பிறந்த தங்கை ஸ்ரீமதி.



நீலவேந்தன் தன்னுடைய பட்டயப் படிப்பை 1998 ஆம் ஆண்டு முடித்தார். இவர் தன் பள்ளிக் காலங்களிலேயே பெரியாரிய இயக்கக் கொள்கைகளில் ஈடுபாட்டுடன் இருந்து வந்தார். பட்டயப் படிப்பு முடித்த சமயத்தில் இவருடைய தந்தையார் வைத்திருந்த பட்டறையில் ஒரு ஆதிக்க சாதிக்காரன் இவர்களைக் கேட்காமலேயே வேலை செய்து வைத்திருந்த இரும்பு கேட் ஒன்றை எடுத்துச் சென்றுவிட்டான். இந்தப் பிரச்சினையில் பாதிக்கப்பட்ட பின் தோழர் நீலவேந்தன் அவர்களும், அவரின் தந்தையாரும் முடிவு செய்து தம்மைப் போல் தலித் சமுதாய மக்கள் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் நல்ல சம்பளத்தில் பொறியாளராக ஆகும் வாய்ப்பை உதறித் தள்ளி வழக்கறிஞராக ஆக முடிவு செய்து தன் படிப்பைத் தொடர்ந்தார்.

வழக்கறிஞர் படிப்பின்போது ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலைக்காக குரல் கொடுத்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வந்த அவர், பின்னாளில் தன்னை ஆதித் தமிழர் பேரவையில் இணைத்துக் கொண்டார். அம்பேத்கரியல் வாதிகள் தங்கள் அடையாளமாக நீலச் சட்டையை அணிய வேண்டும் என்பதை வலியுறுத்தி முதன்முதலில் நீலச் சட்டையை அணிந்தவர் இவர். இன்று தமிழகமெங்கும் நாம் காணும் நீலச் சட்டைத் தோழர்கள் அனைவரும் அணிந்திருக்கும் நீலச் சட்டைக்குப் பின்னால் நீலவேந்தனின் பங்கு முக்கியமானதாகும்.

இவரின் 16 ஆண்டுகால பொது வாழ்க்கையில் ஈழத் தமிழருக்கு எதிரான போருக்கு, இராணுவத் தளவாடங்கள் அனுப்பிய இந்திய இராணுவத்தை மே 2, 2009 அன்று கோவை மாவட்டம் நீலம்பூரில் தடுத்து நிறுத்திய வழக்கில் கைது செய்யப்பட்டு, 81 நாட்கள் சிறையில் இருந்தார். மாவீரர் நாள் சுவரொட்டி ஒட்டிய வழக்கில் 15 நாட்களும், கூடங்குளத்துக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து மறியல் செய்து கைது செய்யப்பட்டு 10 நாட்களும் சிறையில் இருந்தார். பல்வேறு வழக்குகளில் மொத்தம் 163 நாட்கள் சிறையிலிருந்தார்.

**(சென்னையில் செப்.17 இல் கழகக் கூட்டத்தில் நீலவேந்தன் கடைசியாக ஆற்றிய உரை – உள்ளே)**

# வினாக்கள்... விடைகள்...

+ சில நேரங்களில் நாம் தவறு செய்கிறோம்; சில நேரங்களில் நீதிமன்றங்களும் தவறு செய்கின்றன. தண்டிக்கப்பட்ட அரசியல்வாதிகள் பதவி பறிபோகும் என்று தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றத்தின் தவறை, இப்போது நாம் சரி செய்கிறோம்.
  **– சட்ட அமைச்சர் கபில்சிபல்**

  இப்போது நீங்கள் செய்த தவறை ராகுல் காந்தி சரி செய்துள்ளார். ராகுல் செய்த தவறுக்காக சோனியா, மன்மோகனை சரி செய்து வருகிறார். அட போங்கப்பா, நீங்களும் உங்க தத்துவமும்!

+ முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு என்ற பெயரில் காந்தி சிலைக்கு மரியாதை செலுத்த வரும் பொது மக்களை தடுக்கக் கூடாது என காவல்துறைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு. **– செய்தி**

  காந்தி என்பவரும் ஒரு முக்கிய பிரமுகர் தான் என்பதை காவல்துறைக்கு புரியும்படி நன்றாக எடுத்துச் சொல்லியிருந்தால் இந்தத் தவறு நடந்திருக்காது. பரவாயில்லை, விடுங்கள்.

+ ஒரு மாத காலத்துக்குள் இந்தியாவி லிருந்து சுமார் 1350 தகவல்களை அமெரிக்கா திருடியுள்ளது. **– செய்தி**

  இந்தத் தகவலையும் தகவல் உரிமை ஆணையம் தான், தெரிவித்துள்ளதா?

+ காஷ்மீர் மாநிலத்தில் – அமைதி, மக்களிடையே நல்லிணக்கம் ஏற்படுவதற்காகவும் மக்கள் தீவிரவாதிகளிடமிருந்து விலகியிருப்பதற்காகவும் அமைச்சர்களுக்கு இராணுவம் பணம் தருகிறது.
  **– இராணுவ தளபதி வி.கே.சிங்**

  இதுகூட நல்லா இருக்கே. இனி, இராணுவத்துக்கு நிதி ஒதுக்காம நேரடியா, 'அமைதி'க்கும், 'நல்லிணக்கத்துக்கும்' பட்ஜெட்டில் நிதி ஒதுக்கிடுங்க!

+ இந்த ஆண்டில் நடந்த மதக் கலவரங்களில் இறந்தவர்களில் 66 பேர் முஸ்லீம்கள்; 41 பேர் இந்துக்கள்.
  **– உள்துறை அமைச்சகம் அறிவிப்பு**

  மதம் இறந்து போயிருந்தால், பாவம் இந்த மனிதர்கள் உயிருடன் இருந்திருப்பார்கள்.

+ எனது மனைவிக்குப் பயந்து புகை பிடிக்கும் பழக்கத்தை 6 ஆண்டுகளாக நிறுத்தி விட்டேன். **– ஒபாமா**

  திருமணம் நடந்த காலத்திலேயே இந்த 'பயம்' வந்திருக்கலாமே, சார்?

+ செப்.28, 'உலக வெறி நாய்க்கடி தினம்', சென்னை அரசு மருத்துவமனையில் விழிப்புணர்வு கண்காட்சி நடந்தது.
  **– செய்தி**

  வெறி நாய்க்கடியை பிறகு பார்க்கலாம். முதலில் இந்த கொசுக்கடிக்கு ஏதாவது உலக விழிப்புணர்வு நடத்துங்கள்! இந்த கொசுக்கடியை தாங்க முடியலே நாராயணா!

+ குடும்ப அமைப்பின் அச்சாணியாக இருப்பதுதான் திருமணம். எனவே திருமணம் இரண்டு நபர்களின் தனிப்பட்ட பிரச்சினை அல்ல.
  **– மருத்துவர் இராமதாசு**

  நியாயம் தான்! திருமணம் செய்து கொள்ளும் இரண்டு நபர்களுமே குடும்பம் நடத்தத்தான் விரும்புறாங்க! அந்த அச்சாணிய நீங்க ஏன் கழட்டிவிட துடிக்குறீங்க, டாக்டர்?

+ தேர்தலில் போட்டியிட குடும்பத்தில் ஒருவருக்கு மட்டுமே வாய்ப்பு தர வேண்டும்.
  **– உயர்நீதிமன்றத்தில் வழக்கு**

  இதெல்லாம் நியாயமில்லை. இந்த தமிழ்ச் சமூகமே தனது குடும்பமாகக் கருதுவோர், என்ன செய்வதாம்?

+ சாமியார்கள், பாலியல் குற்றங்கள் செய்வதைக் கண்டித்து உ.பி.யில் ஒரு சாமியார், தனது ஆண் உறுப்பை வெட்டி எறிந்தார். **– செய்தி**

  இப்படியும் ஒரு 'நேர்த்திக் கடன்' இருக்குதோ, 'சாமி'!

+ தேர்தலில் எந்த வேட்பாளருக்கும் வாக்களிக்க விரும்பவில்லையானால் வாக்குப் பதிவு எந்திரத்தில் எதிர்ப்பு ஓட்டை பதிவு செய்ய தனி 'பட்டன்' அமைக்க வேண்டும்.
  **– உச்சநீதிமன்றத் தீர்ப்பு**

  வாக்காளர்களுக்கு அமோக வெற்றி!

# மேட்டூரில் வாகன பேரணி; பறை முழக்கம்




பெரியாரின் 135 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சேலம் மேற்கு மாவட்டத்தின் சார்பாக இரு சக்கர வாகன பேரணி மற்றும் கொடியேற்று விழா நிகழ்வுகள் நடைபெற்றன. காலை 10 மணிக்கு குஞ் சாண்டியூரிலுள்ள சமத்துவ புரத்தில் பெரியார் சிலைக்கு மண்டல செயலாளர் அ.சக்திவேல் மாலை அணிவித்தார். மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் பறைமுழக்கத்துடன் பேரணி ஆரம்பமானது. ஜஸ்டின்ராஜ் தொடக்கவுரையாற்றினார். சமத்துவபுரத்திலிருந்து இரு சக்கர வாகன பேரணி மல்லிகுந்தத்தை நோக்கிச் சென்றது. மல்லிகுந்தத்தில் தம்புசாமி கழகக் கொடியேற்றி இலவச வேட்டி சேலைகளை வழங்கினார். தோழர்கள் அனைவருக்கும் சிறப்பான காலை உணவை மல்லிகுந்தம் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். மேச்சேரி பேருந்து நிலையத்தில் சூரி கொடியை ஏற்றி வைத்தார். கே.ஆர்.வி. ஸ்பின்னிங் மில்லில் அருள், நங்கவள்ளியில் இந்திரா, பனங்காட்டூரில் செந்தில் கழகக் கொடிகளை ஏற்றினர். குஞ்சாண்டியூரில் தியாகி திலீபன் வாகன நிறுத்தக உரிமையாளர் அருள் அனைவருக்கும் கேக் வழங்கினார்.

ஆர்.சி. பிளாஸ்டிக் பகுதியில் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராசு, இராமன் நகரில் மனோகரன், சாம்பள்ளியில் இரா.முத்துக்குமார், ஆர்.எஸ். பகுதியில் பொன்.முரளிதரன், என்.எஸ்.கே. நகரில் சுகுமார், தேசாய் நகரில் நாகராஜன், தங்கமாபுரிபட்டிணத்தில் இராமச்சந்திரன், சேலம் கேம்ப் பேருந்து நிறுத்தத்தில் அருள்செல்வம், ஹாஸ்டலில் நாகராஜன், காந்தி நகரில் சந்தோஷ், காவேரி கிராசில் சுந்தரம், மாதையன்குட்டையில் மா.பழனிசாமி, பெரியார் தெருவில் வேணுகோபால், புதுக்காலனியில் ஆனந்தன், தூக்கனாம்பட்டியில் பிரவீன்குமார், காவேரி நகரில் ஆசைத் தம்பி, பழைய மார்க்கெட்டில் ரங்கநாதன், நேரு நகரில் செ.மார்ட்டின், வீரபாண்டிய கட்டபொம்மன் நகரில் கதிரேசன், பாரதி நகரில் ஓட்டுநர் பாலு, திலீபன் நகரில் பூவழகன், பொன்னகரில் அ.அண்ணாதுரை, ஆஸ்பத்திரி காலனியில் சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார், ஒர்க்ஷாப் கார்னரில் அ.சுரேசுகுமார், சின்னபபார்க்கில் மு.கீதா, குமரன் நகரில் மேட்டூர் நகர செயலாளர் சு.சம்பத்குமார், பேருந்து நிலையத்தில் தா.செ. பழனிச்சாமி, பெரியார் படிப்பகத்தில் மேட்டூர் நகரத் தலைவர் பாஸ்கர் ஆகியோர் கொடியேற்றினர்.

தோழர்கள் அனைவருக்கும் மதிய உணவை வினோத் மருத்துவமனையில் மருத்துவர் ப. வீரமணி வழங்கினார். அனைத்துப் பகுதிகளிலும் தோழர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பொது மக்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. பொது மக்களிடம் பெரியாரின் சாதனை, சிந்தனைகளை விளக்கிடும் 2000 துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. அனைத்து பகுதிகளிலும் மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரின் பறைமுழக்கம் முழங்கப்பட்டது. இரவு 7 மணிக்கு குமரன் நகர் பகுதியில் மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடந்தது.
**செய்தி : சி. கோவிந்தராசு**

# நீங்க செய்வது தப்புங்க தமிழரே!

சொன்னா கேளுங்க
சுயமரி யாதை வேணுங்க – பெரியார்
சொன்னதையுங் கொஞ்சம்
சிந்திச்சிதான் பாருங்க! தமிழரே....

நீங்க செய்த தெய்வத்துக்கு
நீங்க பூசை செய்யத் தடுப்பவ னாருங்க? – கொஞ்சம்
நீங்க நெனைச்சிப் பாருங்க – தடுப்பாணை
நீங்களே உங்க வீட்டுக் கழைப்பது தப்புங்க!

பள்ளுப் பறைய னென்றாக்கிப்
பிறப்பிலே ஊனத்தை செய்தவ னாருங்க? – கொஞ்சம்
உண்மை உணர்ந்திடப் பாருங்க – அந்த
உலுத்தனை நீங்களே சாமிஎன் றழைப்பது தப்புங்க!

ஆரிய வேதத்தை மதமென்றே
அருந்தமிழ் நெறியைக் கெடுத்தவ னாருங்க? – கொஞ்சம்
ஆர யோசித்துப் பாருங்க – ஆரிய
அயோக் கியனை விட்டு வைப்பதே தப்புங்க!

எங்கிருந்தோ வந்தே நம்மிடம்
இரந்து தின்று கிடந்தவ னாருங்க? – கொஞ்சம்
நீங்களே எண்ணிப் பாருங்க – அந்த
நன்றி கேடனைக் கும்பிட்டுக் கூனுவது தப்புங்க!

தமிழையும் மண்ணையும் கெடுத்தும்
தானே மேலோன் என்பவ னாருங்க? – கொஞ்சம்
சுரணையோ டெண்ணிப் பாருங்க – பார்ப்பான்
சூழ்ச்சிக்கு ஆட்பட்டு அடிமை யாவது தப்புங்க!

உலகத் தமிழருக் கெதிலுமே
துன்பம் நேர்ந்திடக் காரணம் யாருங்க? – கொஞ்சம்
உளமாறச் சிந்திச்சிப் பாருங்க – பார்ப்பானை
உங்களை ஆள விட்டது உங்களின் தப்புங்க!

**– அற்புதன்**

## மோடி கூட்டத்துக்காக 10000 பர்தா

மத்தியப் பிரதேசம், போபாலில் நடைபெறும் நரேந்திர மோடியின் பொதுக் கூட்டத்துக்காக முஸ்லீம் பெண்கள் அணியும் 10,000 பர்தாக்கள் தைக்கப்பட்டுள்ளன என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் திக்விஜய் சிங் தெரிவித்தார்.

"பர்தாக்களை தைத்த டெய்லர் ரூ.44.60 லட்சத்துக்கு ரசீது கொடுத்துள்ளார். இதில் ரூ.42 லட்சத்தை ரியல் எஸ்டேட் நிறுவனம் செலுத்தியுள்ளது" என்றார்.

டெய்லர் அளித்த கட்டண ரசீதையும் செய்தியாளர்களிடம் அவர் காண்பித்தார். இதனிடையே காங்கிரசின் குற்றச் சாட்டை மறுத்துள்ளார் மத்தியப் பிரதேச பா.ஜ.க. மூத்த தலைவர் தீபக் விஜய் வர்ஜியா.


"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

## ஜாதி அடையாளமற்ற அமைப்பு திராவிடர் விடுதலைக் கழகம்

# சென்னை கூட்டத்தில் நீலவேந்தன் நிகழ்த்திய எழுச்சியுரை

***பெரியாருக்கும் அம்பேத்கருக்கும் மக்கள் விழா எடுக்கிறார்கள். ஆனால் காந்திக்கும் ராஜாஜிக்கும் அரசுகள் தான் விழா எடுக்க வேண்டியிருக்கிறது என்று கூறிய தோழர் நீலவேந்தன், திராவிடர் விடுதலைக் கழகம் ஜாதி அடையாளமற்ற அமைப்பாக செயல்படுவதைப் பாராட்டினார்.***

***செப்.17 அன்று மந்தைவெளி சந்தைப் பகுதியில் கழகம் நடத்திய பெரியார் பிறந்த நாள் விழாவில், வீரமரணமடைந்த தோழர் நீலவேந்தன் ஆற்றிய உரை:***



மனித குலத்தை பிரித்த மதத்தை அழிக்கப் பிறந்த வீரர், மனுதர்ம தத்துவத்தில் நெருப்பு வைத்த சூரர், வர்ண ஜாதி நெறி திரை கிழித்த மேதை, வரலாறு நமக்கு அளித்த புரட்சிக்கானப் பாதை புரட்சியாளர் அம்பேத்கரையும், தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனை சுற்றும் சுயநல பூமியில், தன்னைக் கூட சுத்தம் செய்யாமல் பூமியை சுத்தம் செய்ய புறப்பட்ட ஈரோட்டுக் கிழவன் தந்தை பெரியாரையும், உள்ளே கனன்றுகொண்டிருக்கிற சூடான பூமியின் குளிர்ச்சியான மேலோட்டில் கடைசி இரண்டு மனிதர்கள் வாழுகிற வரை அவர்களுக்கிடையிலான சமூக, அரசியல், பொருளாதார உறவைத் துல்லியமாக வகுத்தளித்த மனிதகுல பேராசான் காரல் மார்க்ஸையும் நினைவு கூர்ந்து.

மிகுந்த எழுச்சியோடு நடைபெற்று கொண்டிருக்கிற பெரியார் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தின் தலைவர் தோழர் பூர்ணிமா உள்ளிட்ட அத்தனை பேருக்கும் ஆதித் தமிழர் பேரவையின் சார்பில் நெஞ்சார்ந்த வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன். பெரும் மரியாதைக்கு உரிய சொந்தங்களே ! பொதுக்கூட்டத்தில் சில செய்திகளை சொல்வதற்கு முன்பாக, திராவிடர் விடுதலைக் கழகத்தைப் பற்றி நான் பல்வேறு மேடைகளில் சொல்லும் செய்திகளை சொல்லி துவங்க ஆசைப்படுகிறேன். பொதுவாக இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால், இரண்டு பேர் சந்தித்து கொண்டால் அவருடைய பெயரை ஊரை தெரிந்து கொண்டதற்குப் பிறகு, அவரைப் பற்றி உடனடியாக தெரிந்துகொள்ள வேண்டிய செய்தியாக அவருடைய ஜாதி இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். நம்மோடு உறவாடுகிற - நம்மோடு பேருந்தில் பயணிக்கிற - நம்மோடு பேசுகிற - பழகுகிற - தேநீர் குடிப்பவராக இருந்தால் கூட அவர் என்ன ஜாதியாக இருக்கும் என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள்.

முன்பெல்லாம் ஒருவருடைய ஜாதியை தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், அவரின் அப்பா பெயரைக் கேட்பார்கள்; தாத்தாப் பெயரைக் கேட்பார்கள்; வசிக்கும் தெருவின் பெயரைக் கேட்பார்கள், ஆக மொத்தத்தில் ஜாதியை கண்டுபிடித்துவிடுவார்கள். ஆனால் இன்றைய நிலைமை அவ்வளவு கடினமாக இல்லை; ஒருவரின் பெயரை தெரிந்து கொண்டவுடன், அவர் பணியாற்றும் இயக்கத்தின் பெயரை கேட்டாலே போதும்; அவருடைய ஜாதி தெரிந்துவிடும். ஆனால் கெடு வாய்ப்பு என்னவென்றால், திராவிடர் விடுதலைக் கழகத்தில் பணியாற்றுகிறேன் என்று சொன்னால் மட்டும் அவர் எந்த ஜாதியை சார்ந்தவர் என்றே கண்டுபிடிக்க முடிவதில்லை. அவ்வாறான ஒரு ஜாதி அடையாளமில்லாத அமைப்பாக இன்றைக்கு திராவிடர் விடுதலைக் கழகம் விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்த மகத்தான திராவிடர் விடுதலைக் கழகத்தின் மேடையிலே புரட்சியாளர் பெரியாரின் பிறந்த நாளையொட்டி நாம் பேசுகிற போது, அண்ணன் கொளத்தூர் மணி அவர்களும், எழுத்தாளர் மதிவாணன் அவர்களும் பல மேடைகளில் இந்த செய்தியை சொல்லியிருக்கிறார்கள். அண்ணன் தலித் சுப்பையா அவர்கள் கூட தன்னுடைய இசை நிகழ்ச்சியின் நடுவிலே மூதறிஞர் இராஜாஜி பற்றி குறிப்பிட்டார்; இராஜாஜி போலவே இன்னொரு தலைவர் இருந்தார், அவர் காந்தி. காந்திக்கும், இராஜாஜிக்குமெல்லாம் கருத்தில் பெரிய வேறுபாடு இருக்காது; அவர்களிருவரும் ஒத்த கருத்துள்ள தலைவர்கள். காந்தியும், இராஜாஜியும் ஒருபுறம் இருக்க, அவர்களுக்கு நேர் எதிரான தலைவர்களாக பெரியாரும், அம்பேத்கரும் இருந்தார்கள். ஆனால் நீங்கள் நினைத்துப் பாருங்கள், பெரியாரின் பிறந்த நாளை மக்களாகிய நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளை மக்கள் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால் காந்தியின் பிறந்த நாளையும், இராஜாஜியின் பிறந்த நாளையும் மக்கள் என்றுமே கொண்டாடுவதில்லை; அரசாங்கங்கள் மட்டும் கொண்டாடிக் கொண்டிருக்கின்றன. இன்னும் ஒரு படி மேலே போய் சொல்லவேண்டுமானால் காந்தியும் இராஜாஜியும் பெரும்பாலான மக்கள் நம்புகிற கடவுள் நம்பிக்கைக்கு ஆதரவாக இருந்தவர்கள் தான். அம்பேத்கரும் பெரியாரும் பெருவாரியான மக்கள் நம்புகிற கடவுளை இல்லை என்று மறுத்தவர்கள். காந்தியும் இராஜாஜியும் மக்களின் நம்பிக்கைக்கு வேண்டுமானால் ஆதரவாக இருந்திருக்கலாம், மக்களின் நலனுக்கு எதிராக இருந்தவர்கள். பெரியாரும் அம்பேத்கரும் மக்களின் நம்பிக்கைக்கு எதிராக இருந்திருக்கலாம், ஆனால் மக்களின் நலனுக்காக இருந்தவர்கள் என்பதை மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதனால் தான் பெரியாரும் அம்பேத்கரும் இன்று கொண்டாடப் படுகிறார்கள்.

பெரியாரையும் அம்பேத்கரையும் கொண்டாடுவது என்பதிலே நமக்குள் சில வேறுபாடுகள் இருக்கின்றது. அண்ணன் தலித் சுப்பையா அவர்கள் சொன்னதைப் போல நெற்றியிலே பட்டையடித்துக் கொண்டுபோய் பெரியார் சிலைக்கு மாலைப் போடுவது முளைப்பாரி எடுத்துக்கொண்டு போய் அம்பேத்கர் சிலைக்கு பாலாபிஷேகம் செய்வது போன்ற நிகழ்வுகளை விட மோசமாக யாராலும் பெரியாரையும் அம்பேத்கரையும் இழிவுபடுத்திவிட முடியாது. அம்பேத்கரை பொருத்தவரையில் மூன்று விதங்களில் இன்றளவும் அவமதிக்கப்படுகிறார். ஒன்று, தன் காலம் முழுவதும் எந்த இந்துத்துவ கருத்தை எதிர்த்துப் போராடினாரோ புரட்சியாளர் அம்பேத்கர், அந்த இந்துத்துவக் கருத்தைத் தாங்கிப் பிடிக்கிற சங்பரிவார கும்பல் போடுகின்ற மலர் மாலைகளாலே புரட்சியாளர் அம்பேத்கர் அவமதிக்கப்படுகிறார். அதைப் போலவே இந்தியாவின் முதல் சட்டத் துறை அமைச்சராக இருந்தவர் அம்பேத்கர்; தனது அமைச்சர் பதவியை தூக்கியெறிகிற போது, இங்குள்ள அத்துனை ஜாதிப் பெண்களுக்கும் சொத்துரிமை வேண்டும் - கல்யாணம் செய்து கொள்வதிலே உரிமை வேண்டும் - கல்யாணம் செய்ததை இரத்து செய்துகொள்கின்ற உரிமை வேண்டும் - பிற்படுத்தப்பட்டவர்கள் யார் என்பதை கண்டுபிடித்து, அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யக்கூடிய ஒரு ஆணையம் வேண்டும் என்பதற்காக தனது அமைச்சர் பொறுப்பைத் தூக்கியெறிந்த அம்பேத்கர் பிற்படுத்தப்பட்டவர்களின் செருப்பு மாலைகளால் அவமதிக்கப்படுகிறார். இந்துத்துவக் கருத்தியல் தான் இந்த மக்களை ஒடுக்கப்பட்டவனாக - தலித்தாக பள்ளனாக - பறையனாக - சக்கிலியனாக வைத்திருக்கிறது என்று காலம் முழுவதும் தான் தேர்ந்தெடுத்தக் கருத்துகளால் சொன்ன அம்பேத்கரை, தலித் மக்கள் முளைப்பாரி எடுத்து பாலாபிஷேகம் செய்து கொண்டாடுகிறார்கள் என்று சொன்னால், அதுவும் அம்பேத்கரை அவமதிக்கும் செயல்தான். ஆக இன்றைக்கு பெரியாரை, அம்பேத்கரை ஆகச் சரியாக புரிந்து கொண்டு அவர்களுடைய கனவுகளை நனவாக்க வேண்டும் என்று நாம் சிறிதேனும் ஆசைப்படுவோமேயானால், அந்தப் போராட்டங்கள் அனைத்தும் ஜாதிய அமைப்பைத் தகர்க்கின்ற போராட்டமாக, ஜாதிய வாழ்வியலை பின்பற்றுவதைத் தடுக்கின்ற போராட்டமாக இருக்கவேண்டும். எனவே தான் திராவிடர் விடுதலைக் கழகம் கடந்த ஆண்டிலே ஜாதிய வாழ்வியல் எதிர்ப்பு பரப்புரைப் பயணத்தை மேற்கொண்டார்கள்.


இன்றைக்கும் உணவிலே ஜாதி இருக்கின்றது; உடையிலே ஜாதி இருக்கின்றது; இசையிலே ஜாதி இருக்கின்றது; நடனத்திலே ஜாதி இருக்கின்றது; சுடுகாட்டிலும் கூட ஜாதி இருக்கின்றது. ஜாதிய வாழ்வியலை கடைபிடிப்பதை வெட்கப்படுகிற ஒன்றாக மாற வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் பரப்புரை செய்தது. இன்னும் சொல்லப் போனால், ஜாதியை கடைபிடிப்பது என்பது ஒரு தலைமுறை தான். இன்றைக்கு பிறந்து ஒரு வயதான ஒரு தலித் குழந்தையை விட்டால் பிற்படுத்தப்பட்ட தெருவுக்குள் ஓடுகிறது. ஒரு பிற்படுத்தப்பட்ட குழந்தை தலித் வீட்டில் சமைக்கும் உணவை சாப்பிடுகிறது. ஆனால் அதே குழந்தை வளர்ந்து பெரியவனாக ஆனவுடன் கல்யாணம் செய்து கொண்டவுடன் ஒரு தலித் வீட்டு திருமணத்திற்குப் போனாலும் அங்கு சமைக்கும் உணவை சாப்பிடாமல், கடையில் குளிர்பானத்தை வாங்கிக் குடித்துவிட்டு வருகிற போக்கு நீடிக்கிறது. ஆக ஒரு ஒன்றரை வயது குழந்தையின் மூளையில் இல்லாத ஜாதி, முப்பது வயது இளைஞனுக்குள் வருகிறது என்று சொன்னால், ஒரு முப்பது ஆண்டுகள் ஜாதியை மறைத்தாலே ஜாதி ஒழிந்துவிடும். ஆனால் முப்பது நூற்றாண்டுகளாக இந்த ஜாதி அமைப்பு நீடித்து வந்து, இன்றைக்கு வரை இருந்து கொண்டிருக்கிறது.

இங்கு இருக்கும் தமிழ்த் திரைப்படங்களெல்லாம் நமக்கு என்ன சொல்லிக் கொடுத்திருக்கிறது? எல்லா பாசத்தையும் விட, தங்கையின் மீதான பாசத்தைத் தான் பெரிய பாசமாக சொல்லிக்கொடுத்தார்கள். ஆனால் அந்த பாசத்தையே இப்போது கேள்விக் குள்ளாக்கியுள்ளார்கள். நெல்லையில் அபிராமி என்கின்ற ஒரு பெண், முருகன் என்ற ஒரு இளைஞனை திருமணம் செய்து கொண்டதற்காக - அபிராமி பிற்படுத்தப்பட்ட ஜாதியில் பிறந்தவர்

(4 ஆம் பக்கம்)

## தோழர் நீலவேந்தன் எழுதிய கடிதம்

**'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டின் தீவிரவாசகரான நீலவேந்தன் அவ்வப்போது கடிதம் எழுதி கருத்துகளைத் தெரிவிப்பவர் தோழர் நீலவந்தன். கடைசியாக செப்டம்பர் 10 ஆம் தேதி அனுப்பிய கடிதம்:**



பெருமதிப்புக்குரிய ஆசிரியருக்கு,

அன்பான வணக்கங்கள். செப்.5, 2013-ம் நாளிட்ட முழக்கம் இதழ் கண்டேன். நாட்டின் பொருளாதார மீட்புக்கு முடங்கிக் கிடக்கும் கோயில் நகைகளைப் பயன்படுத்து என்ற முழக்கமும், மேற்கண்ட கோரிக்கைக்காக, மாவட்ட தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்த கழகம் எடுத்த முடிவும் அரசியல் துணிச்சலின் உச்சம். மூட நம்பிக்கை ஒழிப்பு பேரணிக்கு அனுமதி வழங்கியதன் வாயிலாக, அரசியல் சாசனத்தின் 19(1)(ஏ), 51(ஏ)(எச்) பிரிவுகளை உத்தரவாதப்படுத்தி, அனைத்து பகுத்தறிவு இயக்கங்களுக்கும் சேர்த்து உரிமை பெற்றுத் தந்த கழகத்துக்கும், கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, அருண் ஆகியோருக்கும் நன்றிகள் பல.

***- நீலவேந்தன், ஆதித் தமிழர் பேரவை.***

DATE OF PUBLICATION 01.10.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

## இரு சக்கர வாகனப் பேரணிகள்; கழகக் கொடியேற்றங்கள்!

# பெரியார் பிறந்த நாள் விழா எழுச்சி!



ஈரோட்டில்

பெரியாரின் 135 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, ஈரோட்டில் 17 இடங்களில் கொடியேற்று விழா மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. 22.9.2013 அன்று காலை 9.30 மணிக்கு ஈரோடு பன்னீர் செல்வம் பூங்காவிலுள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு கொடியேற்றப்பட்டது. கழகப் பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் செல்லப்பன், மாவட்டச் செயலாளர் சண்முகப்பிரியன் முன்னிலை வகித்தனர். மாவட்டப் பொருளாளர் சுகுணா, ஈரோடு நகரத் தலைவர் திருமுருகன், செயலாளர் சிவானந்தம், மாவட்ட அமைப்பாளர்கள் செல்வராசு, குமார், அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவக்குமார், அறிவியல் மன்ற மாவட்டச் செயலாளர் மோகன்ராஜ், லோகநாதபுரம் மோகன், கிருஷ்ணன், வெங்கட், கலைமதி, பள்ளிபாளையம் ரமேஷ், புகைப்படக் கலைஞர் எழில் ஆகியோர் உள்பட 74 தோழர்கள் இந்நிகழ்வில் பங்குக் கொண்டனர். ஈரோடு மண்டலச் செயலாளர் இராம. இளங்கோவன், சென்னை வழக்கறிஞர் திருமூர்த்தி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.

பெரியார் சிலையிலிருந்து தோழர்கள் ஊர்வலமாக இரு சக்கர வாகனங்களில் அணிவகுத்துச் சென்றனர். அணி வகுப்பின் முன்பாக இரண்டு இரு சக்கர வாகனங்களில் கழகக் கொடியினை ஏந்திய தோழர்கள் எழுச்சி முழக்கமிட்டுச் சென்றனர். அதற்கு; பின்னால் சென்னிமலை வெப்பிலியில் உள்ள கழகத் தோழர் வேலு தலைமையில் வந்த புதிய தோழர்கள் சுமார் 18 பேர் பறைமுழக்கத்துடன் வேனில் வந்தனர். இவர்கள் அனைவரும் கல்லூரி மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பிறகு ஏறத்தாழ 25 இரு சக்கர வாகனங்களில் தோழர்கள் ஊர்வலமாக அணிவகுத்து வந்தனர். பெருமாள் மலையில் கொடியேற்றிய கழகத் தோழர்களுக்கு காலை உணவை மாவட்ட அமைப்பாளர் மரவபாளையம் குமார் ஏற்பாடு செய்திருந்தார். கழக ஆதரவாளர் தங்கராசு தேநீர் வழங்கினார். மதியம் வெள்ளோடு இலட்சுமிபுரம் பகுதியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மூர்த்தியின் இல்லத்தில் தோழர்கள் கருங்கவுண்டன் வலசு ரமேசு, அழகன், வடுகபாளையம் அஜீத்குமார், சென்னிமலை செல்வராசு ஆகியோர் சிறப்பான மதிய அசைவ உணவை ஏற்பாடு செய்திருந்தனர். ஊர்வலம் வடுகபாளையம், கே.ஜி.வலசு வழியாகச் சென்று சென்னிமலையில் நிறைவடைந்தது. மாநிலப் பொருளாளர் இரத்தினசாமி, அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவக்குமார் ஆகியோர் உரையாற்றினர்.

ஈரோடு ரங்கம்பாளையம் பகுதியிலுள்ள கலைக் கல்லூரி மாணவர் விடுதி முன்பு கழகக் கொடியேற்றப்பட்டது. அப்பகுதியில் ஏற்கனவே நமது இயக்கம் சார்பாக ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளால் ஈர்க்கப்பட்டிருந்த அந்தியூர் செந்தில்குமார் உள்பட கல்லூரி மாணவர்கள் 7 பேர் தாங்களும் பயணத்தில் வருவதாகக் கூறி இறுதி வரை பங்கேற்றனர்.

ஒவ்வொரு பகுதியிலும் கொடியேற்றிய தோழர்கள் : பெரியார் சிலை - ஈரோடு நகரத் தலைவர் முருகன், பெருமாள்மலை - பெருமாள்மலை கிளைத் தலைவர் ராசண்ணா, மரவபாளையம் - ரமேஷ்குமார், கொங்கம்பாளையம் - சித்தோடு ஒன்றியத் தலைவர் சத்தியராசு, சத்யா நகர் - விஜயகுமார், பெரியார் நகர் - அறிவியல் மன்றம் மோகன்ராஜ், காளைமாட்டு சிலை - அந்தியூர் செந்தில்குமார், லோகநாதபுரம் பெரியார் படத் திறப்பு - வழக்கறிஞர் திருமூர்த்தி, கொடியேற்றம் - மண்டலச் செயலாளர் இராம. இளங்கோவன், நாடார்மேடு - மாவட்டச் செயலாளர் சண்முகப் பிரியன், சூரம்பட்டி 4 சாலை - மாவட்டத் தலைவர் செல்லப்பன், சூரம்பட்டி வலசு - ரமேஷ் குமார், அரசு மருத்துவமனை - தமிழ்நாடு மாணவர் கழகம் இசைக் கதிர், ரங்கம்பாளையம் - தோழியர் கலை, வடுகபாளையம் - கவுன்சிலர் பழனிச்சாமி, கருங்கவுண்டன் வலசு - சென்னிமலை ஒன்றிய தலைவர் ரமேஷ் குமார், சென்னிமலை - மாவட்ட அமைப்பாளர் செல்வராசு.

### கொளத்தூரில்

பெரியாரின் 135 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு செப்.17, காலை 8.30 மணி முதல் மாலை வரை கொளத்தூர் ஒன்றியம் முழுவதும் சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் கு.சூரியகுமார் தலைமையில் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ



மாணவியருக்கு இனிப்புகள் வழங்கி, பெரியார் பிறந்த நாள் விழாவை கொண்டாடினர். தார் காடு ஊராட்சி ஒன்றிய நடு நிலைப் பள்ளியில் மாணவ மாணவியருக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை தோழர்கள் தர்மலிங்கம், குமரேசன், மணி, பிரபாகரன் ஆகியோர் செய்திருந்தனர். கோவிந்தராசு முயற்சியில் கொளத்தூர் திருவள்ளுவர் நகரில் கொடிக்கம்பம் அமைத்து கழகக் கொடி யேற்றப்பட்டது. 35 இரு சக்கர வாகனங்களில் தோழர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.



கழகக் கொடிகள் கீழ்க்கண்ட இடங்களில் ஏற்றப்பட்டன. கொளத்தூர் சோதனைச் சாவடி - மணி, பேருந்து நிலையம் - தர்மலிங்கம், பழைய பேருந்து நிலையம் - சி.எஸ். சுப்பிரமணியம், தெற்கு ராஜ வீதி - செல்வம், வாழ்குறிச்சி - பெரியசாமி, வடக்குராஜவீதி - நல்லதம்பி, திருவள்ளுவர் நகர் - கோவிந்தராஜ், உக்கம்பருத்திக் காடு - சித்ரா, தார்காடு - இராமசாமி ஆசிரியர், தார் காடு பேருந்து நிறுத்தம் - சுப்பிரமணி, லக்கம்பட்டி - மாதவி, மேட்டுக் கொட்டாய் - சுதா, பெரியதண்டா - சக்திகுமார், நீதிபுரம் - விஜயகுமார்.

---


(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதற்காக, முருகன் தாழ்த்தப்பட்ட ஜாதியில் பிறந்தவர் என்பதற்காக - அபிராமியை அழைத்து வந்து கொலை செய்திருக்கிறார்கள்; இரண்டு அண்ணன்கள் இன்று நெல்லை சிறையில் இருக்கிறார்கள் என்றால் இந்த இருபத்தியொன்றாம் நூற்றாண்டு வரை ஜாதி தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. எனவே இப்படிபட்ட ஜாதி அமைப்பை தகர்க்கும் வேலைகளை செய்வதுதான் பெரியாருக்கும் அம்பேத்கருக்கும் நாம் செலுத்தும் வீரவணக்கமாக இருக்கும் என்ற அடிப்படையில் தான் திராவிடர் விடுதலைக் கழகம் கடந்த மாதத்திலே சுயமரியாதை சமதர்மப் பரப்புரையை மேற் கொண்டார்கள்.

அம்பேத்கரிஸ்ட் என்று சொல்லிக்கொள்ளும் ஒருவர், தலித் விடுதலையைப் பற்றி பேசுகிற ஒருவர், தீண்டாமை ஒழிப்பைப் பற்றி பேசுகிற ஒருவர், பகுத்தறிவையோ, தனிஉடமைக் கொடுமைகளையோ பேச மறுக்கிறார். அதே போல பொதுவுடமைப் புரட்சியாளர்கள் கடவுள் மறுப்பையும், தலித் விடுதலையையும் பேச மறுக்கிறார்கள். ஆனால் திராவிடர் விடுதலைக் கழகம் ஜாதி ஒழிப்பையும், தனிஉடமை கொடுமைகளையும் எதிர்த்து சுய மரியாதை சமதர்மப் பரப்புரை பயணம் மேற்கொள் கிறது என்று சொன்னால் கருப்பையும், நீலத்தையும், சிகப்பையும் இணைக்கிற வேலையாக திராவிடர் விடுதலைக் கழகத்தின் மேடைகள் இருக்கிறது என்பதை நாம் பெருமையோடு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது. ஆக இன்றைக்கு வரைக்கும் நாம் அறிந்தோ, அறியாமலோ - தெரிந்தோ, தெரியாமலோ பின்பற்றி வருகின்ற ஜாதிய வாழ்வியல் சிந்தனைகளை நம்முடைய மூளையில் இருந்து அகற்றுகின்ற போராட்டங்களை இந்த ஜாதி அமைப்பைக் காப்பாற்றுகின்ற அகமண முறைகளை ஒழித்து, ஜாதி மறுப்புத் திருமணங்களை நடத்துவது தான் மிகச்சரியான ஜாதி ஒழிப்புப் போராட்டமாக இருக்கும் என்ற அடிப்படையிலே திராவிடர் விடுதலைக் கழகம் எடுக்கும் அனைத்து போராட்டங்களிலும் இரட்டைக்குழல் துப்பாக்கிப் போல ஆதித் தமிழர் பேரவை துணைநிற்கும் என்று கூறி விடைபெறுகிறேன்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 3rd October 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | அக்டோபர் 10, 2013 | புரட்சி 12 | முழக்கம் 39 | விலை: ரூ.3.00

# தமிழருவி மணியன் கட்டுரைக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மறுப்பு

*தமிழ்நாட்டில் பா.ஜ.க., தே.மு.தி.க., ம.தி.மு.க. கூட்டணி உருவாக காய் நகர்த்தி வரும் காந்திய இயக்கத் தலைவர் தமிழருவி மணியன், மோடியை நியாயப்படுத்தி, ‘ஜூனியர் விகடன்’ ஏட்டில் எழுதிய கட்டுரைக்கு மறுப்புரையாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘ஜீ.வி.’க்கு எழுதிய மறுப்பு இது. 9.10.2013 அன்று ‘ஜூனியர் விகடன்’ இதழில் ‘கதர் ஆடையில் காவிக் கறை எதற்கு?’ என்ற தலைப்பில் அந்த மறுப்பு வெளியிடப்பட்டுள்ளது. சிறு சிறு மாற்றங்களுடன் வெளியிடப்பட்டுள்ள அக்கட்டுரையின் முழுமையான வடிவத்தை ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பதிவு செய்கிறது.*

இந்தியாவில் அடுத்து அமையப் போகும் ஆட்சி - அது எந்த ஆட்சியாக இருந்தாலும் மக்கள் பிரச்சினைகளை எல்லாம் தீர்த்துவிடப் போகிறது; ஊழலற்ற, நேர்மையான ஆட்சி ஒன்று மலரப் போகிறது என்கிற மாயைகளில் மூழ்கிட நாம் தயாராக இல்லை. தேர்தல் வழியாக மட்டுமே சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை மாற்றி அமைத்துவிட முடியும் என்ற நம்பிக்கையும் நமக்கு இல்லை.

ஆனால், “இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடியே வர வேண்டும். அதற்குத் தகுதியானவர் அவர் ஒருவரே” என்ற பிம்பம் திட்டமிட்ட வகையில் கட்டி எழுப்பப்படுகிறது. கார்ப்பரேட் ஊடகங்களும், சமூக வலைத் தளங்களும் இந்தக் கருத்தைப் பரப்புவதில் உற்சாகம் காட்டி நிற்கின்றன. பன்னாட்டு நிறுவனங்களும் பெருமுதலாளிகளும் இதன் பின்னணியில் இருப்பது கண்கூடு. இந்தத் ‘திருப்பணி’யில் நாம் மிகவும் மதிக்கும் தோழர் தமிழருவி மணியனும், தன்னை இணைத்துக் கொள்ள முன்வந்திருப்பது நமக்கு வியப்பையும் வேதனையையும் தருகிறது. சுயநல சந்தர்ப்பவாத, பதவி வெறி அரசியலில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட அவர், மோடியை பிரதமராக்குவதற்குக் கூட்டணி வியூகங்களை வகுத்துத் தந்து கொண்டிருக்கிறார். தமிழகத்தில் ‘புதிய அரசியல் பூத்துக் குலுங்குவதற்கும்’ பா.ஜ.க.வுடனான அணியே அவசியம் என்றும் வலியுறுத்தி இருக்கிறார். யாரோடு யார் கூட்டணி சேர வேண்டும் என்பது பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆனால், நரேந்திர மோடியையும் பா.ஜ.க.வையும் முன்னிறுத்துவதால் உருவாகும் ஆபத்துகளைப் பற்றியே நாம் கவலைப்படுகிறோம்.




முதலில், நரேந்திர மோடி பா.ஜ.க. தேர்வு செய்த பிரதமர் வேட்பாளர் என்பதைவிட, அதன் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.சின் செல்லப் பிள்ளையாகக் களமிறக்கப்பட்டவர் என்பதே உண்மை. காந்தியார் முன் வைத்த ‘தேசியத்தை’, ‘போலி தேசியம்’ என்று ஒதுக்கித் தள்ளிய ஆர்.எஸ்.எஸ். மனிதர்களைப் பிளவுபடுத்தும் மதவாதத்தை - உண்மையான தேசியமாக வரையறுக்கிறது. பெரும்பான்மை மக்களின் சமூகம், மொழி, இனம் மற்றும் வர்க்க அடையாளங்களைப் புறந்தள்ளிவிட்டு, மதப் பெரும்பான்மைவாத அரசியலை முன்னிறுத்தித் தேர்தல் ஆதாயம் அடைய முனைகின்றனர். மதச்சார்பற்ற, ஜனநாயக தேசியத்துக்கு மாற்று - மதவாதத்தை முன்னிறுத்தும் வகுப்புவாத தேசியம் என்போருக்கு ஆதரவாக தமிழருவி மணியன் வாதாடத் துணிவது மிக மிக ஆபத்தானது.

தமிழகத்தில் 15 விழுக்காடு வாக்காளர்கள் மோடியை ப் பிரதமராக்கத் துடித்துக் கொண்டிருப்பதாக மணியன் வரையும் சித்திரம் அடிப்படை ஆதாரமற்றது. தமிழகத் தேர்தல் களத்தில் கடைசியாக நடந்த 2011 தேர்தலில்கூட பா.ஜ.க.வின் வாக்கு வங்கி 2.2 விழுக்காட்டைத் தாண்டவில்லை. அது 15 விழுக்காடாகத் திடீரென ஊதிப் பெருத்து நிற்கிறது என்பதற்கு எந்தச் சான்றுமில்லை.

“ராமன் கோவில் விவகாரத்தை வளர்த்தெடுக்கக்கூடாது, பொது சிவில் சட்டத்தை வலியுறுத்தக் கூடாது, காஷ்மீருக்குத் தனி அந்தஸ்து வழங்கும் 370 ஆவது பிரிவை ரத்து செய்யக் கூடாது” என்று பா.ஜ.க.விடம் நிபந்தனை விதிக்கலாம் என்றும் மணியன் ஆலோசனை வழங்கியிருக்கிறார்.

திருச்சியில் நடந்த இளந்தாமரை மாநாட்டில் பேசிய மோடியே இதற்குப் பதில் கூறி விட்டார். காஷ்மீருக்குத் தனிச் சலுகை வழங்கியதை மட்டுமல்ல, இந்தியாவில் மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டதையேகூட அவர் எதிர்த்திருக்கிறார். இதுவே ஆர்.எஸ்.எஸ்.சின் சித்தாந்தத் தந்தை கோல்வாக்கரின் கருத்து.

இந்த மூன்று விவகாரங்களையும் கையிலெடுக்க மாட்டோம் என்று உறுதிமொழி தந்துதான் 1998-99 ஆம் ஆண்டுகளில் வாஜ்பாய் கூட்டணியை அமைத்தார். அவற்றில் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் பங்கேற்றன. அந்தக் காலகட்டத்தில், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியில் இருந்த தமிழருவி மணியன், மதவாத பா.ஜ.க.வின் உறுதிமொழிகளை ஒருபோதும் நம்ப முடியாது. இந்தியாவின் ஆட்சி அதிகாரம் காவிப் பயங்கரவாதிகளின் கைகளுக்குப் போய்விடக் கூடாது என்று தமிழகம் முழுவதும் சுற்றிச் சுழன்று அனல் பறக்கப் பேசியது நினைவுக்கு வருகிறது. கொடுத்த உறுதிமாழிகளையே நம்புவதற்கு உகந்ததல்ல என்று புறந்தள்ளியவர், இப்போது புதிதாக உறுதிமொழியைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதும், அதை நம்பி மோடியை பிரதமர் பதவியில் அமர்த்த வேண்டும் என்பதும் நாட்டை எங்கே கொண்டு போய்ச் சேர்க்கும்?

அயோத்தியில் பூஜை மட்டுமே செய்வோம் என்று உச்சநீதிமன்றத்தில் உறுதி கூறி அனுமதி பெற்ற பா.ஜ.க.தான், பாபர் மசூதியை இடித்துத் தள்ளியது. மசூதி இடிக்கப்பட்டவுடன் அதை வன்மையாகக் கண்டித்த அத்வானிதான், பிறகு அதை நியாயப்படுத்தினார். குஜராத் இனப் படுகொலையின்போது, மோடி பதவி விலக வேண்டும், ராஜ தர்மத்தைப் பின்பற்ற மோடி தவறிவிட்டார். எந்த முகத்தோடு நான் வெளிநாடு செல்வேன் என்று கண்ணீர் வடித்த வாஜ்பாய்தான், பிறகு மோடி பதவியில் தொடர்வதை அனுமதித்தார். இவர்கள் தருகிற உறுதிமொழிகளை நம்பி ஏற்க முடியுமா என்பதை தமிழருவி மணியன்தான் விளக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் ஆட்சி செய்த தி.மு.க., அ.தி.மு.க. மீது நமக்கும் கடுமையான விமர்சனங்கள் உண்டு. கொள்கை வழி அரசியல் இலட்சியங்களை வளர்த்தெடுக்க முனையாமல், சந்தர்ப்பவாத - தனிமனித ஊழல் நிறைந்த ஆட்சியை நடத்தியவர்கள் என்பதும் உண்மைதான். ஆனாலும், மற்ற மாநிலங்களோடு ஒப்பீட்டு அளவில் ஆராய்ந்தால், சமூக நீதி, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழகம் முன்னிலையில் நிற்கிறது என்பதே உண்மை. தமிழ் மண்ணில் பெரியார் உள்ளிட்ட பல முன்னோடிகள்தான் இதற்கான அடித்தளத்தை உருவாக்கிச் சென்றிருக்கிறார்கள். அதன் காரணமாகவே மக்களிடம் பகையுணர்ச்சியைக் கட்டி எழுப்பிடத் துடிக்கும் மதவாத சக்திகள் தமிழகத்தில் ஆழமாகக் கால்பதிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், தமிழர்களின் உரிமைக்காகப் போராடி வரும் வைகோ போன்ற தலைவர்களையும், இதுவரை, மதவாத அடையாளத்தைத் தனது கட்சிக்குள் நுழைத்திடாத விஜயகாந்த் போன்றவர்களையும் ஆர்.எஸ்.எஸ்.ஸோடு அணி சேர்க்க அழைத்து தமிழகத்தில் காவிக் கூட்டத்தின் ஆதரவுத் தளத்தை அதிகரிக்கச் செய்யும் ஆபத்துக்கு தோழர் மணியன் துணை போகலாமா என்பதே நம் கேள்வி.

பல்வேறு மொழி, இனம், மதம், பண்பாடுகளைக் கொண்ட ஒரு நாட்டின் பிரதமராக இருப்பவர், இந்தத் தனித்துவமான பன்முகத் தன்மையை மதிப்பவராகவும், ஏற்பவராகவும் இருப்பதே அப்பதவிக்குத் தேவையான முதல் தகுதி. வளர்ச்சியைக் கொண்டு வரும் சாதனையாளர் என்பதெல்லாம் இரண்டாம் பட்சமே! ஊடகங்கள் வியந்தோதுவதைப்போல அப்படியொன்றும் குஜராத்தில் மோடி வளர்ச்சியை கொண்டு வந்துவிடவும் இல்லை. உருவான காலத்தில் இருந்தே, தொழில் வளர்ச்சியிலும் விவசாயத்திலும் முன்னணியில் இருந்து வரும் மாநிலம் தான் குஜராத். மோடியின் காலத்திலும் அது தொடர்கிறது என்பது தானே தவிர, புதிதாக எதையும் அவர் சாதித்துவிடவில்லை என்பதை புள்ளி விவரங்களும் ஆய்வுகளும் ஆதாரபூர்வமாக மெய்ப்பித்துள்ளன. (எகனாமிக் அண்டு பொலிடிக்கல் வீக்லி, செப்.28, 2013)

மனிதவள மேம்பாடு, எழுத்தறிவு, ஆண்-பெண் பிறப்பு விகிதம், ஊட்டச் சத்துக் குறைபாடு, தீண்டாமை ஒழிப்பு பழங்குடியினர் முன்னேற்றம், வேலை வாய்ப்பு போன்ற பல்வேறு துறைகளில் பின் தங்கிய மாநிலங்களின் பட்டியலிலேயே குஜராத் இடம் பெற்றிருக்கிறது. மோடிக்குப் பெருமை சேர்க்கவே போலி என்கவுன்டர்கள் நடத்தப்பட்டன. 97 இஸ்லாமியர்கள் உயிரோடு எரிக்கப்பட்ட நரோடா பாட்டியா கொலை வழக்கில் - 28 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றிருக்கும் மாயா கொட்னானிக்கு, அந்த கோரத் தாண்டவத்தை அரங்கேற்றிய பிறகு அமைச்சர் பதவி தந்து அழகு பார்த்தவர்தான் மோடி. அதனால்தான் உலகப் புகழ் பெற்ற பொருளாதார அறிஞர் அமார்த்தியா சென், “மோடி பிரதமராவதை நான் ஆதரிக்க மாட்டேன். 2002 இல் திட்டமிட்ட இனப்படுகொலை கட்டவிழ்த்து விடப்பட்டபோது அவர் அதைத் தடுக்க ஒன்றும் செய்யவில்லை. அவர் ஆட்சியில், பாதுகாப்பான சூழ்நிலையில் வாழ்வதாக சிறுபான்மை மக்கள் உணர மாட்டார்கள்” என்றார். இதை அறியாதவர் அல்ல, தமிழருவி!

காங்கிரஸ் ஆட்சியில் ஊழல் என்றால், கர்நாடகம் உள்ளிட்ட பா.ஜ.க. ஆட்சி

(4 ஆம் பக்கம்)

# வினாக்கள்... விடைகள்...

+ தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் ராஜூவுக்கு மதுரை மாநகராட்சி மரணச் சான்றிதழ் வழங்கியிருக்கிறது. இது குறித்து மேயர், ஆணையரிடம் அமைச்சர் விளக்கம் கேட்டுள்ளார். **– செய்தி**

*விளக்கம் அளிப்பதற்கு முன்பு, மேயரும் ஆணையரும் உயிருடன் இருப்பதற்கான சான்றிதழ்களை கையோடு எடுத்து வரச் சொல்லுங்கள்; கவனம்!*

+ நாட்டிலுள்ள ஏழைகள் நாணயமானவர்கள்; நம்பத் தகுந்தவர்கள். **– ப. சிதம்பரம்**

*ஆகவே நாணயமானவர்களை அதிகரிக்கச் செய்வோம்! அவர்கள் எண்ணிக்கை பெருகுவதற்கு நம்பத் தகுந்த 'பட்ஜெட்' போடுவோம்!*

+ இந்து கோயில்களை உண்மையான பக்தர்களிடம் ஒப்படைக்க வேண்டும். **– இல. கணேசன்**

*"இவர் உண்மையான பக்தர்தான்" என்று எந்தக் கடவுளாவது நற்சான்றிதழ் தர முன்வந்தால் பரிசீலிக்கலாம்.*

+ காந்தியடிகள் சிலைக்கு இலவச மின்சாரம் அளிக்க விதிகளில் இடமில்லை. **– சேலம் மின்சார வாரியம் அறிவிப்பு**

*நியாயம் தானே? காந்திக்கு என்ன ஓட்டா இருக்குது?*

+ எனக்கு இந்தி தெரியாது. ஆனால், திருச்சியில் மோடி பேசிய விதமும் ஆவேசமும் பேச்சில் விஷயம் இருப்பதைக் காட்டியது. **– 'துக்ளக்' சோ பேட்டி**

*தமிழ்நாட்டில் உப்பு சத்தியாகிரகப் போராட்டத்துக்கு ராஜகோபாலாச்சாரி தலைமை ஏற்றார் என்பதற்கு பதிலாக வ.உ.சி. பெயரைக் கூறினார் மோடி. அதனாலென்ன? பேசிய விதமும் ஆவேசமும் தானே முக்கியம்?*

+ முதலில் கட்ட வேண்டியது கழிப்பறை; பிறகு தான் கோயில் என்று பேசிய மோடிக்கு, விசுவ இந்து பரிஷத், சிவ சேனா கண்டனம். **– செய்தி**

*இப்படி சகோதர அமைப்புகளே சண்டை போடலாமா? சரி, போகட்டும், கழிப்பறைகளையே ஆகம விதிகள்படி கட்டி, அங்கே கண் காணிப்பாளராக அர்ச்சகர்களை நியமித்து விட்டால், கழிப்பறைகளே கோயிலாகிவிடுமல்லவா? கொஞ்சம் பரிசீலியுங்கள், சார்!*

+ இதுதான் முடிவு; இதுதான் கடவுள்; இது தான் பிரார்த்தனை என்று சனாதனதர்மம் என்கிற இந்து மதம் முடிவாகக் கூறவில்லை. சனாதன தர்மம் தேடிக் கொண்டே இருக்கிறது. **– 'இந்து' ஏட்டில் பாலகுமாரன்**

*சரி; இதுதான் 'சனாதன தர்மம்' என்பதை மட்டும் எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? அதையும் தேடிக் கொண்டே இருக்க வேண்டியது தானே?*

+ 2005-2012 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் மனிதர்களிடம் நடத்தப்பட்ட மருந்து வீரிய பரிசோதனையில் 2,644 பேர் இறந்துள்ளனர். 12,000 பேருக்கு விபரீத விளைவுகள் ஏற்பட்டுள்ளன. **– உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு மனு**

*'எக்ஸ்பைரி' மருத்துக்கா- மனிதர்களுக்கா?*

+ சென்னை இரயில் பெட்டித் தொழிற்சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த காந்தி பயணம் செய்த ரயில் பெட்டியை காணவில்லை. **– மாநகர ஆணையரிடம் புகார்**

*இரயில் பெட்டித் தொழிற்சாலையாவது பாதுகாப்பாக இருக்கிறதா?*

# மடத்துக் குளத்தில் பெரியார் பிறந்த நாள்



22.9.2013 அன்று உடுமலை மடத்துக்குளம் வட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக பெரியார் பிறந்த நாள் விழா, கொடியேற்று விழா மற்றும் தெருமுனைப் பிரச்சாரமாக நடைபெற்றது. விழாவிற்கு கழகச் செயலவைத் தலைவர் சு.துரைசாமி தலைமையேற்றும், தமிழ்நாடு அறிவியல் மன்ற திருப்பூர் மாவட்டப் பொறுப்பாளர் இரா.மோகன் முன்னிலையேற்றும் நடத்தி வைத்தனர். முதலில் பெதப்பம்பட்டியில் காலை 10 மணிக்கு கு.கவிதா கொடியேற்றினார்.

தொடர்ந்து நால்ரோட்டில் உடுமலை வட்ட அமைப்பாளர் ப.குணசேகரன், உடுமலை குட்டைத் திடலில் பெரியார் பிஞ்சு சு.ம.தேனிலா, சுடரொளி, உடுமலை பேருந்து நிலையத்தில் உடுமலை நகர அமைப்பாளர் மலரினியன், மடத்துக்குளம் நால் ரோட்டில் சூலூர் பன்னீர் செல்வம், மடத்துக்குளம் பேருந்து நிலையத்தில் முகில்ராசு, கடத்தூர் புதூரில் தமிழ்நாடு அறிவியல் மன்ற கோவை மாவட்ட பொறுப்பாளர் விஜயராகவன், கடத்தூரில் சு. துரைசாமி, காரத்தொழுவில் மாவட்டச் செயலர் அகிலன், கணியூரில் தம்பி பிரபா ஆகியோர் கொடியேற்றினர். மாலை 3 மணிக்கு விழா நிறைவடைந்தது. முன்னதாக கோட்டமங்கலம் சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாநில வெளியீட்டுச் செயலர் ந. தமிழ்ச்செல்வி, பாலப்பம்பட்டி சமத்துவபுரத்திலுள்ள பெரியார் சிலைக்கு பெரியார் பிஞ்சு கவின்மலரும் மாலை அணிவித்தனர். தெருமுனைப் பிரச்சாரங்களில் சு. துரைசாமி, விஜயராகவன், இரா. மோகன், கோவை புறநகர் மாவட்டத் துணைத் தலைவர் ந.வே. நிர்மல்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஆதித் தமிழர் பேரவையின் மாவட்டத் துணைத் தலைவர் அங்கமுத்து, மாவட்ட செயலர் ஈழவேந்தன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.

தோழர் சு. துரைசாமி, தனது உரையில் "கோவிலில் அப்பாவி பக்தர்களால் அளிக்கப்பட்ட தங்கங்கள் எவ்வாறு பார்ப்பனர்களால் முடக்கப்பட்டுள்ளது என்றும், அத்தங்கத்தை எடுத்து அரசு பொருளாதார நெருக்கடி தீர பயன்படுத்த வேண்டும்" என்றும் குறிப்பிட்டார். தோழர் விஜயராகவன், தமது உரையில், "இந்தியாவை காங்கிரசும், பி.ஜே.பியும் ஆண்டாலும், உண்மையில் ஆள்வது பார்ப்பன அதிகாரிகள் தாம் என்றும், அவர்களின் தவறான பொருளாதார வழிகாட்டுதல்களின்பேரால்தான் அரசுகள் நம்மைச் சுரண்டுகின்றன" என்றும் குறிப்பிட்டார். உடுமலை பேருந்து நிலையத்தில் காவல்துறை கெடுபிடிகளுக்கு மத்தியிலும், இந்து முன்னணியினர் முன்னிலையிலும் இரா. மோகன், இந்துமதவாத சக்திகளை ஒரு பிடி பிடித்தார். அவர் தனது உரையில், "10 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் விநாயகன் சதுர்த்தியன்று வீட்டளவில் சிறிய களிமண்ணாலான சிலையை வைத்து வழிபட்டு கிணற்றில் போட்டும், கொழுக்கட்டை சுட்டும் கொண்டாடினர். ஆனால், இப்போதோ ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி., சிவசேனா, பஜ்ரங்தள், அனுமன்சேனா போன்ற இந்து மதவாத அமைப்புகளும் கட்சிகளும் பெரியார் பிறந்த தமிழ்நாட்டில் மதக் கலவரங்களை உண்டு பண்ணவே இன்று விநாயகனைத் தெருவில் கொண்டு வந்து வைத்து மசூதிகளின் வழியாக ஊர்வலங்களை நடத்த வேண்டும் என்று கூறி வருகின்றன. கடைசிப் பூணூல் உள்ள வரை திராவிடர் விடுதலைக் கழகம் அதனைத் தடுக்கும்" என்றும் சூளுரைத்தார். பொது மக்களும் வியாபாரிகளும் அவரின் உரையை வியப்பாகக் கேட்டனர். இறுதியாக மடத்துக்குளம் ஒன்றிய அமைப்பாளர் க. காந்தி நன்றி கூறினார்.

விழாவிற்கு கொடிக்கம்பம் நடுவதற்காக மணல், சிமெண்ட், ஜல்லி ஆகியவற்றை உடுமலை தோழர் பொறியாளர் ஆ.பொன்ராசு வழங்கினார். கணியூரில் வேங்கை செல்வன், சரவணன், ராஜசேகர், தம்பி பிரபா, கார்த்தி ஆகியோர் மதிய உணவாக மாட்டுக்கறி பிரியாணியை சிறப்பாகச் செய்து வழங்கினர். விழா ஏற்பாடுகளை இரவு பகல் பாராமல் தோழர்கள் அய்யப்பன், ப. குணசேகரன், க. காந்தி ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர். பெரியார் பிஞ்சு தேனிலா எப்போதும் வீட்டில் ஓய்வு நேரங்களில் கழகக் கொடியை வரைந்து வண்ணம் தீட்டிக் கொண்டே இருப்பார். அதனால் அவரை ஊக்குவிக்கும் வகையில் உடுமலை குட்டைத் திடலில் தேனிலாவை வைத்து கழகத்தின் கொடியேற்றப்பட்டது. விழாவிற்கு திருப்பூர் மாநகரச் செயலர் ஜீவா நகர் குமார், மாவட்ட அமைப்பாளர் செந்தில், மூர்த்தி, மணிகண்டன், வடிவேல், செல்வகுமார், ஆறுமுகம், நாராயண மூர்த்தி, தேவராஜன், தமிழ்நாடு மாணவர் கழகம் மதிஅம்பேத்கர் உள்பட குழந்தைகள், பெண்கள் என சுமார் 70 பேர் கலந்து கொண்டனர்.

**செய்தி : மலரினியன்**

# கோவில் தங்கத்தை முடக்காதே: கழகத்தின் ஆர்ப்பாட்டங்கள்

### தூத்துக்குடியில்

நாட்டின் பொருளாதாரத்தை சீர் செய்திட கோயில்களில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தை பயன்படுத்த வலியுறுத்தி, தூத்துக்குடி மாவட்ட கழக சார்பில் 13.9.2013 அன்று பழைய மாநகராட்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் பொறிஞர் சி.அம்புரோசு தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை ஆதி தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் கண்ணன் தொடங்கி வைத்தார். நெல்லை மண்டலச் செயலாளர் கோ.அ.குமார், பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் விளக்கவுரையாற்றினர். மாவட்டச் செயலாளர் மதன், பொருளாளர் இரவி சங்கர், துணைத் தலைவர் வேபால்ராசு, துணைச் செயலாளர் பாலசுப்பிரமணியன், மாநகரத் தலைவர் பிரபாகரன், செயலாளர் பால். அறிவழகன் மற்றும் பல தோழர்களும், ஆதித் தமிழர் பேரவைத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

### நாகர்கோயிலில்

13.9.2013 அன்று கழக சார்பில் கோயிலில் முடங்கிடும் தங்கத்தைப் பொருளாதார சீர்கேட்டை தடுப்பதற்குப் பயன்படுத்தக் கோரி நாகர்கோயிலில் ஆர்ப்பாட்டம் நடந்தது. பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் வழக்குரைஞர் வே.சதா (மாவட்ட செயலர்), சூசையப்பர் (மாவட்ட தலைவர்), ஜெபக்குமார் (மாவட்ட பொருளாளர்), சிதம்பரம் (மாவட்ட செயலாளர், ஆதித் தமிழர் பேரவை), சபையார்குளம் இராஜேந்திரன் உள்பட தோழர்கள் பங்கேற்றனர். ஆதித் தமிழர் பேரவைத் தோழர்கள் கதிரவன், போஸ், குமரேசன், ஜெகன், விஜயகுமார் விளக்கவுரையாற்றினர். மாவட்ட அமைப்பாளர் சேவியர் நன்றி கூறினார்.

### திருப்பூரில்

கழகத்தின் சார்பில் பெரியார் பிறந்த நாள் விழா செப்.17 மாலை 5.30 மணிக்கு திருப்பூர் பெரியார் சிலை அருகில் கொள்கை முழக்க உறுதியேற்பு நிகழ்வாகவும், பொருளாதார நெருக்கடியை சமன் செய்ய கோயில் நகைகளை அரசு கையகப்படுத்தக் கோரியும் காவல்துறையின் தடையையும் மீறி ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. இந்நிகழ்வில் 73 தோழர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு கோவை மண்டல அமைப்புச் செயலாளர் பல்லடம் விஜயன் தலைமை தாங்கினார். மாநில செயல் தலைவர் துரைசாமி, திருப்பூர் மாநகர தலைவர் சண்முகம், மாநகர செயலாளர் ஜீவா நகர் குமார், மாவட்ட செயலாளர் அகிலன், முகில்ராசு, உடுமலை நகர அமைப்பாளர் மலரினியன், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழக மாவட்ட அமைப்பாளர் பாரதி வாசன், தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் பாண்டிதுரை, சவுந்தர், காட்டுராஜா, கவுதம் மற்றும் 6 பெண்கள், குழந்தைகள் ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட அமைப்பாளர் கிளாக்குளம் செந்தில் நன்றி கூறினார்.

# கடவுள்~மதமற்ற புதிய உலகு வரட்டும்

*‘இந்து’ ஆங்கில நாளேட்டில் (செப்.22) மராட்டியத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட பகுத்தறிவுப் போராளி தபோல்கர் நினைவாக பேராசிரியர் வசந்த் நடராசன் எழுதிய கட்டுரையின் சுருக்கமான தமிழ் வடிவம்.*

மனித சமுதாய வரலாற்றைப் படித்தால் மற்ற எந்த காரணத்தையும்விட மதத்தின் பேரால் நடந்த போர்களே அதிகம் என்பதைப் பார்க்க முடிகிறது. சரியாகச் சொன்னால், எந்தெந்தக் காலகட்டங்களில் மதமும் அதன் மீதான கொள்கைப் பிடிவாதமும் தீவிரமாகக் கோலோச்சினவோ அந்தக் கால கட்டங்களில்தான் மனிதர்கள் மீது மிகக் குரூரமான சித்திரவதைகளும் நடைபெற்றன. உதாரணமாக, கத்தோலிக்க சர்ச்சோடு உடன்படாதவர்களைக் கொடுமைப்படுத்திய ஸ்பானிய விசாரணைகள் நடைபெற்ற காலத்தைக் கூறலாம். ஜெர்மனியில் யூதர்களுக்கு எதிராகத் தொடங்கி வளர்ந்த நாசிசம் இரண்டாம் உலகப் போரில் போய் முடிந்தது.

இப்போது ‘இஸ்லாமிய தீவிரவாதம்’ தலை தூக்கியிருப்பது, சிலர் குறிப்பிடுவதுபோல் வெவ்வேறு கலாச்சாரங்களுக்கு இடையே நடக்கும் மோதல் அல்ல. இஸ்லாம் மதத்துக்கும், கிறிஸ்துவ மதத்துக்கும் இடையிலான மோதல்தான். அதன் விளைவாகவே இஸ்லாமிய மதகுருக்கள் தங்கள் போக்கை மேலும் கடுமையாக்கிக் கொண்டு குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதே இஸ்லாமியர்களின் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த கிறித்தவர்கள் கொணர்ந்த திட்டம் என்று பிரச்சாரம் செய்யும் அளவுக்கு மதத்தின் மீதான வெறி சென்றுள்ளது. இதே அடிப்படையில் போலியோ சொட்டு மருந்துக்கெதிராக பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நைஜீரியா போன்ற நாடுகளில் தாலிபான்கள் பல சுகாதார ஊழியர்களை கொலை செய்துள்ளனர்.

**அது என்ன எல்லாவற்றையும் மீறிய சக்தி? முதலில் ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். விஞ்ஞானத்தின் ஆய்வுக்குட்படாத எந்த அதீத அற்புத சக்தியும் கிடையவே கிடையாது.**

மனிதர்கள் கடவுள் கொள்கையை ஏன் கண்டு பிடித்தனர் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மதம் என்ற நிறுவனமே பயத்தின் அடிப்படையில் பிறந்ததுதான். அதுவும் மனிதர்களால் விளக்கம் சொல்ல முடியாத இயற்கை நிகழ்வுகளின் மேல் ஏற்பட்ட பயம்தான், அவர்களைக் கடவுள் பக்கம் தள்ளியது. இன்று நவீன அறிவியலில் அநேகமாக அனைத்து இயற்கை நிகழ்வுகளுக்கும் அறிவியல் விளக்கம் கிடைத்து விட்டது. இன்று இயற்கையைப் பார்த்து பயப்பட வேண்டிய தேவை இல்லாததால், ஆதி காலத்தில் இந்துக்களோ, கிரேக்கர்களோ வழிபட்ட சூரியக் கடவுள், வாயுக் கடவுள் போன்ற இயற்கைக் கடவுள்களுக்கும் தேவை இல்லாமல் போய் விட்டது.

உண்மையில் இயற்கையின் இயக்கத்துக்கு கடவுளை அழைக்க வேண்டிய அவசியமே இல்லை. எல்லாவற்றுக்கும் விஞ்ஞானம் விடை தந்துவிட்டது. காட்டுமிராண்டி காலத்தில் அதற்கெல்லாம் விடை தெரியாத மனிதன், இவை எல்லாம் எப்படி இயங்குகிறது என்பதை அறியாது, ஏதோ ஒரு சக்தி, நமக்கெல்லாம் அப்பால் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று கூறினான். இன்றைய விஞ்ஞான அறிவியல் முன் இது பொருத்தமில்லாத வாதம். கடவுள் ஒருவரே என்ற கொள்கையை ஏற்றுக் கொண்ட மதங்கள்கூட இயற்கைக் கடவுள் வழிபாடுகளை கைவிட்டு விட்டன. ஆனாலும் இன்று வரை நமக்கும் மீறிய அதீத சக்தி ஒன்று இருக்கிறது என்று வாதிடுகிறார்கள். அது என்ன எல்லாவற்றையும் மீறிய சக்தி? முதலில் ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். விஞ்ஞானத்தின் ஆய்வுக்குட்படாத எந்த அதீத அற்புத சக்தியும் கிடையவே கிடையாது. உண்மையில் நாம் பிறக்கும்போது பகுத்தறிவு உணர்வுகளோடுதான் பிறக்கிறோம். இயற்கை விதிகள் குறித்த உலகத்தின் புரிதல் எப்போதுமே ஒன்றேபோல் தான் இருந்து வருகிறது. மனித குலத்தின் பரிணாம வளர்ச்சிக்கான தனித்துவத்தை இயற்கை விதிகளே வழங்கின.

இன்னும் பேச்சுக்கூட வராத ஒரு வயது குழந்தை, ஏதோ வழமைக்கு எதிரான ஒரு அதிசயத்தைப் பார்க்க நேரிட்டால், பாதிப்புக்குள்ளாகி அழத் தொடங்கி விடுகிறது. ஒரு மாஜிக் நிபுணர் தனது கலையைப் பயன்படுத்தி நிகழ்த்தும் இயற்கை விதிகளுக்கு மாறான சம்பவங்கள் இயல்பான இயற்கைப் போக்குகளுக்கு மாறாக இருப்பதால் குழந்தைகளை மிரள வைத்து விடுகின்றன. இதுதான இயற்கையாக குழந்தைகளிடம் உள்ள பகுத்தறிவு உணர்வு. வளரும் பருவத்தில்தான் நாம் பகுத்தறிவை ஒதுக்கிவிட்டு, மேஜிக் தந்திரங்களை ரசிக்கத் தொடங்குகிறோம். ஆனால், பெற்றோர்களோ குழந்தைகளிடம் சிறுவயதிலேயே பகுத்தறிவுக்கு எதிரான கருத்துகளை திணித்து விடுகிறார்கள். கடவுளை கும்பிடச் சொல்கிறார்கள். மேஜிக்போல் அற்புதங்கள் செய்வோரை கடவுள் சக்தி மிக்கவர்களாக நம்பச் சொல்கிறார்கள். தங்களுடைய இயல்பான பகுத்தறிவு உணர்வுகளுக்கு எதிராக குழந்தைகள் இந்தத் திணிப்புகளை ஏற்றுக் கொள்கின்றன. காரணம் பெற்றோர்களும் ஆசிரியர்களும் எல்லாம் தெரிந்தவர்கள் என்று குழந்தைகள் ஏற்றுக் கொள்வதுதான்.

2001 செப்டம்பர் 11 அன்று உலக வர்த்தக மையத்தைத் தகர்த்த பயங்கரவாதிகள், கடவுளுக்கு எதிரானவர்களைத் தாங்கள் தண்டிப்பதால் கடவுள் தங்களுக்குப் பரிசளித்துப் பாராட்டுவார் என நம்பியிருக்கக் கூடும். அதனால்தான் “மதம் என்பது மனித கவுரவத்தை அவமதிக்க பாதைப் போட்டுத் தருகிறது. மதம் என்ற ஒன்று இல்லாவிடில், நல்ல மனிதர்கள் நற்செயல்களைப் புரிவார்கள். கெட்ட மனிதர்கள் கெடுதல்களைச் செய்வார்கள். ஆனால் நல்ல மனிதர்களும் கெடுதல் செய்வதற்கு மதமே தூண்டுகோலாக இருக்கிறது” என்கிறார் இயற்பியலில் நோபல் பரிசு பெற்ற ஸ்டீவன் வெய்ன்பர்க். மதத்திற்காக வக்காலத்து வாங்குபவர்கள், ‘நம்மைச் சுற்றிலும் உள்ள வலிகளும் துயரங்களும் நாம் கடவுள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை உறுதியாக உள்ளதா என்பதை அறிய அவர் வைக்கும் சோதனை’ என்பார்கள். புற்று நோயால் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு ஏதுமறியா குழந்தையின் பெற்றோர்களிடம் இப்படிச் சொல்லிப் பாருங்கள். இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகள் உள்ள ஒரு கடவுள் இருந்து கொண்டு, அவர் உண்மையிலேயே ஒரு குழந்தையை இப்படி சோதிக்கிறார் என்றால், அவரை உலகிலேயே மிகக் கொடுமையான மனிதராகவே கருத வேண்டும் அல்லவா? ஐன்ஸ்டீன், பெட்ரண்ட் ரஸ்ஸல், இங்கர்சால் போன்ற சிந்தனையாளர்கள், கடவுள்கள், மதங்கள் அற்ற ஓர் உலகை - அ றிவு, அன்பு, தைரியம், தன்னம்பிக்கைக் கொண்ட மனிதர்களை உடைய ஓர் உலகை உருவாக்க வேண்டும் என வலியுறுத்திச் சென்றுள்ளனர்.

குகைக் காலத்தில் வாழ்ந்தவர்கள் குகைகளில் எழுதிய ஓவியத்தைவிட பல உலகப்புகழ் வாய்ந்த ஓவியங்கள் வந்துவிட்டன. குகை ஓவியங்களை பார்த்து நகைக்கத்தான் முடியும். அந்த ஓவியங்களை கேலி பேசக் கூடாது என்று தடை போடுவது கேலிக்குரியது அல்லவா?

‘நான் ஏன் கிறிஸ்துவன் அல்ல’ என்ற நூலில், பெட்ரண்ட் ரசல், கடவுள் சிந்தனை, பாசி படிந்த பழைய சிந்தனையில் உதித்தது. அது மனிதனை விடுதலை செய்யாது. அறிவும் துணிவும் அன்பும் நிறைந்த புதிய உலகமே தேவை என்று எழுதியதை சிந்திக்க வேண்டும். ✦


**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’**
**இதழுக்கு உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?**

**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535


## தி.க. தலைவரை தாக்க முயற்சி: கழகம் கண்டனம்

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களை விருத்தாசலத்தில் ஜாதி மத வெறி சக்திகள் தாக்க முயன்றதை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாக கண்டிக்கிறது. தாக்குதலைக் கண்டித்து சென்னையில் கழக சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

பார்ப்பனிய சக்திகள், சில ஜாதி வெறியர்களை சேர்த்துக் கொண்டு மிரட்டிப் பார்க்க வேண்டாம்.

பெரியார் இயக்கங்கள் பல்வேறு பெயரில் இயங்கினாலும் பெரியார் கொள்கை பரப்புதலுக்கு தடை என்று வந்தால் அதை சந்திக்க களமிறங்கும். இதை பார்ப்பன சக்திகள் புரிந்து கொள்ளட்டும்!

## காமன்வெல்த் மாநாட்டை புறக்கணிக்கக்கோரி ஒரு லட்சம் பேரிடம் கையெழுத்து

இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்பதை வலியுறுத்தி திராவிடர் விடுதலைக் கழகம், மன்னை ஒன்றிய ம.தி.மு.க.வும் இணைந்து ஒரு லட்சம் பேரிடம் கையெழுத்து வாங்கும் இயக்கம் மன்னார்குடியில் தொடங்கியது. தமிழர்களை இனபடுகொலை செய்த இலங்கையில் நடைபெறும் காமன் வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது. இலங்கையை காமன்வெல்த் நாடுகளின் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும். தமிழீழம் அமைவதற்கு பொது வாக்கெடுப்பு நடத்த ஆதரவு கொடுக்க வேண்டும். போர் குற்றவாளி இலங்கை அதிபர் ராஜபக்சேவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி உரிய தண்டனையை பெற்றுதர முயற்சி செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி, திராவிடர் விடுதலைக் கழகம், மன்னை ஒன்றிய ம.தி.மு.க. தமிழன் சேவை மையம் ஆகிய அமைப்புகளின் சார்பில் கழக மாவட்ட அமைப்பாளர் காளிதாசு, ம.தி.மு.க. மன்னை ஒன்றிய செயலாளர் சேரன்குளம் செந்தில்குமார், தமிழன் சேவை மைய நிறுவனர் வாட்டார் கார்த்திகேயன் ஆகியோர் தலைமையில் திருவாரூரில் ஒரு லட்சம் தமிழர்களிடம் கையெழுத்து வாங்கும் இயக்கம் மன்னார்குடியில் தொடங்கியது. மன்னை வட்ட லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் வி.அய்யப்பன் முதல் கையெழுத்தினை இட்டு தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மன்னை நகர கழகச் செயலாளர் மணிகண்டன், லாரி உரிமையாளர்கள் சங்க துணைத் தலைவர் காசங்குளம் பாலு, பொருளாளர் சேரன்குளம் செந்தில்குமார், கௌரவ தலைவர் ராஜ், எஸ்.ஆர்.எஸ். நாகேந்திரன், தமிழ்நாடு லாரி சர்வீஸ் பாலு, சலீம் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை தடை கோரி கோவையில் ஆர்ப்பாட்டம்

7.10.2013 அன்று அரசு அலுவலகங்களில் மத வழிபாடுகளை தடை அமுல்படுத்தக் கோரி காந்திபுரம் தமிழ்நாடு உணவகம் முன்பு காலை 11 மணிக்கு கழகம் சார்பில் கோவையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாநகர தலைவர் நா.பன்னீர்செல்வம் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்களித்த பொறுப்பாளர்கள் இனியன், நேரு தாஸ், பால முரளி, அன்ரூஸ், பாலகிருஷ்ணன், சூலூர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட 40 தோழர்கள் பங்கேற்றனர்.

மாவட்டத் தலைவர் வெள்ளமடை நாகராசு உரையாற்றினார்.


## வெண்பா முதலாம் ஆண்டு பிறந்த நாள்

கோவை மாநகர மாவட்டக் கழகத் தலைவர் வழக்கறிஞர் பன்னீர் செல்வம்-கிரிஜா இணையர் மகள் வெண்பாவின் முதலாமாண்டு பிறந்த நாள் (7.10.2013 அன்று) மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

DATE OF PUBLICATION 09.10.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776


## தயாராகிறது!

## ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வழங்கும் பெரியார் மலர்




திராவிடர் விடுதலைக் கழகத்தின் சாதனை மலராக வெளி வருகிறது.

- ஜாதி-மனுசாஸ்திர எரிப்புப் போராட்டம் தொடர்பாக வெளி வந்த முக்கிய கட்டுரைகள்
- ஈரோடு கழக மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட கருத்தாழ மிக்க உரைகள்
- பெரியாரியம் தொடர்பான கட்டுரைகள்

என கருத்துச் செறிவுடன் ஜாதி ஒழிப்புக்கு அரசியல் சட்டத்தை எரித்த நவம்பர் 26 ஆம் நாளில் வெளி வருகிறது.

மலரில் விளம்பரங்களை தோழர்கள் சேகரித்து அனுப்பிடக் கோருகிறோம்.

விளம்பரக் கட்டண விவரங்களை தலைமைக் கழகத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்!

தொடர்புக்கு : 94440 25408, 98400 66452
Email : periyarmuzhakkam@gmail.com


(முதல் பக்கத் தொடர்ச்சி)

செய்த மாநிலங்களிலும் அதே கதைதான். பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அடிமாட்டு விலைக்கு நிலங்கள் விற்பனை, 2 லட்சம் கோடி காண்ட்லா துறைமுக ஊழல், எரிவாயுத் திட்டத்தை அன்னிய நிறுவனத்துக்கு இலவசமாக வழங்கியதில் ரூ.20,000 கோடி இழப்பு என்று ஊழல் குற்றச்சாட்டுகள் மோடியின் ஆட்சியின் மீது அணி வகுத்து நிற்கின்றன. குஜராத் அரசின் செயலால் பொதுத் துறைக்கு 2013 ஆம் ஆண்டு ரூ.4052 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதை தலைமைக் கணக்காயரின் அறிக்கை அம்பலப்படுத்தி இருக்கிறது.

பன்னாட்டு நிறுவனங்களின் சுரண்டலுக்குப் போட்டி போட்டுக் கொண்டு கதவைத் திறந்துவிடத் துடிப்பதில் காங்கிரசுக்கும் பா.ஜ.க.வுக்கும் எந்த வேறுபாடும் இல்லை. ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு ரூ.90 ஆயிரம் கோடி வரியை ரத்துச் செய்ய ப. சிதம்பரம் முன்மொழிந்தால், ‘தேச நலன்’ கருதி அதை ஆதரிக்கிறார் பா.ஜ.க.வின் வெங்கைய நாயுடு.

ஈழத் தமிழர் பிரச்சினையிலும் காங்கிரசில் இருந்து பா.ஜ.க. வேறுபட்டு நிற்கவில்லை. வாஜ்பாய் ஆட்சிக் காலத்திலும் சிங்களப் படைகளின் துப்பாக்கிக் குண்டுகளைத் தமிழக மீனவர்கள் எதிர்கொண்டார்கள். இலங்கை ராணுவத்தின் சக்தி வாய்ந்த போர்க் கப்பல் - வாஜ்பாய் காலத்தில் வழங்கப்பட்டதுதான். முள்ளி வாய்க்கால் இனப்படுகொலைக்குப் பிறகு, சுஷ்மா ஸ்வராஜ் தலைமையில் சென்ற நாடாளுமன்றக் குழு - ராஜபக்சே அரசு மறுவாழ்வுப் பணிகளைச் சிறப்பாகச் செய்வதாகப் பாராட்டுப் பத்திரம்தான் வாசித்தது. மத்திய பிரதேச பா.ஜ.க. ஆட்சியோ, ராஜபக்சேவை புத்தர் கோயிலுக்கு அழைத்து, சிவப்புக் கம்பளம் விரித்தது. அதற்காகவே, சாஞ்சி வரை தொண்டர்களை அழைத்துச் சென்று போராடினார் வைகோ. தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு, போர்க் குற்றத்துக்கான பன்னாட்டு விசாரணை போன்ற கோரிக்கைகளிலும் இரு கட்சிகளின் நிலையும் ஒன்றேதான்!

தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு, தமிழகத்தில் இருந்து ஆதரவுக் குரல் கொடுத்த தலைவர்களையும் இயக்கங்களையும் ‘தேச விரோதிகள்’ தண்டிக்கப்பட வேண்டிய ‘பிரிவினைவாதிகள்’ என்று பேசிய, எழுதிய சுப்பிரமணியன்சாமி, ‘துக்ளக்’ சோ உள்ளிட்ட பல ‘உயர்குலத் தலைவர்கள்’, ஏடுகள் மோடியை பிரதமராக்க வேண்டும் என்று உறுதியுடன் களமிறங்கி நிற்கின்றன.

இவைகளைக் கருத்தில் கொண்டு, மக்களைக் கூறுபோடும் வெறுப்பு அரசியலை தேசியமாக்க முயற்சிக்கும் சனாதன அமைப்புகளிடம் இருந்து ஒதுங்கி நிற்க வண்டிய எச்சரிக்கையை தமிழ்ச் சமூகத்தின் முன் முன்வைப்பதே தமிழருவி மணியன் ஏற்றுக் கொண்ட அரசியலுக்கு அறம் செய்வதாகும்.

தேர்தலுக்கு முன் அமைக்கப்படும் கூட்டணி, தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு அணி மாறி அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ளும் சந்தர்ப்பவாதமாகிவிட்ட நிலையில், தேர்தலுக்கு முன்மொழியப்படும் கூட்டணிகளில் என்ன பொருள் இருக்க முடியும்?

காந்திய இயக்கம் நடத்தும் தமிழருவி மணியன், காந்தியின் உயிரைப் பலி கேட்ட ஒரு தத்துவத்தை நியாயப்படுத்தும் அரசியலுக்குத் துணை போவது காந்தியத்துக்கு இழைக்கும் அநீதி அல்லவா?

எண்ணெய்ச் சட்டி சுடுவது உண்மைதான். அதற்காக நெருப்பில் விழுந்துவிட முடியுமா?

### பெண்களே உடலைச் சுமந்து இடுகாடு சென்றனர்

## கொளத்தூர் மணி தாயார் முடிவெய்தினார்



திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பழனிச்சாமி, சரோஜா ஆகியோரின் தாயார் கு. பாவாயம்மாள் 4.10.2013 அன்று முதிர்ந்த வயதில் முடிவெய்தினார். அவரது சொந்த கிராமமான உக்கம்பருத்திக்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் உடல் வைக்கப்பட்டிருந்தது. செய்தியறிந்து தமிழகம் முழுதுமிருந்தும் கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் நண்பர்களும் ஏராளமாகத் திரண்டு வந்திருந்தனர். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ, சட்டமன்ற உறுப்பினர்கள் உ. தனியரசு, எஸ்.ஆர். பார்த்திபன் (தே.மு.தி.க.), தமிழக வாழ்வுரிமை கட்சி பொதுச் செயலாளர் வை.காவேரி, கவிஞர் அறிவுமதி, எழுத்தாளர் பாமரன், காஞ்சி மக்கள் மன்றத் தோழர்கள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள், இயக்கங்களைச் சார்ந்த தோழர்களும், அரசியல் கட்சிகளைச் சார்ந்த தோழர்களும், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன், வெளியீட்டு செயலாளர் சூலூர் தமிழ்ச் செல்வி, புதுவை மாநில கழகத் தலைவர் லோகு. அய்யப்பன், செயலாளர் விஜய சங்கர், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் திருப்பூர் சிவகாமி, ஈரோடு சிவக்குமார், புதுச்சேரி பேராசிரியர் இராம. கிருட்டிணன் மற்றும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஏராளமான கழகத் தோழர்கள் திரண்டு வந்து இறுதி மரியாதை செலுத்தினர்.

காலை 11 மணியளவில் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. கழகத்தைச் சார்ந்த பெண்களே உடலை சுமந்து இடுகாடு சென்றனர். எவ்வித மத மூடச் சடங்குமின்றி கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் சகோதரி சரோஜா தீ மூட்டினார். முன்னதாக இடுகாட்டில் கழக பெண் தோழியர் ஆத்மா, மறுஜென்மம் மறுப்பு முழக்கங்களைக் கூற, தோழர்கள் வழிமொழிந்து முழக்கமிட்டனர்.

கருமாந்திரம், கல்லெடுப்பு, காரியம், படத்திறப்பு முதலிய எந்த நிகழ்வுகளும் கிடையாது. இத்துடன் அனைத்து நிகழ்வுகளும் நிறைவடைந்தன என்று கழகத் தோழர் அறிவிக்க, அனைவரும் கலைந்து சென்றனர். இறுதி மரியாதை செலுத்த வந்த அனைவருக்கும் காலை, பகல் உணவு வழங்கப்பட்டது.


## தூத்துக்குடி மாவட்டத்தில் பெரியார் பிறந்த நாள்

தூத்துக்குடி மாவட்ட கழக சார்பில் பெரியார் 135 ஆவது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. 17.9.2013 காலை 9.30 மணி அளவில் பெரியார் சிலைக்கு பால்துரை மாலை அணிவித்தார். பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, செயலாளர் மதன், பொருளாளர் இரவி சங்கர், துணைத் தலைவர் வே.பால்ராசு, துணைச் செயலாளர் பாலசுப்பிரமணியன், மாநகர கழகச் செயலாளர் பால். அறிவழகன், செல்லத்துரை மற்றும் ஏராளமான கழகத்தினரும், ஆதித் தமிழர் பேரவைத் தோழர்களும் கலந்து கொண்டு, கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு முழக்கமிட்டனர்.

வடக்கு கோட்டையன் தோப்பில் கழகக் கொடியை பிரபாகரன் ஏற்றினார். ஏராளமான தோழர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர். முக்காணியில் திருவைகுண்டம் ஒன்றிய அமைப்பாளர் தே.சந்தனராசு கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 10th October 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்

பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | அக்டோபர் 17, 2013 | புரட்சி 12 | முழக்கம் 40 | விலை: ரூ.3.00


# அரசு அலுவலகங்களில் ஆயுதபூஜைகளை நிறுத்து: களமிறங்கிய கழகத்தினர் கைது!

*அரசு அலுவலகங்கள் – காவல்நிலையங்களில் ஆயுத பூஜைகள் போடுவதை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து திராவிடர் விடுதலைக் கழகம் களமிறங்கியது. ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களிடம் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. மயிலாடு துறையில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் அதிகாரிகளின் ஆதரவோடு சரசுவதி பூஜை கொண்டாட்டம் விழாவாக நடத்தப்பட்டதை எதிர்த்து களமிறங்கிய கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.*

*மேட்டுப் பாளையத்தில் பொது மக்களிடம் விழிப்புணர்வு துண்டறிக்கைகளை வழங்கிய தோழர்கள் மீது பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். காரர்கள் தாக்குதல் நடத்தியதால் பதட்டம் உருவானது. கழகத்தினர் மீது காவல்துறை பொய் வழக்குப் போட்டு கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. செய்தி விவரம்.*

**மயிலாடுதுறையில்:** மயிலாடுதுறையில் கழகத் தோழர்கள் அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்களில் ஆயுத பூஜைகள் நடத்தவோ, கடவுள் படங்கள் வைப்பதோ கூடாது என்ற அரசு ஆணை உயர்நீதிமன்றத் தீர்ப்புகளை




சுட்டிக்காட்டி அனைத்து அலுவலகங்களுக்கும் காவல்நிலையங்களுக்கும் மாவட்ட தலைவர் மகாலிங்கம் பெயரில் வேண்டுகோள் கடிதங்களை ஒரு வாரத்துக்கு முன்பே நேரில் தந்தனர். கடிதம் பெற்றதற்கான ஒப்புதலும் பெறப்பட்டது.

மயிலாடுதுறையிலுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் பெண் அதிகாரி ஒருவரும் வேறு சில அதிகாரிகளும் அலட்சியப்படுத்தி தங்களிடம் கண்டவர்களும் வந்து வேண்டுகோள் வைக்க முடியாது என்றும் பூஜைகளை நடத்துவோம் என்றும் கூறி வேண்டுகோள் கடிதத்தை வாங்க மறுத்தனர். பிறகு, பதிவுத் தபாலில் கடிதம் அனுப்பப்பட்டது. கடந்த 11 ஆம் தேதி பிற்பகல் 7 மணியளவில் தோரணங்கள் கட்டப்பட்டு ஏராளமான வாழைக் கன்றுகளை கட்டி கோலாகலமாக ஆயுத பூஜையை விழாவாகக் கொண்டாடினர். கழகத் தோழர்கள் விரைந்துச் சென்று அலுவலக வாயிலில் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது உள்ளே விழா கொண்டாடிக் கொண்டிருந்த அலுவலகத்தோடு தொடர்பில்லாத இடைத் தரகர்கள் கார் ஓட்டும் பயிற்சி நடத்துவோர் மற்றும் அர்ச்சகர் விளக்குகளை அணைத்தனர். இருள் மயமானது. அதிகாரிகள் அலுவலகத்தை அப்படியே விட்டுவிட்டு வெளியேறினார்.

காவல்துறையினர் விரைந்து வந்து தோழர்களைக் கைது செய்வதாக அறிவித்தனர். நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் அரசு ஆணைக்கு எதிராக செயல்பட்டவர்கள் மீது நடவடிக்கை ஏதும் இல்லை. அதிகாரிகளிடம் கட்டாயப்படுத்தி புகார் மனுவைப் பெற்ற காவல்துறை தண்டனைச் சட்டப் பிரிவு 141, 448, தமிழ்நாடு சட்டம் 3(1) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மாஜிஸ்திரேட் இல்லத்தில் நள்ளிரவில் நேர் நிறுத்தி, விடியற்காலை 4 மணியளவில் மயிலாடுதுறை கிளைச் சிறையில் அடைத்தனர். தொடர்ந்து அரசு விடுமுறை காரணமாக தோழர்கள் கிளைச் சிறையிலேயே அடைக்கப்பட்டுள்ளனர். நாகை மண்டல செயலாளர் வழக்கறிஞர் இளைய ராஜா, மாவட்ட செயலாளர் கே. மகேஷ், நகரத் தலைவர் நாஞ்சில் சங்கர், நகர செயலாளர் அன்பரசன், நகர துணைச் செயலாளர் செந்தில், ஒன்றிய செயலாளர் ரமேசு, நடராசு ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ள தோழர்கள்.

மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலர் அதிகாரிகள் மற்றும் காவல்துறையைக் கண்டித்து கண்டன சுவரொட்டிகள் நகர் முழுதும் ஒட்டப்பட்டுள்ளன. இதற்கிடையே தோழர்கள் அடைக்கப்பட்டிருந்த கிளைச் சிறை வாயிலிலேயே ஆயுத பூஜைகள் கொண்டாட சிறைத் துறையினர் முற்பட்டபோது கழகத் தோழர்கள் நேரில் சென்று சட்டவிரோதமாக ஆயுதபூஜை கூடாது என்பதை எடுத்துக் கூறி நிறுத்தினர். கழகத் தோழர் விஜயராகவன் அலைபேசி வழியாக இத்தகவல்களைத் தெரிவித்தார்.

**மேட்டுப்பாளையத்தில் :** கோவை-மேட்டுப்பாளையத்தில் கடந்த சனிக்கிழமை பேருந்து நிலையத்தில் கழகத் தோழர்கள் முருகேசன், ரவி ஆகியோர் பொது மக்களிடம் ஆயுத பூஜை, சரசுவதி பூஜைகளின் அறிவுக்கொவ்வாத கற்பனைக் கதைகளையும், பூஜைகளால் நடக்கும் வீண் விரயங்களையும் விளக்கி துண்டறிக்கைகளை வழங்கினர். அப்போது ஆர்.எஸ்.எஸ்.சைச் சார்ந்த ராஜ்மோகன் என்பவரோடு ஒரு கும்பல் வந்து கழகத் தோழர்களிடம் தகராறு செய்து தாக்கியது. செய்தியறிந்த கோவை மாவட்டக் கழகக் காப்பாளர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், சம்பவம் நடந்த இடத்துக்கு வந்து கருத்துப் பிரச்சாரத்தை ஏன் தடுக்கிறீர்கள் என்று கேட்டபோது அவரையும் தாக்கத் தொடங்கினர். காவல்துறையினர் அனைவரையும் காவல்நிலையம் கொண்டு சென்றனர். செய்தியறிந்து மேட்டுப்பாளையம் மற்றும் கோவையிலிருந்து கழகத்தோழர்கள் ஏராளமாக காவல்நிலையத்தில் திரண்டனர். காவல்துறையினர் தாக்கிய ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் 3 பேர் மீதும், கழகத் தோழர்கள் மூன்று பேர் மீதும் வழக்குப் பதிவு செய்து சிறையிலடைத்தனர். மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைக்குப் பிறகு இல்லம் திரும்பினார். தாக்குதல் தொடர்பாக மேலும் சில ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வினரைத் தேடி வருவதாக காவல்துறையினர் தெரிவித்தாலும் காவல்துறை செயல்பாடு ஆர்.எஸ்.எஸ்.காரர்களுக்கு ஆதரவாகவே இருந்தது. கழகத் தோழர்கள் மீது தண்டனைச் சட்டம் 294(பி), 505(சி), 506/1 கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டனர்.

**விழுப்புரத்தில் :** விழுப்புரம் மாவட்ட கழகம் சார்பில் 12.10.2013 அன்று மாலை 3 மணிக்கு சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் பெரியார் குமார்



தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ச. பெரியார் வெங்கட், க. ராமர், ந. அய்யனார் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். சி. சாமிதுரை, சே. நகபிள்ளை, குப்புசாமி, திருநாவுக்கரசு, சாத்தூர் மூர்த்தி, டார்வின் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக கழகத் தோழர்கள், அரசு ஆணை நகலை விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அரசு அலுவலகங்களுக்கு நேரில் சென்று வழங்கினர். இதனால் பல இடங்களில் ஆயுத பூஜை போடுவது நிறுத்தப்பட்டது.

**சேலத்தில் :** அரசாணையை மீறி சட்ட விரோதமாக அரசு அலுவலகங்களில் சரஸ்வதி பூஜை நடத்துவதைக் கண்டித்து 7.7.2013 காலை 10 மணியளவில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சேலம்



மாவட்ட கழகம் சார்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் தலைமை தாங்கினார். மேற்கு மாவட்டத் தலைவர் சூரிய குமார், கிழக்கு மாவட்டத் தலைவர் கருப்பூர் சக்தி உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர்.

(4 ஆம் பக்கம்)

# வினாக்கள்... விடைகள்...

+ சில அனுபவங்கள் காரணமாக பில்லி, சூன்யம் இருந்தாலும் இருக்கலாம் என்ற எண்ணத்துக்கு நான் வந்துள்ளேன்.
**– 'துக்ளக்'கில் சோ**

விடாதீங்க... அவ்வளவும் பா.ஜ.க.வுக்கு விழக் கூடிய ஓட்டுகள்; உடனே வாக்காளர் பட்டியலில் சேர்க்க ஏற்பாடு செய்யுங்க....

+ தவறாக மரண தண்டனைகளை வழங்கியுள்ளதை உச்சநீதிமன்றமே ஒப்புக் கொண்டிருக்கிறது.
**– 'தினமணி'யில் முன்னாள் நீதிபதி பிரபா ஸ்ரீதேவன்**

அதனால் என்ன? ஒரு அரசியல் சட்ட அமர்வை நியமித்து, தவறாக மரண தண்டனை வழங்கவும், பிறகு அதை தவறு என்று அறிவிக்கவும் உரிமை உண்டு என்று தீர்ப்பு எழுதிவிட்டால் 'போதும்'!

+ திருப்பதி 'ஏழுமலை'யான் தனது இரண்டாவது திருமணத்துக்கு "குபேரனி"டம் கடன் வாங்கினார். அதற்கு செலுத்த வேண்டிய வட்டியைத்தான் பக்தர்கள் உண்டியலில் காணிக்கையாக இப்போதும் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.
**–'தினத்தந்தி' கட்டுரை.**

ப. சிதம்பரம் சார்! இந்த குபேரன் கடனை தள்ளுபடி செய்து, திருப்பதி உண்டியல் வசூலை உடனே நிறுத்துங்க... அம்பானிக்கு எல்லாம் கடன் தள்ளுபடி செய்யறீங்க...

+ கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிகம் செலவு செய்த கட்சிகளில் பா.ஜ.க.வுக்கே முதலிடம். 448 கோடி ரூபாய் செலவிட்டுள்ளது. **– செய்தி**

அடேங்கப்பா! நாடாளுமன்றத்தை நடக்க விடாம முடக்கவே இவ்வளவு பணச் செலவா?

+ திருமலையில் பிரம்மோத்சவம் நான்காம் நாள் விழா! கேட்பவர்களுக்கு கேட்ட வரம் வழங்கும் கற்பக விருட்ச வாகனத்தில் சுவாமி இரண்டு மனைவிகளுடன் எழுந்தருளினார். – செய்தி

ரொம்ப நல்லதாப் போச்சு! தெலுங்கானாக் காரர்களுக்கு தெலுங்கனா வரமும், எதிர்ப்பாளர்களுக்கு ஒன்றுபட்ட ஆந்திரா வரமும் வழங்கி, பிரச்சினையை முடிக்கச் சொல்லுங்க.

+ விருத்தாசலம் – விருத்தகிரீஸ்வரர் கோயிலில் காணாமல் போன அர்த்தநாரீஸ்வரர் சிலை, ஆஸ்திரேலியா சிட்னி அருங்காட்சியகம் வந்து சேர்ந்துவிட்டது.
**– 'இந்து' ஏடு செய்தி**

அட, இத பாருப்பா! மோடிக்கே அமெரிக்கா விசா கிடைக்கல்லே. அர்த்தநாரீசுவரர் – ஆஸ்திரேலியா போயிட்டாரே...

+ 'தீக்கதிர்' அலுவலகத்துக்கு அக்.13, ஞாயிறு அன்று விடுமுறையாகும். – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏடு அறிவிப்பு

'ஆயுத பூஜை' பண்டிக்கைக்காக விடுமுறை என்று அறிவிக்க உங்களுக்கே கூச்சமாக இருக்குதா, தோழரே!

+ தேர்தல் கூட்டணி; 45 ஜாதித் தலைவர்களுடன் மருத்துவர் ராமதாசு ஆலோசனை.
**– செய்தி**

டாக்டர் எனக்கு ஒரு 'டவுட்டு'. இந்த 45 ஜாதிகளுக்குள்ளும் காதல் திருமணங்கள் நடந்தால் கூட்டணி நீடிக்குமா? உடையுமா, டாக்டர்?

+ ராஜபக்சே ஆதரவாளரான சுப்ரமணியசாமி, தமிழ்நாட்டில் தேர்தல் பிரச்சாரம் செய்வதை பா.ஜ.க.வினர் விரும்பவில்லை. ஓட்டு பாதிக்கும் என்று பயப்படுகிறார்கள்.
**– டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி**

அதெல்லாம், அவரிடம் நடக்காதுங்க. உச்சநீதிமன்றம் போய் உத்தரவு வாங்கிட்டு வந்துடுவாரு... தெரியுமுல்ல...

+ ரயில் கட்டணம் உயர்ந்தது. **– செய்தி**

உயர்ந்தது என்பது தவறு, அபாண்டம், மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்பதே சரியானது, சத்தியமானது.

# காமன்வெல்த் : சில தகவல்கள்

இனப்படுகொலை நடத்திய இலங்கையில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்ற கருத்து அழுத்தம் பெற்றுவரும் நிலையில் 'காமன்வெல்த்' பற்றிய சில தகவல்கள்:

- பிரிட்டிஷ் காலனியின் கீழ் இருந்த நாடுகள் உருவாக்கிக் கொண்ட அமைப்பே 'காமன் வெல்த்'. இதில் உறுப்பு நாடுகள் விரும்பி தாமாகவே இணையலாம். விருப்பமில்லாவிட்டால் விலகிக் கொள்ளலாம். 1972 ஆம் ஆண்டு பங்களாதேஷ் நாட்டுக்கு ஏற்பு வழங்கியதை எதிர்த்து பாகிஸ்தான் காமன்வெல்த்திலிருந்து விலகி மீண்டும் 1989 இல் இணைந்தது.
- மனித உரிமை மீறல்கள் மற்றும் திட்டமிட்ட முறைகேடான ஆட்சி நடத்திய குற்றச்சாட்டுகளின் கீழ் 2002 ஆம் ஆண்டில் ஜிம்பாவே தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டது. அதற்காக 2003 ஆம் ஆண்டில் அந்த நாடு தன்னை விலக்கிக் கொண்டது. அதேபோல் ஜாம்பியா நாடு 2013 அக்டோபரில் காமன்வெல்த்திலிருந்து விலகிக் கொண்டது.
- காமன்வெல்த்துக்கு உறுப்பு நாடுகளை நீக்கி வைக்கும் உரிமை இல்லை. ஆனால், தீவிரப் பங்கெடுப்பிலிருந்து நாடுகளை ஒதுக்கி வைக்கலாம்.
- அயர்லாந்து - 1932 இல் நடந்த காமன்வெல்த் மாநாட்டிற்குப் பிறகு எந்த மாநாட்டிலும் பங்கேற்காமல் விலகி நின்றது. ஆனாலும், தொடர்ந்து அது காமன்வெல்த் நாடாகவே அங்கீகரிக்கப்பட்டு வந்தது. 1949 ஏப்ரலில் அது சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தியபோது, 'காமன்வெல்த்' அமைப்பிலிருந்து நீக்கப்பட்டது. (அயர்லாந்து, பிரிட்டனிலிருந்து விடுவித்துக் கொண்ட குடியரசு; எனவே பிரிட்டன் கட்டுப்பாட்டிலுள்ள காமன்வெல்த் வழமைக்கு மாறாக அயர்லாந்தை நீக்கியது. இப்படி ஒரு நாட்டின் வேண்டுகோள் இல்லாமலே நீக்கப்பட்ட ஒரே நாடு அயர்லாந்து மட்டுமே.)
- 1961 இல் தென்னாப்பிரிக்கா குடியரசானது. அது இன ஒதுக்கல் கொள்கையைப் பின்பற்றியதாலும் அதை பல ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளும், கனடாவும் எதிர்த்து வந்ததாலும் உறுப்பு நாடாக தொடராமல் தடுக்கப்பட்டது. இனஒதுக்கல் கொள்கை முடிவுக்கு வந்த பிறகு 1994 இல் தென்னாப்பிரிக்கா மீண்டும் இணைந்தது.
- 'காமன்வெல்த்' நோக்கம் - கொள்கைகள் 1971 இல் சிங்கப்பூரில் வகுக்கப்பட்டன. உலக சமாதானம்; ஜனநாயக நாடுகளை வளர்த்தெடுத்தல்; தனி மனித சுதந்திரம், சமத்துவம் மற்றும் இனவெறி எதிர்ப்பு, வறுமை, அறியாமை மற்றும் நோய்களுக்கு எதிராக போராடுதல், சுதந்திர வர்த்தகத்தை வளர்த்தல் என்பதே கொள்கைகளாக உருவாக்கப்பட்டன. பிறகு, 1979 இல் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை எதிர்க்கும் 'லுசாக்கா பிரகடனம்', 1989இல் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் 'லங்க்வாய் பிரகடனம்' ஆகியவை இணைக்கப்பட்டன. அனைத்து கொள்கைகளையும் ஏற்று 1991 இல் 'ஹரேரே பிரகடனம்' வெளியானது. இப்போது காமன்வெல்த் ஏற்றுள்ள முக்கிய கொள்கைப் பிரகடனம் "ஜனநாயகம்; நல்லாட்சி; மனித உரிமைகள்; பாலின சமத்துவம்; உலகமயமாக்கல் பயன்களை சமமாக பகிர்ந்து கொள்ளல்" என்பதேயாகும். ஹரேரே பிரகடனம் இவற்றை உறுதி செய்கிறது.
- அண்மைக்காலமாக 'காமன்வெல்த்' அமைப்பு கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகிவருகிறது. அதன் நோக்கங்கள் பேச்சளவில் உள்ளதே தவிர செயலளவில் இல்லை என்பதே குற்றச்சாட்டு. 'காமன்வெல்த்' அதிகாரிகள் மனித உரிமை மீறல்கள் பற்றி கருத்து எதுவும் தெரிவிக்கக் கூடாது என்று அமைப்பின் தலைமைச் செயலாளர் ரகசியமாக அறிவுறுத்தியது அம்பலத்துக்கு வந்தது.
- காமன்வெல்த் அமைப்பின் முக்கிய பிரமுகர்கள் அடங்கிய குழு, 2011 ஆம் ஆண்டு நடந்த கூட்டத்தில் வெளியிட்ட அறிக்கை - இந்த அமைப்பு அதற்கான முக்கியத்துவத்தை இழந்து நிற்பதாகவும், மனித உரிமைகளை மீறும் நாடுகளை கண்டிக்கக்கூடிய செயற்பாட்டு அமைப்புகள் எதுவும் இல்லை என்றும் குறை கூறியது. 106 ஆலோசனைகளையும் முன் வைத்தது; கட்டாயத் திருமணங்களை தடுக்க வேண்டும் என்றும், பல நாடுகளில் அமுலில் உள்ள ஓரினச் சேர்க்கைக்கு எதிரான சட்டத்தை நீக்க வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டிருந்தது. மனித உரிமை, ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி போன்றவற்றை வலியுறுத்திய அந்த அறிக்கையை காமன்வெல்த் வெளியிடவில்லை. பரிந்துரைகளை பரிசீலிக்கவும் இல்லை. பிரிட்டிஷ் வெளியுறவு செயலாளர் மால்கோப் ரிக்ஃபின்ட், "காமன்வெல்த் கூடிக் களையும் கேளிக்கை விழாவல்ல; மக்களுக்கான அமைப்பு" என்று கடுமையாக விமர்சித்தார்.
- கடைசியாக 2013 மார்ச் மாதம், காமன்வெல்த் புதிய பிரகடனத்தை ராணி எலிசபெத் வெளியிட்டார். இனம், மொழி, நிறம், அரசியல் கொள்கை உள்ளிட்ட எவற்றிலும் காட்டப்படும் எந்த வகையான பாகுபாடுகளையும் காமன்வெல்த் உறுதியாக எதிர்க்கும் என்று அந்த பிரகடனம் கூறுகிறது.

இனத்தின் அடிப்படையில் பாகுபாடு என்ற எல்லைகளைத் தாண்டி, இனப் படுகொலைகளையே நடத்தி முடித்த ராஜபக்சேயின் இலங்கையில் தான் அதற்கு எதிரான கொள்கைகளை அறிவித்துள்ள காமன்வெல்த் மாநாடு இப்போது கூடுகிறது. காமன்வெல்த் கூடிக் களையும் கேளிக்கை விழா என்பது உண்மை தானா?

# ம.தி.தா. இந்துக் கல்லூரியில் பெரியார் பிறந்த நாள்



திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் நடைபெற்ற பெரியார் பிறந்த நாள் விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் சின்ன தம்பி தலைமை தாங்கினார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் பேராசிரியர் நீல கிருஷ்ணபாபு வரவேற்புரையாற்றினார். பேராசிரியர்கள் திருநீலகண்டன், முனைவர் சுந்தரம், திராவிட இயக்கத் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் இரா.சந்தானம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் 'பெரியார் ஒரு சகாப்தம்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். முடிவில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் பேராசிரியர் சிவகுருநாதன் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் நீலகிருஷ்ணபாபு, முருகன், ஜெயபால், ரந்தீர்குமார், முத்துலெட்சுமி, மனோன்மணி, சிவகுருநாதன் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் செய்திருந்தனர்.

## சென்னை ஆர்ப்பாட்டத்தில் விடுதலை இராசேந்திரன் கேள்வி

# இந்துக்களின் உண்மை எதிரிகள் யார்?

*அரசு அலுவலகங்கள் காவல் நிலையங்களில் ஆயுத பூஜைகள் நடத்துவதை நிறுத்தக் கோரி சென்னையில் அக்.10 ஆம் தேதி பகல் 11 மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கினார். அவர் ஆற்றிய உரையின் சுருக்கம்:*

ஒரு மதச் சார்பற்ற நாட்டில் அரசு அமைப்புகள் மத அடையாளங்கள் இன்றி இயங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தவே இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறோம். எந்த ஒரு வீட்டுக்குள் நடக்கும் மதச் சடங்குகளை தடைப்படுத்த வேண்டும் என்று கூறவில்லை. அதில் அடங்கியுள்ள மூடநம்பிக்கைகளை சமுதாய இழிவை கருத்துகளாக முன் வைக்கிறோம். அதை ஏற்பதும், ஏற்காததும் அவரவர் உரிமை.

அரசு நிறுவனங்கள் பல்வேறு மதநம்பிக்கை யாளர்களுக்கும், கடவுள், மத நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் பொதுவானது. அதில் ஒரு மதம் தொடர்பான சடங்குகளை நடத்துவது எப்படி நியாயமாகும்? இந்த கேள்வியை உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற தீர்ப்புகளே கேட்டிருக்கின்றன. தாழையூத்து முத்து ராமன் என்பவர் தொடர்ந்த பொது நலன் வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.எம். இப்ராகிம் கலிஃபுல்லா, கே.டி.கே. வாசுகி ஆகியோரடங்கிய அமர்வு 13.2.2010 அன்று வழங்கிய தீர்ப்பில் அரசு வளாகங்களில் மத வழிபாட்டகங் களை அமைப்பதையும், அலுவலகங்களில் கடவுள் படங்கள் வழிபாடுகள் நடத்துவதையும் கூடாது என்று கூறியுள்ளது. இந்தச் செயல்பாடுகள் பிற மதத்தினரிடையே பாதுகாப்பின்மையை உருவாக்கி விடும் என்றும் கூறியிருக்கிறது. இந்தத் தீர்ப்புகள் வெளிப்படையாகவே மீறப்படுகின்றன.

இதை நாங்கள் சுட்டிக்காட்டும்போது, இந்துக்கள் மனதைப் புண்படுத்துவதாக பார்ப் பனர்கள் சங்பரிவாரங்கள் குற்றம் சாட்டுகின்றன. இது திசை திருப்பும் கருத்து. இந்து மதத்தில் பெரும்பான்மையான இந்துக்கள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்கள்தான் பெரும்பான்மையான இந்த இந்துக்களின் கல்வி உரிமை, வேலை வாய்ப்பு உரிமைகளை மறுத்தது யார்? இதே இந்து மதத்தின் தலைமைப் பொறுப்பை தாங்களாகவே பறித்துக் கொண்ட பார்ப்பனர்கள்தான். அதை எதிர்த்து இந்த ஒடுக்கப்பட்ட கோடானுகோடி இந்துக்களின் உரிமைகளுக்காக இவர்களை ‘சூத்திரர்கள்’, ‘தீண்டப்படாதவர்கள்’ என்ற இழிவுகளை எதிர்த்து இவர்களின் சுயமரியாதைக்காக போராடியது யார்? பெரியார் இயக்கம் தான். நாங்கள் இந்துவாக இருக்க - வாழ விரும்பவில்லை என்றாலும், இந்த நாட்டின் சட்டப்படி இந்துக்கள் தான்! இன்றைக்கும் இந்துப் பெண்களுக்கு மறுக்கப்படும் உரிமைகளுக்காகவும் இந்துக்களில் பெரும்பான்மை சமூகத்தினர் கோயிலுக்குள் அர்ச்சகர் ஆகும் உரிமைகள் மறுக்கப்பட்டு, அவமதிக்கப்படுவதற்கு எதிராகவும் போராடிக் கொண்டிருப்பதும் நாங்கள்தான். ஆனால், இந்த உரிமைகளை சக இந்துக்களுக்கு வழங்கக் கூடாது என்று கூக்குரல் போடும் பார்ப்பனர்களும், ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களும் எங்களை இந்துக்கள் விரோதி என்றும், தங்களை இந்துக்களின் பாதுகாவலர்கள் என்றும் கூறிக் கொண்டு மக்களைக் குழப்புகிறார்கள். இந்த சூழ்ச்சி வலையில் நமது அப்பாவிகள் சிலரும் சிலரும் விட்டில் பூச்சிகளாக வீழ்ந்து விடுகிறார்கள்.

இந்து மதத்தை விமர்சிக்கும் நீங்கள், இஸ்லாம் மதத்தையோ, கிறிஸ்தவ மதத்தையோ எதிர்ப்ப தில்லையே - ஏன் என்ற கேள்வி தான் - இன்று - பரவலாக எழுப்பப்படுகிறது. நாங்கள் மதமற்றவர்கள்; ஜாதியற்றவர்கள்; எனவே முஸ்லிம் மதமோ, கிறிஸ்துவ மதமோ எங்களுக்கு உடன் பாடானதும் அல்ல; ஆனால்-எப்படி இந்து மதத்தின் கீழ் உரிமைகள் மறுக்கப்பட்ட கோடானு கோடி ஒடுக்கப்பட்ட மக்கள் இருக்கிறார்களோ அதே போல், பிற மதங்களின் கீழ் உள்ள மக்களும் உரிமை மறுக்கப்பட்டவர்களாகவே நாம் பார்க்கிறோம். இவர்கள் ஜாதி-தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக - இந்து மதத்தை விட்டு வெளியேறியவர்கள்; எனவே பார்ப்பன ஜாதிய ஒடுக்குமுறைக்குப் பலியான மக்கள் என்ற பார்வையோடு பிற மதத்தினரின் உரிமைகளுக்கும் நாங்கள் சமூக விடுதலைப் பார்வையில் குரல் கொடுக்கிறோம்; ஆதரித்து நிற்கிறோம். எங்களைப் பொறுத்தவரை தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட இந்துக்களும் - இஸ்லாம், கிறிஸ்தவ மதத்தை தழுவிய ஒடுக்கப்பட்ட மக்களும் - பார்ப்பனியம் திணித்த சமூக ஒடுக்குமுறைக்கு பலியானவர்கள்; இவர்களுக்கான உரிமைகள் மீட்கப்படவேண்டும் என்ற கொள்கையை ஏற்று களமாடி வருகிறோம். அதற்காக அந்த மதங்களை ஆதரிப்பவர்கள் அல்ல.

உலகிலேயே இன்று மதவாதம்தான் பயங்கர வாதத்தை கட்டவிழ்த்து விடுகிறது; தாலிபான் களையோ-ஜிஹாத்துகளையோ, அவர்கள் பழமை வாதத்தை மீட்டெடுக்க நடத்தும் பயங்கரவாத நடவடிக்கைகளையோ ஒரு போதும் ஆதரிக்கவோ, நியாயப்படுத்தவோ முடியாது. சமூகப் பார்வையில் ‘நல்லவர்கள்’ என்ற இலக்கணத்துக்கு உரியவர்களை. மதம் கெட்டவர்களாக மாற்றி விடுகிறது; காந்தியைக் கொலை செய்த கோட்சேவுக்கு தனது கொலையை நியாயப்படுத்த பகவத் கீதைதான் பயன்பட்டது; தர்மத்தைக் காப்பாற்ற, அதர்மத்தை வீழ்த்த - மனிதர்களை அழிப்பது பாவமல்ல என்று பகவத் கீதையில் கிருஷ்ணன் கூறியதைத் தான் கோட்சே நிறைவேற்றினான். இது கோட்சே நீதிமன்றத்தில் தந்த வாக்குமூலம். அமெரிக்க இரட்டைக் கோபுரம் தாக்கப்பட்டதிலிருந்து உலகம் முழுதும் நடக்கும் இஸ்லாமிய பயங்கரவாதங்கள் மதத்தின் பெயரில் இறைவனுக்கு செய்யும் கடமையாகவே நியாயப் படுத்தப்படுகிறது. மேலை நாடுகளின் கிறிஸ்தவம், இஸ்லாமிய வெறுப்பை கட்டமைக்கிறது. மதங்களின் இந்த பயங்கரவாதம் மனித குலத்தின் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் சவால் விடுகிறது.

பெற்றோர்கள் சம்மதத்தோடுதான் பெண்கள் திருமண உறவை தேர்வு செய்ய வேண்டும் என்றோ, இளம் பெண்களுக்கு திருமணம் செய்யும் தங்களின் மத உரிமையை சட்டங்கள் தடுக்கக் கூடாது; விதி விலக்கு வேண்டும் என்றோ, பெண்கள் முகத்தை வெளியே காட்டாமல் மூடிக் கொண்டிருக்க வேண்டும் என்றோ, பெண்கள் கார் ஓட்டும் உரிமையோ தொலைக்காட்சியில் பேசும் உரிமையோ மறுக்கப்பட வேண்டும் என்றோ, பெண் கல்வியை வலியுறுத்திய சிறுமிக்கு மரண தண்டனை வழங்க முற்பட்டாலோ, நவராத்திரி கொலுவில் பங்கேற்க கணவனை இழந்த பெண்களுக்கு உரிமை மறுத்தாலோ அது இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என்று எந்த மதம் கூறினாலும் காலத்துக்கு ஒவ்வாத எதிர்க்கப்பட வேண்டிய முறியடிக்கப்பட வேண்டிய பழமை வாதம் என்ற கருத்தில் நாங்கள் உறுதியாக நிற்பவர்கள்.

காந்தியாரின் கருத்துகளோடு முரண்பட்டு நின்ற பெரியார், காந்தி சுடப்பட்டபோது இந்த நாட்டுக்கு ‘காந்தி நாடு’ என்று பெயர் சூட்ட வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தார். சங்பரிவாரங்கள், பார்ப் பனர்கள் கொள்கை ரீதியாக எங்களுக்கு எதிர் நிலையில் இருப்பவர்கள் என்றாலும், அவர்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டவிழ்க்கப்படுவதே அதற்கான தீர்வு என்று நாங்கள் கருதவில்லை. அதை ஆதரிக்கவும் இல்லை. மதத் தீவிரவாதத்துக்கு பலியாகி ஒட்டுமொத்த சிறுபான்மை சமூகத்தினரையே பாதிக்கச் செய்யக்கூடிய சில தீவிரவாத இளைஞர் களின் வன்முறையை நாங்கள் கண்டிக்கிறோம். மத வழி பயங்கரவாதம் - அது எந்த மதமாக இருந்தாலும் எங்களுக்கு உடன்பாடானது அல்ல.

மதம் - தனிமனித வாழ்க்கையோடு நின்று விடாமல், அது எல்லை மீறி சமூகத்தில் ஒடுக்கு முறைக்கு துணை போகும்போது, அரசு நிறுவனங் களில் ஊடுருவும்போது அரசியல் கொள்கைகளாக வடிவெடுக்கும்போது அதை எதிர்க்கிறோம்; அதற்காகவே இந்த ஆர்ப்பாட்டம்” என்றார், விடுதலை இராசேந்திரன்.

## கார்ட்டூன் காமெடியா? கடவுள் புராணமா?

சரசுவதி பூஜை கொண்டாடப்படுகிறது; சரசுவதி யார் என்பதற்கு புராணங்களில் கதைகள் உண்டு. பிரம்மா தனது உடலிலிருந்து சரசுவதியை படைத்தார். பிறகு சரசுவதியின் அழகில் மயங்கி அவளிடமே உடல் உறவு கொள்ள முயன்றார். சரசுவதை இதை விரும்பவில்லை. “என்னைப் படைத்த தந்தையாகிய நீங்களே இப்படி நடக்கலாமா? இதற்கு உடன்பட மாட்டேன்” என்கிறாள். பிரம்மா விட்டபாடில்லை. உடனே சரசுவதி பெண் மான் உருவம் எடுத்து தப்பித்து ஓடுகிறாள். பிரம்மா உடனே, நீ பெண் மான் என்றால் நான் ஆண் மான் உருவெடுத்து உன்னோடு உறவு கொள்வேன் என்று, ஆண் மான் உருவமெடுக்கிறார். இரண்டு மான்களும் ஓடுகின்றன. அப்போது சிவபெருமான் பார்க்கிறார். உடனே அவர் வேடன் உருவமெடுத்து ஆண் மானை வேட்டையாடுகிறார். பெண் மான் உருவில் இருந்த சரசுவதி, ‘அய்யோ, ஆண் மான் உருவமாய் இருந்தது பிரம்மாவாயிற்றே; இப்படி வீழ்த்திவிட்டீர்களே’ என்று கலங்குகிறாள். உடனே சிவன், பிரம்மாவை உயிர்ப்பிக்கிறார். சரசுவதி கண்ணீரோடு உளமறங்கி படைத்த பிரம்மாவோடு இணைய சம்மதிக்கிறாள். இது சரசுவதியின் ‘தெய்வீகக் கதை’.

இதையே குழந்தைகள் தொலைக்காட்சியில் ‘கிராபிக்ஸ்’ படக் கலவைகள் செய்தால் எப்படி இருக்கும்? ‘சூப்பர் மேன்’ ஒருவரிடம் சென்று குழந்தைகள் தங்களோடு விளையாட ஒரு அக்காள் வேண்டும் என்று கேட்கிறார்கள். ‘சூப்பர் மேன்’ தனது சக்தியால் ஒரு அழகிய பெண்ணை உருவாக்குகிறார். கைதட்டி மகிழ்ந்த குழந்தைகள் அக்காவோடு விளையாடுகிறார்கள். திடீரென்று சூப்பர்மேன், அழகிய அக்காவை திடீரென்று கடத்த, குழந்தைகள் பதறிப் போகிறார்கள். அக்கா - பெண் மானாகிறது; சூப்பர் மேன் ஆண் மானாகிறார். திடீர்க் காட்சிகள் குழந்தைகளுக்கு குதூகலமூட்டுகின்றன. ஆனாலும் குழந்தைகள் அக்காவை காப்பாற்ற அந்த வழியே வந்த ஒரு வழிப் போக்கனிடம் கேட்கிறார்கள். வழிப் போக்கனும் வேடன் உருவம் எடுத்து ஆண் மானை வீழ்த்தி, பெண் மானைக் காப்பாற்றிக் கொண்டுவர, குழந்தைகள் கொண்டாடி, வேடனுக்கு நன்றி சொல்கிறார்கள். அப்போது ஆண் மான் உருவத்தில் இருந்த சூப்பர் மேன், பெண் மான் உருவத்தில் இருந்த அக்காள் இருவரும் திடீரென்று தோன்றி, குழந்தைகளிடம் விடை பெற்றுக் கொண்டு காதலர்களாக பறந்துச் செல்கிறார்கள். ‘சூப்பர் மேன் அட்டகாச கடத்தல்’ என்ற பெயரில் இப்படி ஒரு கார்ட்டூன் காட்சியைப் பார்த்தால் குழந்தைகள் கை தட்டி சிரிப்பார்கள்.

இந்த ‘கார்ட்டூன் காமெடிகள்’ புனித தெய்வக் கதைகளாக்கப்பட்டு, நாடு முழுதும் வீடுகளிலும் அரசு அலுவலகங்களிலும் கொண்டாடப்படுகிறது. முதலமைச்சர்கள் வாழ்த்து சொல்கிறார்கள்.

அறிவியல் யுகத்தில் இது கேலிக்கூத்து அல்லவா என்று நாம் கேட்டால், எங்களை இந்து விரோதிகள் என்கிறார்கள்.

**– ஆர்ப்பாட்டத்தில் விடுதலை இராசேந்திரன் உரையிலிருந்து**

DATE OF PUBLICATION 15.10.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# அண்ணா முகமூடியுடன் ஆர்ப்பாட்டம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

**சென்னையில் :** சென்னையில் 10.10.2013 அன்று காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்களில் ஆயுத பூஜை போடுவதைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம், கழகப் பொதுச்



செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்ட தலைவர் பா.ஜான், செயலாளர் இரா. உமாபதி, அமைப்பாளர் சுகுமாரன், காஞ்சி மாவட்ட தலைவர் டேவிட், காஞ்சி மாவட்ட பொருளாளர் சேகர் மற்றும் பகுதி பொறுப்பாளர்கள், தோழர்கள் கலந்து கொண்டனர். கழகத் தோழர்கள் உமாபதி, டேவிட், அய்யனார், தஞ்சை சிவசுப்ரமணியன், குடியாத்தம் சிவா ஆகியோரைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கண்டன உரையாற்றினார்.

**கன்னியாகுமரியில் :** கன்னியாகுமரி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை போடுவதற்கு எதிரான அரசு ஆணை, நீதிமன்றத் தீர்ப்புகளை சுட்டிக் காட்டி, ஆயுத பூஜை மடமைகளை விளக்கிடும் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. இதனால் ஆத்திரமடைந்த குமரி மாவட்ட இந்து முன்னணியினர், மாவட்ட காவல்துறை அதிகாரியிடம் கழகத் துண்டறிக்கைகளைக் காட்டி புகார் கூறினர். இதை மாவட்டத்தில் அனைத்து ஏடுகளும் பெரிய செய்திகளாக வெளியிட்டன. மாவட்ட காவல்துறை அதிகாரி, கழக மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் சதாவை நேரில் வந்து விளக்கம் தர அழைத்துள்ளார்.

**திருச்சியில் :** திருச்சி மாவட்ட கழகம் சார்பாக ஜங்ஷன் காதி கிராப்ட் முன்பு 10.10.2013 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர்கள் அனைவரும் அண்ணாவின் உருவம் பொறித்த முகமூடியுன் கலந்து கொண்டனர். பெரியார் பெருந்தொண்டர் டாக்டர் எஸ்.எஸ். முத்து, தண்டோரா போட்டு அண்ணாவின்



அரசு ஆணையை நிறைவேற்றுமாறு கேட்டுக் கொண்டார். ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் கந்தவேல் குமார் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் மீ.இ. ஆரோக்கியசாமி, மண்டல அமைப்புச் செயலாளர் புதியவன், மாவட்ட அமைப்பாளர் குணா, மாவட்டப் பொருளாளர் மனோகரன், திருவரங்கம் நகர அமைப்பாளர் அசோக், ஆதித் தமிழர் பேரவையின் மகளிரணி மாவட்டத் தலைவர் ராசாத்தி அம்மாள், மாவட்ட செயலாளர் செங்கை குயிலி, நிதிச் செயலாளர் தில்லை சரவணன், இளந்தமிழர் பேரவை மாவட்டப் பொருப்பாளர் மலர்மன்னன், கழகத் தோழர்கள் தமிழ் முத்து, மணி, பழனி, முருகானந்தம், சென்னை தோழர் டார்வின்தாசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
✆9941613535

# தமிழினப் போராளி நாமக்கல் நா.ப. இராமசாமி நினைவேந்தல் கூட்டம்



10.10.2013 வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நாமக்கல் சுப்புலட்சுமி மகாலில் (23.9.2013 அன்று மறைந்த) தமிழினப் போராளி நா.ப.இராமசாமி நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது. தமிழின உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு சிலம்பொலி சு. செல்லப்பன் தலைமை தாங்கினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, நா.ப. இராமசாமி படத்தை திறந்து வைத்து நினைவேந்தல் உரையாற்றினார். பெ. மணியரசன், வழக்கறிஞர் இரத்தினம், முன்னாள் அமைச்சர் காந்தி செல்வன், எழுத்தாளர் வேலுச்சாமி, கன. குறிஞ்சி, நிலவன், கி.வெ. பொன்னையன், பரமத்தி சண்முகம் உள்பட பலர் நினைவேந்தல் உரையாற்றினர். இறுதியாக நா.ப.இராமசாமி மகன் இரா. அன்பழகன் நன்றி கூறினார்.

# மன்னையில் திலீபன் நினைவு நாள் கருத்தரங்கு

தமிழர்களை இனப்படுகொலை செய்த இலங்கையை காமன்வெல்த் நாடுகளின் பட்டியலிலிருந்து நீக்க வேண்டும்; இலங்கையில் நடைபெறும் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் மன்னார்குடியில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் நாடு கடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்ற உறுப்பினர் சரசுவதி பேசினார். பெரியார் 135 ஆவது பிறந்த நாள் மற்றும் தியாக மறவன் திலீபன் 26 ஆவது நினைவேந்தல் கருத்தரங்கம் கழகத்தின் சார்பில் மன்னார்குடி அம்பேத்கர் அரங்கத்தில் திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் இரா. காளிதாசு தலைமையில் நடைபெற்றது.

தஞ்சை மண்டல அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் இளையராஜா, நாகை மாவட்ட செயலாளர் மகேசு, தஞ்சை மாவட்ட செயலாளர் பாரி, எழுத்தாளர் பசு. கௌதமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துவக்கத்தில் பெரியாரின் படத்தினை கருக்கல் பத்திரிகை ஆசிரியர் அம்ராபாண்டியன், திலீபன் படத்தினை தமிழன் சேவை மைய நிறுவனர் வாட்டார் கார்த்திகேயன் ஆகியோர் திறந்து வைத்து உரையாற்றினர். இனப்படுகொலை போர் குற்றம் மனித உரிமை மீறல், "இலங்கை காமன்வெல்த் மாநாடு- நாம் செய்ய வேண்டியது என்ன?" என்ற தலைப்பில் நாடு கடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரசுவதி உரையாற்றினார். துவக்கத்தில் மன்னை நகர செயலாளர் மணிகண்டன் வரவேற்றார். முடிவில் நீடாமங்கலம் ஒன்றிய அமைப்பாளர் செந்தமிழன் நன்றி கூறினார்.

# தூத்துக்குடியில் நாத்திகம் இராமசாமி நினைவு நாள் கூட்டம்

தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரில் நாத்திகம் பி. இராமசாமி 4 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியும், பெரியாரியல் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டமும் 24.9.13 செவ்வாய் மாலை 6 மணியளவில் சீரணி அரங்கில் நடைபெற்றது.


ஆழ்வை ஒன்றிய கழகத் தலைவர் பா. முருகேசன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மாவட்டத் தலைவர் பொறிஞர் சி.அம்புரோசு, துணைத் தலைவர் வே.பால்ராசு, நெல்லை மண்டலச் செயலர் கோ.ஆ.குமார், ஆதித் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் சண்முகவேல், நீதித் துறை சு.க. சங்கர் ஆகியோர் உரைக்குப் பின் கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் சிறப்புரையாற்றினார். ஆழ்வை ஒன்றிய செயலாளர் இரா. உதயகுமார் நன்றியுரையாற்றினார்.

மாவட்டச் செயலர் க. மதன், பொருளாளர் இரவி சங்கர், தூத்துக்குடி மாநகர செயலர் பால். அறிவழகன் மற்றும் ஆதித் தமிழர் பேரவைத் தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். நாத்திகம் இராமசாமி மகன்கள் காமராஜ், ஜவகர், சுபாஷ் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

முன்னதாக மேல ஆழ்வார்தோப்பிலுள்ள நாத்திகம் இராமசாமி நினைவிடத்திற்குச் சென்று மலர் மாலை வைத்து வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 17th October 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | அக்டோபர் 24, 2013 | புரட்சி 12 | முழக்கம் 41 | விலை: ரூ.3.00


## வினாக்கள்... விடைகள்...

✦ உ.பி.யில் பழங்கால கோட்டையின் கீழ், 1000 டன் தங்கம் புதைத்திருப்பதாக தனது கனவில் கிடைத்த செய்தியை ஒரு சாமியார் மத்திய அமைச்சரிடம் கூற, உடனே தொல்பொருள் துறை புதையலைத் தேடி தோண்டி வருகிறது.

**– செய்தி**

நல்ல சேதி. ஆனாலும், அமைச்சரிடம் சாமியார் நேரில் வந்து சொன்னாரா? அல்லது சாமியார் சொல்வதுபோல் அமைச்சர் கனவு கண்டாரா என்பதை உறுதி கொள்ளுங்கள்.

✦ வாக்கு வங்கி அரசியலை ஒரேயடியாக குழி தோண்டிப் புதைக்க வேண்டும்.

**– கான்பூரில் மோடி**

அப்படி எல்லாம் செய்யாதீங்க. அப்புறம் எவராவது கனவு கண்டு பூமிக்கடியில் வாக்குகள் புதைந்து கிடக்கிறது என்றால், அதிகாரிகள் குழிதோண்ட ஆரம்பித்து விடுவார்கள்.

✦ கான்பூரில் மோடி பங்கேற்கும் பொதுக் கூட்ட மேடை வாஸ்துப்படி சோதிடர்கள் ஆலோசனை பெற்று அமைக்கப்பட்டது.

**– செய்தி**

ஒலி பெருக்கி, மின் விளக்கு, பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் வாஸ்து உண்டா?

✦ அரசின் பொதுத் துறை நிறுவனத்துக்கு மட்டுமே ஒரிசா நிலக்கரி சுரங்கங்களை ஒதுக்க வேண்டும் என்று முடிவு எடுத்தோம். பிர்லா நிறுவனம் தனக்கு வேண்டும் என்று கேட்டதால் பிரதமர் அலுவலகம் ஒப்புக் கொண்டது. இதில் என்ன விதிமுறை மீறல் இருக்கிறது?

**– பிரதமர் அலுவலகம் விளக்கம்**

ஒரு மீறலும் கிடையாது. அரசுக்கான சுரங்கத்தை அரசு நிறுவனத்துக்கே ஒதுக்கிக் கொண்டால், அவர்களே எடுத்துக் கொண்டார்கள் என்ற வீண் பழி வந்துவிடாதா? புரிஞ்சுக்காம பேசக் கூடாது!

✦ ராமேசுவரம் கோயிலுக்குள் பன்றி ஒன்று நுழைந்துவிட்டதால் பூஜைகள், அபிஷேகங்கள் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நிறுத்தப்பட்டன. இதை கெட்ட சகுனமாகக் கருதி, ஹோமம் வளர்க்கப்பட்டது.

**– செய்தி**

தீபாவளி நெருங்கும்போது, மகாவிஷ்ணு மீண்டும் பன்றி அவதாரம் எடுத்து வந்திருப்பார் போல!

✦ ராமர் பாலத்தை உடைக்க நினைக்கும் கட்சிகளுடன் நாங்கள் கூட்டணி வைக்க மாட்டோம்.

**– சுப்ரமணியசாமி பேட்டி**

அதிலேயே உறுதியா நிக்காதீங்க. ராமன் பாலத்தை இன்னும் கண்டுபிடிக்கவே இல்லை!

✦ மேட்டூரில் வீரப்பன் 9 ஆம் ஆண்டு நினைவு நாள். உளவுப் பிரிவினர் கண்காணிப்பு.

**– செய்தி**

நினைவு நாளில் வீரப்பன் 'ஆவி' ஏதேனும் சுற்றுகிறதா என்று கண்காணிக்கிறார்கள் போலிருக்கிறது! நமக்கேன் வம்பு!

✦ நிலக்கரி சுரங்க ஊழல் வழக்கில் சி.பி.அய். வழக்குப் பதிவு செய்துள்ள தொழிலதிபர் குமார் மங்கலம் பிர்லா, நிதியமைச்சர் ப.சிதம்பரத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

**– செய்தி**

செய்தி தவறாக இருக்கும் போலிருக்கே? நியாயமாக ப. சிதம்பரம் தானே தொழிலதிபர் வீட்டுக்குப் போயிருக்க வேண்டும்!

## தோழர் தமிழருவி மணியனுக்கு கொளத்தூர் மணி விளக்கம்

# ஆர்.எஸ்.எஸ். கருத்துகள் சமூகத்தைச் சீர்குலைத்துவிடும்

*தோழர் தமிழருவி மணியனுக்கு இரண்டாவது முறையாக பதிலளித்து, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி எழுதிய கட்டுரை.*

*ஜூ.வி.யில் சில திருத்தங்களுடன் வெளி வந்துள்ளது. கட்டுரையின் முழு வடிவம் இங்கே வெளியிடப்படுகிறது.*



'நம்மிடம் கேட்பதற்கு சில நியாயமான சந்தேகங்கள் உண்டு' என்று அடுக்கடுக்கான வினாக்களைத் தொடுத்திருக்கிறார் தமிழருவி மணியன். தேர்தல் களத்தில் மூன்றாவது அணிக்கு எங்கே வாய்ப்பிருக்கிறது என்பதே அவரது ஆவேசமான கேள்விகள். இது நம்மிடம் தொடுக்கப்பட வேண்டிய கேள்விகள் அல்ல என்பதே நமது பணிவான பதில். நாம் மூன்றாவது அணிக்கான அமைப்பாளராக நம்மை நியமித்துக் கொள்ளவில்லை. எது முதல் அணி, எது இரண்டாவது அணி என்பதும் நமக்குத் தெரியாது.

பிரதமர் பதவிக்கான வேட்பாளராக ஆர்.எஸ்.எஸ். நேரடியாக களமிறக்கியிருக்கும் மோடிக்கு - தமிழகத்தில் ஆதரவுத் தளத்தை வலிமைப்படுத்தும் முயற்சிகள் தந்த கவலைதான் - தமிழருவி மணியனுக்கு எதிர் வினையாற்றும் நிலையை நமக்கு உருவாக்கியது. காரணம், தமிழ்நாடு ஏனைய வடமாநிலங்களைப் போல் அல்லாமல், சமூகநீதி - சகோதரத்துவம் - மதவெறுப்பின்மை இல்லாத மாநிலமாக திகழ்கிறது. இவை குலைந்துபோய்விடக் கூடாது என்ற சமூகக் கவலை நமக்கு உண்டு. எந்தக் கூட்டணியில் எந்தக் கட்சிகள் இடம்பெற வேண்டும் என்பதோ, எது சிறந்த கூட்டணி என்பதோ, தேர்தல் களத்தையே இலக்குவாக்கிக் கொண்டவர்களின் கவலை. அதிகாரத்துக்கு வரும் கட்சிகளும் கூட்டணிகளும் தான் சமுதாயத்தின் பிரச்சினைகளுக்கான திறவுகோலை தங்கள் கைவசம் வைத்திருக்கின்றன என்ற மாயையிலும் நாம் மூழ்கியிருக்கவில்லை. மக்களை சந்தித்து அவர்களிடம் சமுதாயக் கருத்துகளை பரப்பி, மக்கள் இயக்கத்தை வளர்த்தெடுக்கும் பணியிலேயே நாம் பயணிக்கிறோம். இதைத் தெளிவுபடுத்திவிட்டு, தமிழருவி மணியன் எழுப்பிய சில வினாக்களுக்கு விளக்கம் தர விரும்புகிறோம்.

கட்டுரை முழுதும் அவர் வரித்துக் கொண்ட நிலைப்பாட்டுக்காக ஆர்.எஸ்.எஸ். கருத்துகளே மறைமுகமாக நியாயப்படுத்தப்பட்டுள்ளன. இஸ்லாமிய வாக்கு வங்கியை திருப்திப்படுத்தவே போலி மதச்சார்பின்மை பேசுகிறார்கள் என்று சங்பரிவார், இதுநாள் வரை கூறி வருவதை முழுமையாக நியாயப்படுத்தியிருக்கிறார் தமிழருவி. போலி மதச்சார்பின்மை என்பதற்கு பதில், 'மயக்க மதச்சார்பின்மை' என்று பெயர் சூட்டியிருக்கிறார்; அவ்வளவுதான்.

"காந்தி - இந்துக்களுக்கு எதிராகப் பலமுறை உண்ணாவிரதம் இருந்தவர். முஸ்லீம்களின் கொடுமைகளுக்கு எதிராக ஒருமுறைகூட உண்ணாவிரதம் இருந்தது இல்லை" என்று கோட்சே நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார் தமிழருவி. 'ஏன் இஸ்லாமியர்களை காந்தி எதிர்க்கவில்லை' என்பது கோட்சேயின் கோபம். அந்த கோபத்தை தமிழருவியும் நியாயப்படுத்திவிட்டார்.

"மத நல்லிணக்கத்தை அரசியல் ஆதாயத்துக்காகப் பாழ்படுத்த முனையும் வகுப்புவாத வெறியர்கள், காந்தி காலம் தொட்டு இன்று வரை இரண்டு பக்கங்களிலும் இருக்கின்றனர் என்பதே கசப்பான உண்மை" என்ற தமிழருவியின் எழுத்துகளே இதற்கு சாட்சி.

'இந்தியாவில் இந்து தேசம் - இஸ்லாம் தேசம் என்ற இரண்டு தேசங்கள் உண்டு' என்று 1937 இல் முதலில் அறிவித்ததே வீரசவர்க்கார் தான். அதற்குப் பிறகுதான் 1940 இல் ஜின்னா, பாகிஸ்தான் கோரிக்கையை முன் வைத்தார். இது குறித்த வரலாற்றுப் புரிதல் காந்திக்கு இருந்தது. அதனால் தான் திலகர் முன்னிறுத்திய 'இந்து ராஷ்டிர விடுதலை'யை புறந்தள்ளிவிட்டு, இந்தியாவின் அரசியல் விடுதலையை முன்னிறுத்தி னார். அந்தப் போராட்டத்தில் இஸ்லாமியர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் இணைக்க முயற்சித்தார். அதனால் தான் ஆர்.எஸ்.எஸ். முன் வைத்த இந்துத்துவ அரசியலை எதிர்த்தார். இந்து-இஸ்லாமியர் பிரச்சினையை ஒரே தளத்தில் பொதுமைப்படுத்துவதில் நியாயம் இல்லை என்று கருதினார். இதற்கு மாறான தமிழருவி பார்வை - காந்தியாரின் அணுகுமுறையை களங்கப்படுத்து கிறதே!

'மதத்தைப் பொறுத்தவரை அரசுக்கு எந்த ஒரு வேலையும் இல்லை' என்ற காந்தியின் கருத்தை சரியாகவே எடுத்துக்காட்டியிருக்கும் தமிழருவி, 'எல்லா மதங்களையும் சமமாக பாவிப்பதுதான் உண்மையான மதச் சார்பின்மை' விளக்கம் அளித்திருப்பது முரண்பாடு அல்லவா?

'அரசியல் சட்டத்தின் பிரிவுகள் சம உரிமையை சாத்தியமாக்கும்போது இந்த அடிப்படை உரிமைகளில் ஆயிரம் மோடிகள் ஆட்சி பீடத்தில் அமர்ந்தாலும் கை வைக்க முடியாது' என்று அடித்துக் கூறுகிறார் தமிழருவி. அவரே குறிப்பிடும் குஜராத் கலவரம் - இதே அரசியலமைப்புச் சட்டம் அமுலில் உள்ள நாட்டில் தானே நடந்தது.

1976 நெருக்கடி நிலைக்குப் பிறகு ஜெயப்பிரகாஷ் நாராயணன் முயற்சியில் ஜன சங்கத்தையும் உள்ளடக்கிய ஜனதா கட்சி உருவாகி, மொரார்ஜி தலைமையில் ஆட்சி அமைந்தபோது ஆட்சிக் கட்டமைப்பில் ஆர்.எஸ்.எஸ். பல்வேறு துறைகளில் ஊடுருவியது. கொதித்தெழுந்த ஜெயப்பிரகாஷ் நாராயணன், மொரார்ஜிக்கு கடிதம் எழுதி (1976 -மார்ச் 2) எச்சரித்தார்.

"அரசாங்கத்தின் தலைமையைக் கைப்பற்ற ஆர்.எஸ்.எஸ். முயற்சிக்கிறது என்ற குற்றச்சாட்டுகள் எனக்கு வருகின்றன. கலாச்சார முகமூடியோடு அரசியலில் செல்வாக்கு பெறுவதை என்னால் ஏற்க முடியாது. இந்து ராஷ்டிரக் கொள்கையை நான் எப்போதும் கண்டித்து வந்திருக்கிறேன். அது ஆபத்தானது. பல்வேறு கலாச்சாரங்களைக் கொண்ட இந்திய நாட்டுக்கு இது நேர் எதிரான தத்துவம்."

"I have always condemned the Hindu Rastravad of R.S.S. because it is a dangerous ideology and is contradictory to our ideal of composite Indian Nation." - இது ஜெ.பி.யின் கடிதத்தில் இடம் பெற்ற வாசகம்.

ஜெயப்பிரகாஷ் நாராயணன் சுட்டிக்காட்டிய எச்சரிக்கையை -அவர் வழி வந்த தமிழருவி மணியன் மறக்கலாமா?

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## கமலேஷ் சர்மா நடத்தும் காமன்வெல்த் மாநாடு

கொழும்பில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்று, இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைப் பேச வேண்டுமே தவிர, அதைப் புறக்கணிப்பது சரியாகாது என்று ஒரு வாதம் முன் வைக்கப்படுகிறது. முள்ளி வாய்க்கால் இனப் படுகொலைக்குப் பிறகு இலங்கை அரசு, தனக்குத் தானே நியமித்துக் கொண்ட 'கற்ற பாடம்; சமாதானப்படுத்தல்' என்ற விசாரணை ஆணையம் – ஆண்டுகள் ஓடியும் எந்த விசாரணையையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. 13 ஆவது சட்டத்திருத்தத்தில் மாகாண கவுன்சில்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிலஉரிமை மற்றும் காவல்துறையை அமைத்துக் கொள்ளும் உரிமைகளையும் நீதிமன்றம் வழியாக இலங்கை அரசு பறித்துக் கொண்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பும் முறியடிக்கப்பட்டுவிட்டது. சிங்களர்களின் இன வெறியை திருப்திப்படுத்துவதே இலட்சியமாகக் கொண்டு செயல்படும் ஒரு ஆட்சியிடம் இனியும் பேசுவதற்கு என்ன இருக்கிறது?

வடக்கு மாகாணத்தின் முதல்வராக தமிழர்களால் தேர்வு செய்யப்பட்ட விக்னேசுவரன், காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்க வேண்டும் என்று கூறும்போது, தமிழகத்தில் மட்டும் ஈழ ஆதரவாளர்கள் எதிர்ப்பது ஏன் என்ற மற்றொரு கேள்வி எழுப்பப்படுகிறது. முதல்வர் விக்னேசுவரன் கருத்து, இதில் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதே உண்மை. முதல்வராக தேர்வு பெற்ற அன்று அவர் அளித்த பேட்டியில், 'இந்தியா காமன்வெல்த்தைப் புறக்கணித்து, எதிர்ப்பைக் காட்டுவதற்கும், பங்கேற்று எதிர்ப்பைக் காட்டுவதற்கும் வாய்ப்புகள் இருப்பதால், எதை மேற்கொள்ள வேண்டும் என்பதை இந்தியாவே முடிவு செய்ய வேண்டும்' என்றே கூறினார்.

இலங்கை அரசியல் சட்டத்துக்கு உட்பட்டு நடந்த தேர்தலில் பங்கேற்று, இலங்கைக் குடிமகன் என்ற நிலையில் உள்ள ஒரு முதல்வர் பதவி ஏற்ற நாளிலேயே இலங்கை அரசை தூக்கி எறிந்து பேசிட முடியாது. சர்வதேச சமூகமும் இந்தியாவும் முன்மொழிந்த கருத்தை ஏற்று, தமிழ் தேசியக் கூட்டணி தேர்தலில் பங்கேற்று, மக்கள் வாக்குகளைப் பெற்று, ஈழத் தமிழ் மக்களின் சட்ட அதிகாரம் படைத்த பிரதிநிதிகளாக சர்வதேச சமூகத்தின் முன் நிற்கிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, நியாயமான அரசியல் தீர்வுகளை வாழ்வுரிமைகளை வலியுறுத்தும்போது அவற்றுக்கு இலங்கை அரசு எந்த அளவுக்கு முகம் கொடுக்கப் போகிறது என்பது தான் இப்போது அர்த்தம் பொதிந்த கேள்வி. அரசியல் தீர்வுக்கு தமிழர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால், இராஜ பக்சேயின் இனவெறி அரசு வாக்குறுதியை நிறைவேற்றுமா என்ற கேள்விக்கான விடையிலிருந்துதான் ஈழத் தமிழர் பிரச்சினை அடுத்தக் கட்டம் நோக்கி நகரப் போகிறது. இந்தப் புரிதலோடு முதல்வர் விக்னேசுவரன் முன்வைக்கும் கருத்துகளைப் புரிந்து கொள்ள வேண்டுமே தவிர, அவரது வார்த்தைகளுக்கு மட்டும் அர்த்தம் தேடிக் கெண்டிருப்பதில் பயனில்லை.

இந்த மாநாட்டுக்குப் பிறகு, ரத்தக்கறை படிந்த இராஜபக்சே, காமன்வெல்த் நாடுகளின் தலைவராக இரண்டு ஆண்டுகளுக்கு முடிசூட்டிக் கொள்ளப் போகிறார். இதன் மூலம் போர்க் குற்றம், மனித உரிமை மீறல் விசாரணைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்ற உள்நோக்கத்தோடு காய்கள் நகர்த்தப்படுகின்றன.

காமன்வெல்த் மாநாட்டின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா என்ற இந்தியாவைச் சார்ந்த பார்ப்பனர். 2011 ஆம் ஆண்டு நடந்த காமன்வெல்த் மாநாட்டில், அடுத்த மாநாட்டை கொழும்பில் நடத்த ஆஸ்திரேலியா, கனடா நாடுகள் எதிர்த்தபோது, இந்த பார்ப்பன அதிகாரிதான் கொழும்பில் நடத்துவதில் உறுதியாக இருந்து அதற்கான பூர்வாங்கப் பணிகளையும் மேற்கொண்டார். இந்த முயற்சியில் இந்திய ஆட்சியின் கரங்களும் மறைவாக இருப்பதைப் புரிந்து கொள்ள முடியும். இராஜபக்சேயின் போர்க் குற்றங்கள் மனித உரிமை மீறல்களை மறைக்கும் அறிக்கைகளை இந்த சர்மா தயாரித்தார். அது மட்டுமல்ல; இலங்கை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த ஷிரானி பண்டார நாயகாவின் மீது நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து, பதவியிலிருந்து நீக்கிய ராஜபக்சேயின் 'நீதித் துறை பயங்கர வாதத்தை'யும் சர்வதேச கண்டனப் பார்வையிலிருந்து தப்பிக்க வைத்தவரும், இந்த சர்மா தான். மாகாண கவுன்சிலுக்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளுக்கு எதிராக ராஜபக்சே மேற்கொண்ட நடவடிக்கையை (சர்வ அதிகாரத்துடன் தமிழர் பகுதியில் தனது தம்பி கோத்தபயே ராஜபக்சேயை பதவியில் அமர்த்தும் முயற்சி) – அந்த நீதிபதி சட்ட விரோதமானது என்று தள்ளுபடி செய்ததே நீதிபதி செய்த குற்றம். இது குறித்து கமலேஷ் சர்மா, இரண்டு சட்ட நிபுணர்களை நியமித்து கருத்துக் கேட்டார். அந்த நிபுணர்களின் அறிக்கை – ராஜபக்சேவுக்கு எதிராகவே இருந்ததால், சர்மா அந்த அறிக்கையை வெளியிடாமல் மறைத்ததோடு காமன்வெல்த் நாட்டின் உறுப்பினர்கள் கேட்டதற்குப் பிறகும் வழங்க முன்வரவில்லை.

காமன்வெல்த் அமைப்பு 1991 ஆம் ஆண்டில் வெளியிட்ட ஹராரே பிரகடனத்தின்படி 'ஜனநாயகம் நல்லாட்சி முறை மற்றும் மனித உரிமைகளைப் பின்பற்றாத நாடுகளை தற்காலிகமாக நீக்கி வைத்திருக்கிறது. அதற்கான உரிமையும் அதற்கு உண்டு. ஒப்பீட்டளவில் இலங்கையை விட மிகச் சிறிய குற்றங்களைச் செய்த ஜிம்பாவ்வே, பிஜி நாடுகள், தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டு இங்கிலாந்து ராணி எலிசபெத், ஜனநாயகம் மனித உரிமைகளை காமன்வெல்த் அமைப்பின் கொள்கையாக உறுதிப்படுத்தியுள்ளார். இதற்கு நேர் எதிரான ஆட்சிதான் இலங்கையில் நடக்கிறது என்பதை அய்.நா. மனித உரிமை ஆணையத்தின் தலைவர் நவநீதம் பிள்ளை நேரில் சென்று பார்வையிட்டு, அய்.நா. மனித உரிமைக் குழுவுக்கு அறிக்கையும் அளித்துள்ளார். இவ்வளவுக்குப் பிறகும் சர்வதேசம் உருவாக்கிக் கொண்ட நெறிமுறைகள், கோட்பாடுகள் எல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டு, கொழும்பில் காமன்வெல்த் மாநாட்டை நடத்துவதை எப்படி நியாயப்படுத்த முடியும்?

மாநாட்டைப் பொறுப்பேற்று நடத்தும் கமலேஷ் சர்மா, இராஜபக்சேயின் அடிமை போல செயல்படுகிறார் என்று கனடா நாட்டின் பிரதமர் கூறியிருப்பதை சுட்டிக் காட்ட வேண்டும். அதிகாரங்களின் மய்யங்களில் அக்டோபஸ்களாக இறுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் பார்ப்பன அதிகார வர்க்கமும் அதற்கு ஒத்திசைவாக கரம்கோர்த்து நிற்கும் இந்திய ஆட்சியாளர்களையும் தமிழர்கள் அடையாளம் காண வேண்டும்.

காமன்வெல்த் மாநாட்டை இந்தியா புறக்கணிக்கப் போகிறதா? அல்லது தனது பிரதிநிதிகளை மட்டும் அனுப்பி தமிழர்களிடம் ஏமாற்று நாடகத்தை அரங்கேற்றப் போகிறதா?

இந்தக் கேள்விகளில் தமிழர்களின் உணர்வுகளும் இணைந்தே இருக்கிறது.

மத ஆய்வரங்கில் கொளத்தூர் மணி உரை

## அறிவியலுக்கு எதிராக நிற்கும் மதங்கள்!

மனிதகுலத்தின் வளர்ச்சிக்கு துணை நிற்கும் அறிவியலுக்கு எதிராகவே அனைத்து மதங்களும் இருக்கின்றன என்றார், கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி.

இந்தியா புனித தோமா வழித் தமிழ்க் கிறிஸ்துவ நாடே - எவ்வாறு? என்ற தலைப்பில் மூன்று நாள் ஆய்வரங்கம் நடைபெற்றது. மகாபலிபுரம் அரசினர் சிற்பக் கல்லூரி அருகிலுள்ள Scripture Union Centre இல் நடைபெற்ற இந்த ஆய்வரங்கின் முதல் நாளான 27.08.2013 செவ்வாய் கிழமை அன்று காலை திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தொடக்க உரையாற்றினார்.

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவன பொறுப்பு அலுவலர் பேராசிரியர் முனைவர் க.இராமசாமி வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து பேராசிரியர் முனைவர் மு. தெய்வநாயகம் ஆய்வு கருத்துரை வழங்கி, மறுப்புக் கேள்விகளுக்கான பதில் அளித்தார். ஆய்வரங்க முடிவின் தீர்ப்பினை வழங்குவதற்கு ஐந்து பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

கொளத்தூர் மணி நிகழ்த்திய உரையின் சுருக்கம்:

சமயம் தொடர்பான இந்த ஆய்வரங்கில், சமயத் தொடர்பில்லாத என்னை, ஆய்வு கருத்து வழங்குபவர், கேள்வி கேட்பவர், நடுவர்களாக அமர்ந்திருப்பவர்கள் என அனைவரும் ஆய்வு பட்டம் பெற்ற அறிஞர்களாக இருக்கின்ற மேடையில் கல்லூரி பட்டம் கூட பெறாத எனக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மதம் - சமயம் என்பதை பொதுவாக நாங்கள் எப்படி பார்க்கிறோம் என்பதை அறிந்தேயிருப்பீர்கள்.

பொதுவாக சமயம் சார்ந்தவர்களை நாம் பார்க்கின்றபோது, தாங்கள் பிறப்பால் என்ன சமயத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றார்களோ, அதனையொட்டித்தான் அவர்களின் சமய சிந்தனையும், சமயப் பற்றும், சமய நம்பிக்கையும் இருக்கிறது. தங்கள் பெற்றோர்கள் சார்ந்த அந்த சமயத்தைக் குறித்து அதை மேலும் வலுப்படுத்துவதற்கு, அதிலுள்ள புதிர்களை விளக்குவதற்கு, அதனை சார்ந்து செல்வதற்குத்தான் அனைவரும் முயற்சிப்பவர்களாக இருக்கின்றார்கள் என்பது ஒன்று. இரண்டாவதாக நான் புரிந்து கொண்டபடி சமயம் என்பதெல்லாம் பெரும்பாலும் பிறப்புக்கு முன்னாலும் எப்படி இருந்தார்கள், இறப்புக்கு பின்னால் என்னவாகப் போகிறார்கள் என்று பேசுவதாகத்தான் இருக்கின்றது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் இருக்கும் காலத்தில் இந்த மானிட சமுதாயத்தில் இருக்கின்ற தீங்குகளை நீக்கி, அவர்கள் நலம் பெற, வளம் பெற, முன்னேற அவற்றுக்காக சிந்திக்க அக்கறை கொண்டவர்களாக நாம் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லா சமயங்களையும் உண்டாக்கியவர்கள் அல்லது சமயத்தின் தொடக்க நாயகர்களாக கருதப்படுவர்களெல்லாம் புரட்சியாளர்கள் என்பதுதான் என் கருத்து. நிலவி வருகிற ஒரு சமுதாயத்தில் அது பின்பற்றி வருகிற ஒரு கருத்தை அதில் இருக்கும் மூடத்தனங்களை விலக்கி, அதிலுள்ள நல்லவைகளை எடுத்துக் கொண்டு, மேலும் சில நல்லவைகளை சேர்த்து புதிய ஒரு வழிகாட்டுதலைத்தான் எல்லா மதத் தலைவர்களும் கொடுத்திருக்கிறார்கள். இப்படி மதத்தை உண்டாக்கியவர்கள் எல்லோருமே புரட்சியாளர்கள். ஆனால் அதை நிறுவனமயப் படுத்தியவர்கள் அதை பிற்போக்காக மாற்றிவிடுகிறார்கள் என்பதைத்தான் நாம் பார்க்கின்றோம். சமயத்தின் தலைமையை பிடித்துக் கொண்டவர்கள் அதை தக்க வைத்துக் கொள்வதற்காக அப்படி செய்துவிடுகிறார்கள். உணவு, உடை, குடியிருக்கும் இடம், இப்படி நாம் பயன்படுத்துகிற எதுவாக இருந்தாலும், நம் முன்னோர்கள் சொல்லிவிட்டார்கள் என்பதற்காக அதையே பிடித்துக் கொண்டிருக்கவில்லை; மாற்றிக் கொள்கிறோம். ஆனால், வாழ்க்கை தொடர்பான தத்துவமாக இருப்பதை மட்டும் எப்போதோ சொன்னதை அப்படியே கடைபிடிக்க வேண்டுமா? என்பது எனக்குள் எழும் ஒரு கேள்வி. அதன் தொடர்ச்சியாகத் தான் நான் பார்க்கின்றேன். மதங்களில் பல வேலைகளில் அது உண்டாக்கப்பட்ட காலத்திலிருந்து, அதற்கு எதிராக யார் பேசினாலும் - மாற்றிப் பேசினாலும் அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதை பல வரலாறுகளில் நாம் காண்கிறோம்.

அறிவியல் என்பது மனித சமுதாயத்தின் நல்வாழ்க்கைக்கு மட்டுமின்றி, நம் உடல் உழைப்பை குறைத்து, ஓய்வை அதிகமாக்கி, அதன் வழியாக சமுதாயத்தின் நலனுக்கு திருப்புவதற்கான பலவற்றை அறிவியல் கொடுக்கிறது. இயற்கையை புரிந்து கொள்வதும், இயற்கை விதிகளை அறிந்து கொள்வதும் அதைப் பயன்படுத்தி புதிதாக இந்த சமுதாயத்திற்கு நன்மை செய்வதாகவும் அறிவியல் பயன்படுகிறது. பல வேலைகளில் இந்த மதங்கள் அறிவியலுக்கு எதிராக இருந்திருக்கின்றன. கிறித்துவம் உட்பட அனைத்து மதங்களுமே அப்படி எதிராக இருந்திருக்கின்றன.

தாங்கள் நம்பிக் கொண்டிருக்கிற நம்பிக்கையை முற்று முதலாக ஏற்றுக் கொண்டு, அதை பகுத்தறிவு வழியில் ஆய்ந்துக்கூட பார்க்கக் கூடாது என்று விடாப்பிடியாக பிடித்துக் கொண்டிருக்கின்ற பார்வையோடுதான் இந்த ஆய்வரங்கத்தை நடத்துகிறார்கள் என்று கருதுகிறேன்.

தோமா தமிழகத்திதற்கு வந்து கிறித்துவத்தை பரப்பினார் என்றும், அது இந்து மதமாக இருக்கின்றது என்றும் சொல்லுகிறார், அதற்கு என்ன விளக்கம் அளிப்பார் என்று எனக்கு தெரியவில்லை. நாங்கள் மற்ற மதங்களைவிட கடுமையான மதமாக இந்து மதத்தை பார்க்கிறோம். காரணம் ஒரு மதம் தத்துவத்தில் என்னவாக இருக்கின்றது, சமய நூல்களில்

(4 ஆம் பக்கம்)

# ‘அரிதிலும் அரிதான’ வழக்கு: புதிய பார்வை

*[பல்வேறு செய்தி ஏடுகளில் புதைந்து கிடக்கும் செய்திகள், கட்டுரைகள், வாசகர்களின் சிந்தனைக்கு தொகுப்பாக முன் வைக்கப்பட்டுள்ளது.]*

சுஷில் சர்மா - டெல்லியில் இளைஞர் காங்கிரஸ் தலைவருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை நீதிபதி உள்ளிட்ட 3 நீதிபதிகளடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு ஆயுள் தண்டனையாக குறைத்துள்ளது. தனது மனைவியை கொலை செய்து துண்டுதுண்டாக வெட்டி தந்தூரி ரொட்டி சுடும் அடுப்பு நெருப்பில் போட்டு எரித்தார் என்பது குற்றச்சாட்டு. அரிதினும் அரிதான வழக்கில் மட்டும் தூக்குத் தண்டனை விதிக்கலாம் என்று ஏற்கனவே உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. கொடூரமான கொலைகள் தான் அரிதிலும் அரிதாக கருதப்பட வேண்டும் என்று இதற்கு தவறாக பொருள் கொள்ளப்பட்டு வருகிறது. குற்றவாளி திருந்தி வாழவே முடியாது என்ற உறுதியான முடிவுக்கு வரும் நிலைக்கு குற்றம் புரிந்தால் மட்டுமே அரிதிலும் அரிதான வழக்கு என்ற முடிவுக்கு வர முடியும் என்ற கருத்தை சுஷில் சர்மா வழக்கில் இப்போது உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியிருக்கிறது.

இந்த வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சுஷில் சர்மா, எதிர்காலத்தில் திருந்தி வாழவே மாட்டார் என்பதற்கான சான்றுகளை அரசு தரப்பு முன் வைக்கவில்லை என்பதால் இதை அரிதிலும் அரிதான வழக்காகக் கருத முடியாது என்று தலைமை நீதிபதி அடங்கிய அமர்வு தீர்ப்பளித்துள்ளது. தூக்குத் தண்டனையை ரத்து செய்வதற்கான ஒரு முக்கிய காரணியாக இந்த அம்சத்தை முன் வைத்திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளில் இந்த முக்கிய அம்சம் கருத்தில் கொள்ளப்படவே இல்லை. இந்த அடிப்படையில் தூக்கிலிடப்பட வேண்டியவர்கள் வழக்கை மறுபரிசீலனை செய்தால், தூக்கை எதிர்நோக்கியுள்ள 22 பேர் மீதான தூக்குத் தண்டனைகளை நிறுத்த வேண்டியிருக்கும். ‘இந்து’ ஏட்டில் (அக்.18) சுங் சுரேந்திரநாத் என்பவர் எழுதியுள்ள விரிவான கட்டுரையில் இக்கருத்தை முன்வைத்துள்ளார்.

### சோதிடத்தை நம்பும் அரசியல்வாதிகள்

அரசியல்வாதிகளை சோதிடம் எப்படி ஆட்டிப் படைக்கிறது என்பதை விளக்கும் கட்டுரை ஒன்றை மத்திய அரசின் செயலாளராக இருந்து ஓய்வு பெற்ற என்.ஆர்.கிருஷ்ணன், ‘இந்து’ ஆங்கில ஏட்டில் (அக்.6) எழுதியுள்ளார். பெயர்களை குறிப்பிடாமல் பல சுவையான சம்பவங்களை அவர் பதிவு செய்துள்ளார். 1980 ஆம் ஆண்டில் பெரும்பான்மை ஆதரவு பெற்ற ஒரு கட்சியின் முதல்வர் அமைச்சர்களோடு ஆளுநர் மாளிகையில் பதவியேற்பதற்கு சோதிடர்களைக் கலந்து ஆலோசித்தார். நாள், நேரம் குறித்து அழைப்பிதழ்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன. காலை 10 மணிக்கு பதவி ஏற்க வேண்டும். பதவி ஏற்கும் நாளில் சோதிடர்கள் முதல்வரை அணுகி 10.02க்கு முதல்வர் பதவி ஏற்காவிட்டால், 5 ஆண்டுகாலம் பதவியில் நீடிக்க முடியாது என்று கூறவே, எல்லா நிகழ்ச்சிநிரல்களும் அவசரமாக மாற்றியமைக்கப்பட்டு, சோதிடர்கள் குறித்த சரியான நேரத்தில் முதல்வர் பதவி ஏற்றார். அடுத்த ஒரு மணி நேரத்தில் விமானத்தில் டெல்லிக்கு பறந்து போய் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார். அடுத்த நாள் காலை 11 மணியளவில் தொலை வரி வழியாக ஒரு செய்தி வருகிறது. உடனே ஒரு மாநிலத்தின் ஆளுநராக அந்த முதலமைச்சர் பதவியேற்க வேண்டும் என்பதே அந்த செய்தி. 5 ஆண்டுகாலம் முதல்வராக நீடிப்பதை சோதிடம் வழியாக உறுதி செய்து கொண்டவருக்கு நேர்ந்த கதி இது!

பிரதமராக இருந்த ஒருவர், சோதிடர்-சாமியார்களைக் கேட்டுத்தான் எந்த முடிவையும் எடுப்பார். சோதிடர்கள் குறித்துத் தந்த நாளில் சில புதிய அமைச்சர்களை அறிவிக்க இருந்தார். தொலைக் காட்சியிலும் அறிவித்தாகிவிட்டது. வேறு சில சோதிடர்கள் அது நல்ல நாள் இல்லை என்று கூறியவுடன், அமைச்சர்கள் நியமன அறிவிப்பை அந்த பிரதமர் திடீரென தள்ளி வைத்து விட்டார்.

நிதியமைச்சர் ஒருவர் இருந்தார். அவர் ஒவ்வொரு நிமிடமும் சோதிடத்தின்படியே செயல்படுவார். அடுத்தப் பணியைத் தொடங்குவதற்கு முன், சோதிடரின் ஆலோசனை அவருக்கு தேவைப்படும். இதற்காகவே ஒருசோதிடர் கூட்டமே அவரைச் சுற்றி எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். அமைச்சரவை செயலாளர் என்ற உயர் பதவியில் இருந்த ஒரு அதிகாரி ஒரு அரைகுறை சோதிடர். அவர் எப்போதும் அந்த நிதியமைச்சருடன் இருந்து, எந்த வேலையை எப்போது செய்ய வேண்டும் என்று அறிவுறுத்திக் கொண்டே இருப்பார்.

புதிதாக அமைச்சராக நியமிக்கப்படுவோர் தங்களுக்கு ஒதுக்கப்படும் அறைகள் ‘ராசியாக’ இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார்கள். புதுடில்லி உத்யோக் பவனில் இரண்டு அமைச்சர்களுக்கான அறைகள் ராசியில்லாதவையாக கருதப்பட்டு அந்த அறைகளுக்கு அமைச்சர்களே வர விரும்புவதில்லை.

எஃகுத் துறை அமைச்சராக பதவியேற்ற ஒரு மூத்த தலைவருக்கு இந்த அறை ஒதுக்கப்பட்டது. அதை ஏற்க விரும்பாமல், தனக்கு சாஸ்திரி பவனிலேயே அறை ஒதுக்குமாறு கேட்டுக் கொண்டார். பிறகு, வேறு சில மாற்றங்களை செய்து உத்யோக் பவனிலேயே அவருக்கு வேறு அறை ஒதுக்கப்பட்டது. சில கோப்புகளில் முடிவு எடுப்பதே மோசமான விளைவுகளை உண்டாக்கும் என்ற நம்பிக்கையில் கோப்புகளை கிடப்பில் போட்ட அமைச்சர்களும் உண்டு. அரசு செய்தி விளம்பரத் துறையை மாற்றியமைக்க வேண்டும் என்ற கோப்பை, பரிசீலனைக்கு எடுக்காமலே ஒரு முதல்வர் கிடப்பில் போட்டு வைத்திருந்தார். அதில் கை வைத்தால் தமது பதவியே போய்விடும் என்று கூறிய அந்த முதலமைச்சர், தனக்கு முன்னாள் இந்தக் கோப்பில் நடவடிக்கை எடுக்க முயன்றவர்கள் பதவி பறிபோய்விட்டதை சுட்டிக் காட்டினார். இப்படி சம்பவங்களை பட்டியலிட்டுள்ள அந்த அதிகாரி, நாட்டை ஆட்சி செய்வது அரசியல்வாதிகளா? சோதிடர்களா? என்ற கேள்வியை எழுப்புகிறார்.

இந்த மூடநம்பிக்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு முதல்வர் பற்றிய செய்தியையும் குறிப்பிட வேண்டும். அவர்தான் கருநாடக முதல்வர் சித்தாராமையா. கருநாடக முதல்வர் பொறுப்புக்கு வரும் எவரும் சாம்ராஜ் நகருக்குள் கால் வைக்க மாட்டார்கள். அங்கே போனால் முதலமைச்சர் பதவி பறிபோய்விடும் என்று ஒரு மூடநம்பிக்கை. தேவராஜ் அர்ஸ், குண்டுராவ், ராமகிருஷ்ண ஹெக்டே, எஸ்.ஆர். பொம்மை, விரேந்திரபட்டீல், குமாரசாமி, சதானந்த கவுடா ஆகியோர் சாம்ராஜ் நகருக்குள் வந்ததால் பதவியை பறிகொடுத்தார்களாம். இதனால் பங்காரப்பா, வீரப்ப மொய்லி, தேவகவுடா, ஜெ.எச். பட்டீல், எஸ்.எம். கிருஷ்ணா உள்ளிட்ட பல முதல்வர்கள் இங்கே வருவதை பதவி காலத்தில் தவிர்த்தே வந்தனர். இவர்களில் பலரும் குறுகிய காலத்திலேயே பதவி இழந்தது வேறு கதை.

ஆனால், சித்தாராமையா, தேர்தலுக்கு முன்பே தனக்கு அத்தகைய மூடநம்பிக்கை ஏதும் கிடையாது என்றும், வெற்றி பெற்ற பிறகு சாம்ராஜ் நகர் வருவேன் என்றும் மக்களிடம் உறுதியளித்தார். உறுதியளித்தபடியே கடந்த அக்டோபர் 7 ஆம் தேதி சாம்ராஜ் நகருக்குள் நுழைந்து, அரசு திட்டங்களை தொடங்கி வைத்து, அம்பேத்கர் பவனுக்கு அடிக்கல் நாட்டி, அம்பேத்கர் சிலையையும் திறந்து வைத்தார். “எனக்கு எந்த மூடநம்பிக்கையும் இல்லை. இந்திய மக்களிடம் மண்டிக் கிடக்கும் மூடநம்பிக்கையை முறியடிக்க அறிவே சிறந்த ஆயுதம் என அம்பேத்கர் போராடினார். கருநாடகத்திலும் பசவண்ணரும், மகாகவி குவெம்புவும் தொடர்ந்து போராடினர். தொடர்ந்து சாம்ராஜ் நகருக்கு வருவேன்; மூடநம்பிக்கையின் கோட்டைகளை தகர்த்து எறிவேன்” என்று முழக்கமிட்டுள்ளார். சித்தாராமையாவுக்கு அவரது உறுதியான பகுத்தறிவு கொள்கைக்காக பாராட்டு மாலைகளைக் குவிக்கலாம்!

### அர்ச்சகர்களுக்கு தேர்வு

அர்ச்சகர்கள் - பிறவியின் அடிப்படையிலேயே தேர்வு செய்யப்பட்டு வருகிறார்கள். அதற்கான தகுதி பார்ப்பனர்களுக்கு மட்டுமே உண்டு என்று தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றம் வரை போகிறார்கள். ஆனால், கேரளாவில் அர்ச்சகர் நியமனம் அப்படி அல்ல. அங்கே அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகி விட்டார்கள். ‘கேரள தேவஸ்வம் போர்டு’ என்ற மாநில அரசின் கோயில் நிர்வாக அமைப்பு அர்ச்சகர்களாக பணிபுரிவோருக்கு பூஜை சடங்கு ‘தாந்திரீகம்’ மந்திரம் ஓதுதல் போன்ற சடங்குகளுக்குப் பயிற்சி வகுப்புகளை நடத்தி, பிறகு தேர்வு நடத்த முடிவு செய்தது. ஏற்கனவே அர்ச்சகர்களாக இருப்பவர்கள் பயிற்சியில் சேராமலேயே தேர்வு எழுதலாம் என்றாலும், அவர்கள் திறமையை சோதிக்க நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர். அப்போது இரண்டு பேர் மட்டுமே சரியான விடை தந்தார்கள். 95 பேருக்கு அர்ச்சகருக்குரிய பயிற்சி இல்லை. எனவே அவர்கள் பயிற்சி வகுப்பில் சேர்ந்து தேர்வு எழுத வேண்டும் என்று தேவஸ்வம் போர்டு அறிவித்துள்ளது. தேர்வில் தேர்ச்சிப் பெற்றவர்கள் மட்டுமே அர்ச்சகர்களாக இருக்க முடியும். தோல்வி அடைந்தவர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுவார்கள், என்கிறார் அகில கேரள தாந்த்ரீக சமாஜத்தின் மண்டல செயலாளர் பிளாக்குடி உன்னிகிருஷ்ணன் நம்பூதிரி. தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களே! கேரளாவைப் பாருங்கள்! அங்கே ஆகமக் கோயில்களில் உள்ள கடவுள்கள் எல்லாம் பார்ப்பன அர்ச்சகர்கள் மட்டுமே அர்ச்சனை செய்ய வேண்டும் கேட்கவில்லையே!

### ‘கணித மேதை’யின் கதை

‘கணித மேதை’ என்று அழைக்கப்படும் ராமானுஜம் (அய்யங்கார்) வரலாற்றைப் படமாக எடுத்து வருகிறார், பெரியார் படத்தை இயக்கிய ஞான. ராஜசேகரன். இந்திய சமூகம், சிறந்த அறிவாளிகளை அங்கீகரிப்பது இல்லை என்பதே இந்தப் படத்தின் மய்யமான கருத்து என்றும், வேதகாலத்திலிருந்தே இதுதான் நிலை என்றும் அவர் பேட்டி ஒன்றில் கூறியுள்ளார். பிற்காலத்தில் கணிதத்தில் மேதையாக விளங்கிய இராமானுஜம், ‘இன்டர்மீடியட்’ படிப்பில் தோல்வி அடைந்தவர் என்பது, ஒரு முக்கிய செய்தி. மதிப்பெண் - ஒருவருடைய அறிவாற்றலுக்கான மதிப்பீடு இல்லை என்பதற்கு இவரே ஒரு உதாரணம் தான்! குடும்பத்துக்குப் பயந்து வீட்டைவிட்டு ஓடிவிட்டார். அவரது தந்தை 1905 ஆம் ஆண்டு மகனைக் காணவில்லை என்று ‘இந்து’ ஏட்டில் படத்துடன் விளம்பரம் செய்து மகனைக் கண்டுபிடித்தார். ஜி.எச்.ஹார்டி என்ற வெளிநாட்டுக்காரர்தான் - இராமானுஜத்தின் அறிவைக் கண்டறிந்து, லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்தார். சென்னை திரும்பிய இராமானுஜர், இறுதி காலத்தில் அவரது பார்ப்பன உறவினர்களாலே ஒதுக்கி வைக்கப்பட்டார். “பிராமணன் கடல் தாண்டிப் போகக் கூடாது” என்ற சம்பிரதாயத்தை இராமானுஜம் மீறிவிட்டார் என்பதே அதற்குக் காரணம். இராமானுஜம் மரணத்தின் போதுகூட பார்ப்பனர்கள் எவரும் வரவில்லை. ‘இந்து’ நாளேட்டின் உரிமையாளரான கஸ்தூரி ரங்க அய்யங்கார்தான் அவரது உடல் அடக்கத்துக்கு ஏற்பாடுகளை செய்தார் என்ற தகவல்களை இயக்குநர் இராஜசேகரன் கூறினார்.

இதே பார்ப்பனர்கள்தான் ‘கடல் தாண்டுவது பாவம்’ என்ற கொள்கையை உதறித் தள்ளிவிட்டு வெளிநாடுகளில் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டு, ‘பிராமண தர்மம்’ பேசிக் கொண்டிருக்கிறார்கள். தன்னை வளர்த்துக் கொள்ள பார்ப்பனியம் எந்த மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ள தயங்காது, சமூகம் மாற்றத்தை ஏற்றுக் கொள்ளும்போதுதான் அவர்களால் சகித்துக் கொள்ள முடியாது.

### இந்து ‘தாலிபான்கள்’

‘தாலிபான்’ பயங்கரவாதம் இஸ்லாமியர்களிடையே இருப்பதுபோல் இந்து ஜாதி வெறியர்களிடமும் இருக்கிறது. அரியானாவில் ‘ஜாட்’ சமூகத்தினர் நடத்தும் ஜாதிப் பஞ்சாயத்துகள் ‘தாலிபான்கள்’ போலவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. காதலித்து திருமணம் செய்தாலோ ஒரே கோத்திரத்தில் காதலித்தாலோ பெற்ற மகளையே கொலை செய்துவிட வேண்டும் என்று உத்தரவு போடுகிறது இந்த ‘ஜாட்’கள் நடத்தும் ஜாதி பஞ்சாயத்து. 10 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் உடலை முழுமையாக மறைக்கும் ஆடை களையே அணிய வேண்டும்; சக மாணவர்களிடம் பேசக் கூடாது; அலைபேசி வைத்துக் கொள்ளக் கூடாது; ஒரே வாகனத்தில் பயணம் செய்யக் கூடாது என்றெல்லாம் கட்டளைகளைப் பிறப்பித்துள்ளனர். நகரத்துக்கு படிக்கச் செல்லும் இளம் பெண்கள் அங்கே நவீன உடைகளை அணியாமல்

(4 ஆம் பக்கம்)

# கூடுவாஞ்சேரியில் கழகத்தின் தொடர் முழக்கம்



இனப்படுகொலை நடத்திய இலங்கையில் காமன்வெல்த் மாநாட்டை நடத்தாதே என்ற கோரிக்கையை முன் வைத்து, காஞ்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 20.10.2013 காலை 11 மணியளவில் கூடுவாஞ்சேரி பேருந்து நிலையம் அருகே தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடந்தது. துணிப் பந்தல் அமைக்கப்பட்டு கருத்தரங்கு போல் நடந்த ஆர்ப்பாட்டம், பிற்பகல் 2.30 மணி வரை நீடித்தது. பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார்.

த.மு.மு.க. பொதுச் செயலாளர் அப்துல்சமது, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் சூ.ச. விடுதலை செழியன், மே 17 ஒருங்கிணைப்பாளர் திருமுருகன், கழக மாவட்டத் தலைவர் டேவிட் பெரியார், செயலாளர் மு. தினேசு குமார், தெ. தென்னவன் (வி.சி.), ஹைதர் அலி (ம.ம.க.), பாரத் ராஜேந்திரன் (ம.தி.மு.க.), கழக வழக்கறிஞர் அருண், கொண்டல்சாமி (மே 17) உள்ளிட்ட பலரும் உரையாற்றினர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிறைவுரை யாற்றினார். க.ரவிபாரதி தொகுத்து வழங்கினார்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வாஜ்பாய் ஆட்சி காலத்தில் அரசு கட்டமைப்புகள் ஆர்.எஸ்.எஸ். கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டதும், அரசு ஊழியர்களே ஆர்.எஸ்.எஸ்.சில் சேர குஜராத்தில் அனுமதி வழங்கப்பட்டதும், பாடத் திட்டங்கள், வரலாறுகள், பண்பாடுகள், இந்துத்துவா பார்வையில் திருத்தியமைக்கப்பட்டதும், அவற்றை எதிர்த்து தமிழருவி மணியன் அவர்களின் அற்புதமான கருத்து முழக்கங்கள் மேடைகளில் எதிரொலித்ததும் தமிழ்கூறும் நல்லுலகுக்கு நன்றாகவே தெரியும் இன்றைக்கும். பா.ஜ.க. ஆட்சி செய்யும் ம.பி.யில் மாட்டுக் கறி சாப்பிடுவது தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளதும், அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்.சில் சேர அரசு சட்டத்தின் வழியாக குடியரசுத் தலைவர் ஒப்புதலோடு அனுமதித் திருப்பதும், பள்ளிகளில் சூரிய நமஸ்காரம், சமஸ்கிருத ஒப்புவிப்பு கட்டாய மாக்கப்பட்டிருப்பதும், பசுவின் சிறுநீர் சக்தியை ஆராய அரசு சோதனைக் கூடம் அமைத்திருப்பதும், உத்தரகாண்ட் மாநிலத்தில் சமஸ்கிருதம் இரண்டாவது ஆட்சி மொழியாக்கப்பட்டு அரசு அலுவலகங்கள் சமஸ்கிருத மயமாக்கப்பட்டுள்ளதும், இதே இந்திய ஆட்சியமைப்பின் கீழ் தான் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. இப்படி ஏராளமாகப் பட்டியலிட முடியும்.

2009 நாடாளுமன்றத் தேர்தலின்போது ஈழத் தமிழர்களுக்கு துரோகமிழைத்த காங்கிரசை உதறி விட்டு தன்மானத்தோடு வெளியேறிய தமிழருவி மணியன், களத்தில் காங்கிரசை எதிர்த்து, தமிழ் ஈழ விடுதலையை ஆதரித்து நின்ற ஜெயலலிதா அணியை ஆதரிக்க மறுத்தார். அப்போது, அவர் சொன்னது, ‘பேயை எதிர்ப்பதற்காக பிசாசை ஆதரிக்க முடியாது’ என்பதுதான். ஆனால், இப்போது இந்த தேர்தல் களத்தில் ‘பிசாசு’க்களை அரவணைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்கிறார். ஏன் இந்த தடுமாற்றம்?

2002 குஜராத் கலவரத்தை மறக்காதவர்கள், 1984 இல் டெல்லியில் சீக்கியர்களுக்கு எதிராக ஊழிக் கூத்தை நடத்திய காங்கிரஸ் கலவரத்தை மட்டும் ஏன் வசதியாக மறந்து விடுகிறார்கள். இந்த மறதிக்குப் பெயர்தான் மதச்சார்ப்பின்மையா? - என்று கேட்டுள்ளார். இந்தக் கேள்வி காங்கிரசை நோக்கி எழுப்ப வேண்டியது.

ஆனாலும் நம்மை நோக்கி வந்திருப்பதால் ஒரு சிறு விளக்கம். சீக்கியர் படுகொலை, இந்திரா கொலை செய்யப்பட்டதால் உருவான பழிவாங்கும் வெறியின் வெளிப்பாடு. ஆனால், சங் பரிவாரின் இஸ்லாமிய வெறுப்பு என்பது அது ஏற்றுக் கொண்டிருக்கும் கொள்கை.

இறுதியாக ஒன்று.

டெல்லி சீக்கியர் படு கொலையை நியாயப்படுத்தி ராஜீவ் காந்தி பேசியதையும், அதே ராஜீவ் காந்தி அமைதிப்படை என்ற பெயரில் ஈழத்துக்கு படை அனுப்பி தமிழர்களைக் கொன்று குவித்ததையும் திண்டுக்கல் கூட்டத்தில் நான் கண்டித்துப் பேசியதற்காக தேசியப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சிறைப் படுத்தப் பட்டேன். ஆனால், அதே காங்கிரஸ் இயக்கத்தில் தீவிர பரப்புரையாளராக இருந்தவர்தான் தமிழருவி மணியன் என்பதை அடக்கத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’
இதழுக்கு உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

# தங்கப் புதையல்: சில கேள்விகள்

உ.பி. மாநிலம் உள்ளாவ் பகுதியில் 1857 இல் சிற்றரசர் ராஜாராவ் ராம் பச்சன் - 1000 டன் தங்கத்தைப் “புதைத்த”போது 31 கிராம் தங்கத்தின் விலை 20 டாலர். ரூபாய்க்கும் அதே மதிப்புதான். ஒரு குறுநிலப் பகுதியின் சிற்றரசர் இந்த விலையில் ஆயிரம் டன் தங்கத்தை எப்படி வைத்திருந்தார்? அப்படியே வைத்திருந்தாலும் அவ்வளவு பெரும் தொகை அவரிடம் இருந்திருக்குமா? அப்படியே நிதி வசதி இருந்தாலும் அவ்வளவு பெரிய அளவில் தங்கத்தை அவரால் எங்கிருந்து பெற முடிந்தது?

நாட்டின் வரலாற்று தொன்மங்களை தேடிக் கண்டுபிடித்து ஆய்வு நடத்த வேண்டிய தொல்பொருள் துறை, மூடநம்பிக்கைகளுக்கு துணை போகலாமா?

# கழகத் தலைவர் கொளத்தூர் மணியை நேரில் சந்தித்து இரங்கல்

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களின் தாயார் கு.பாவாயம்மாள் 4.10.2013 அன்று முடிவெய்தியதைத் தொடர்ந்து பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள், தோழர் கொளத்தூர் மணியை நேரில் சந்தித்து இரங்கல் தெரிவித்தனர்.

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி (ம.தி.மு.க.), விடுதலை சிறுத்தைகள் கட்சி செய்தி தொடர்பாளர் வன்னி அரசு, பா.ம.க. தலைவர் கோ.க.மணி, முன்னாள் அமைச்சர்கள் சுப்புலட்சுமி ஜெகதீசன், ஈரோடு முத்துசாமி, ஆதித் தமிழர் பேரவைத் தலைவர் இரா. அதியமான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கோபி. வெங்கிடு (தி.மு.க.), பனமரத்துப்பட்டி இராசேந்திரன் (தி.மு.க.), மேச்சேரி காமராஜ் (தமிழக வாழ்வுரிமைக் கட்சி), நெல்லை ம.தி.தா. இந்துக் கல்லூரி பேராசிரியர் திருநீலகண்டன், பூவுலகின் நண்பர்கள் பொறியாளர் சுந்தரராஜன் முதலானோர் நேரில் வந்து இரங்கல் தெரிவித்தனர்.

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ன இருக்கின்றது என்பதைவிட, அது மக்களால் என்னவாக புரிந்து கொள்ளப் படுகிறது என்பதைத் தான் நாம் பார்க்க வேண்டும் என்று கருதுகிறோம்.

அறிவியல் வேகமாக முன்னேறி வருகின்ற வேலையில், அறிவியல் புதிய புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்தப் பின்னால் மிக நீண்ட நெடுங்காலம் கழித்து தான் அதை மதத் தலைவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். உலகம் உருண்டை என்பதைகூட ஒரு காலத்தில் கிறித்துவம் ஏற்றுக் கொள்ளவில்லை. இங்கு நடைபெறும் இந்த ஆய்வரங்கின் தலைப்பையொட்டி இந்த தொடக்க உரையை ஆற்ற முடியாமைக்கு எனக்கும் வருத்தம் இருந்தாலும்கூட, நான் மீண்டும் மீண்டும் உங்களை கேட்டுக் கொள்வதெல்லாம் நாம் பிறந்த மதமோ, ஏற்றுக் கொண்ட மதத்தையோவிட மனிதாபிமானம் பெரிது; மனிதன் பெரியவன்; மனித நேயம் உயர்ந்தது என்ற கருத்தோடு மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு - வாழ்வுக்கு துணை நிற்போம் என்று சொல்லி விடை பெறுகிறேன், என்றார்.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறார்களா? ஆண் நண்பர்களுடன் பழகாமல் இருக்கிறார்களா என்பதைக் கண்காணிக்க உளவுப் பிரிவையும் அமைத்துள்ளார்களாம். தங்களுக்கு தாங்களே சட்டங்களையும் தண்டனைகளையும் உருவாக்கிக் கொண்டு திரியும் இந்த ஜாதி வெறியர்களிடம் சட்டம் நெருங்கவே பயப்படுகிறது. இஸ்லாமிய ‘தாலிபான்கள்’ போலவே இந்து தாலிபான்களும் இருக்கிறார்கள். நாட்டை சட்டம் ஆட்சி செய்கிறதா? ஜாதி வெறிக் குழுக்கள் ஆட்சி செய்கிறதா?


### பா.ஜ.க. மாறிவிட்டதா?

பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கையை தயாரிக்கும் பொறுப்பை ஏற்றிருப்பவர் வர்ணாஸ்ரம வெறியில் ஊறிப் போன முரளி மனோகர் ஜோஜி. அவர் பத்திரிகையாளர்களிடையே தங்களின் அடிப்படைக் கொள்கைகளில் சமரசத்துக்கு இடமில்லை என்று கூறியிருக்கிறார். அயோத்தியில் ராமன் கோயிலைக் கட்டுவது; இஸ்லாம், கிறிஸ்தவர்களுக்கான மதச் சட்டங்களை ஒழித்து பொதுவான சிவில் சட்டத்தை உருவாக்குவது; காஷ்மீருக்கு சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சிறப்பு உரிமையான 370 ஆவது பிரிவை ரத்து செய்வது - இந்த மூன்று கொள்கைகளும் தேர்தல் அறிக்கையில் நிச்சயமாக இடம் பெறும் என்று கூறிவிட்டார். அதேபோல், பசு பாதுகாப்பு, கங்கை நீரை தூய்மையாக்கும் திட்டம், சேது சமுத்திரத் திட்டதைக் கைவிடுவது என்பதிலும், சமரசத்துக்கு இடமில்லை என்கிறார். உ.பி. தேர்தல் பிரச்சாரத்தில் வாக்காளர்களை ஏமாற்ற மோடி, இராமன் கோயில் பிரச்சினையை பேசாமல் தவிர்த்தாலும் ஜோஷி உண்மையைப் போட்டு உடைத்துவிட்டார்.

– இரா

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 24th October 2013

OWNER & PUBLISHER & EDITOR : K. RAJENDRAN, PUBLISHED AT 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | அக்டோபர் 31, 2013 | புரட்சி 12 | முழக்கம் 42 | விலை: ரூ.3.00

## கலை நிகழ்வுகள் – மலர் வெளியீடு – சுவையான திராவிடர் உணவுகளுடன்

# களை கட்டியது திராவிடர் வாழ்வியல் விழா

இந்து வேத வாழ்வியலுக்கு எதிரான பெரியாரியல் வாழ்வியலை நடைமுறைப்படுத்தும் விழா, ‘திராவிடர் வாழ்வியல் விழா’ என திருப்பூரில் சுயமரியாதைக் கலைப் பண்பாட்டுக் கழகம் சார்பில், திராவிடர் வாழ்வியல் விழா- திராவிடர் உணவு விழா-கருந்திணை 2013 நிகழ்ச்சியில் திராவிடர் பண்பாட்டு மலரினை வெளியிட்டு திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி குறிப்பிட்டார்.



சுயமரியாதைக் கலைப் பண்பாட்டுக் கழகம் சார்பில் அக்டோபர் 20 ஞாயிற்றுக்கிழமை திருப்பூர் காவேரி அம்மன் திருமண அரங்கத்தில் கருந்திணை 2013 என்ற பெயரில், திராவிடர் வாழ்வியல் விழாவும் திராவிடர் உணவு விழாவும் எழுச்சியோடு நடைபெற்றது. விழாவின் துவக்கத்தில் மேட்டூர் கருப்பரசன் குழுவினரின் பறை முழக்கம் அரங்கத்தை அதிர வைத்தது. தொடர்ந்து சுயமரியாதைக் கலைப் பண்பாட்டு கழகத்தின் கோவை மாவட்ட அமைப்பாளர் அ.ப. சிவா, திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாநில பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன், கழகப் பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகச் செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, சுயமரியாதைக் கலைப் பண்பாட்டுக் கழக சேலம் மண்டல அமைப்பாளர் கொளத்தூர் குமார் ஆகியோர் திராவிடர் வாழ்வியல் உறுதிமொழியை முன்மொழிய கழகத் தோழர்கள் உரத்தக் குரலில் வழிமொழிந்து உறுதியேற்றனர்.

திராவிடர் வாழ்வியல் குறித்து, திராவிடர் பண்பாட்டு மலர் வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திராவிடர் பண்பாட்டு மலரை வெளியிட்டார். ஜாதி மறுப்பு வாழ்வியலை ஏற்றுக் கொண்ட காதலர்களின் பிரதிநிதியாக கோவை இசைமதி மலரைப் பெற்றுக் கொண்டார். நூலின் முதல்படியினை தூத்துக்குடி பால் பிரபாகரன், ஈரோடு இரத்தினசாமி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.



மலரினை வெளியிட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தனது உரையில், ‘சுயமரியாதைக் கலைப் பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் நடைபெறும் திராவிடர் வாழ்வியல் விழா, திராவிடர் உணவு விழா, திராவிட பண்பாட்டு மலர் வெளியீட்டு விழா ஆகியவை சாதி மறுப்பு திருமணம் செய்தவர்கள், செய்யப் போகிறவர்கள், செய்து வைக்க உள்ளவர்களுக்கான பண்பாட்டை செயலாக்கும் ஒரு புதிய முயற்சி, இந்து வேத வாழ்வியலுக்கு எதிரான பெரியாரியல் வாழ்வியலை நடைமுறைப்படுத்தும் நிகழ்ச்சியாக திராவிடர் வாழ்வியல் விழா அமைந்திருக்கிறது” என குறிப்பிட்டு உரையாற்றினார்.

உடுமலைப்பட்டை மலரினியன், தனது மரண ஆவணத்தை வெளியிட்டார். அவர் தனது உரையில், “வாழும் காலத்தில் கொள்கைப் பிடிப்போடு வாழ்ந்த பெரியாரியல்வாதிகள்கூட சாகும்போது உறவுகளாலும், குடும்பத்தாலும் சாதி, மதக் குறிகளுடன் சில நேரங்களில் அடக்கம் செய்யப்படுகிறார்கள். இந்த இழிநிலை மாற எனது முயற்சியாக மரண ஆவணம் என்ற ஆவணத்தை எழுதி, எனது மரண சாசனமாக சார்பதிவாளர் அலுவலகம் சென்று பதிவு செய்துவிட்டேன்” என பலத்த கரவொலிக் கிடையே அறிவித்தார்.

‘தலித் முரசு’ ஏட்டின் ஆசிரியர் புனிதப்பாண்டியன், ம.தி.மு.க. பனியன் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பொதுச் செயலாளர் க. இராமகிருட்டிணன், ம.தி.மு.க. மாவட்டப் பொருளாளர் மு.ஈசுவரன், திராவிடர் கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், ஆதித் தமிழர் பேரவை, தோழர் ஓவியாவின் ‘புதிய குரல்’, விடுதலைச் சிறுத்தைகள், புரட்சிகர இளைஞர் முன்னணி, திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற பல்வேறு அமைப்புகளின் தோழர்களும் விழாவில் பங்கேற்றனர் திருப்பூர், பல்லடம், கோவை, மேட்டூர், கொளத்தூர், சேலம், ஈரோடு, கோபி, கரூர், உடுமலை, திண்டுக்கல், ஏற்காடு, கணியூர், பழனி ஆகிய பகுதிகளிலிருந்து தனி வேன்களிலும் வாகனங்களிலும் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் பெருந் திரளாகக் கலந்து கொண்டனர்.

மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின் இன்னிசையும், திராவிடர் கலைக் குழுவின் வீதி நாடகங்களும், கழகக் குடும்பங்களின் குழந்தைகள் பங்கு பெற்ற கலை வெளிப்பாடுகளும் மாற்றி மாற்றி அரங்கேற்றப்பட்டன. பழனி திராவிடன் கராத்தே மற்றும் ஜவகர் தாய்ச்சி ஆகிய தற்காப்பு கலைகளை நிகழ்த்திக் காட்டினர்.

விழாவில், வந்திருந்த அனைவருக்கும் திராவிடர் உணவான மாட்டுக்கறி பிரியாணி, மாடு வால் சூப்பு, மாட்டுக்கறி மிளகு வறுவல், தேன் நெல்லி சோறு, கொள்ளு ரசம் உட்பட பல்வேறு உணவு வகைகள் பரிமாறப்பட்டன.

### குறும்படப் போட்டி

பிற்பகல் மூன்று மணியளவில் சுயமரியாதைக் கலைப் பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் கோபி அர்ஜுனன் தலைமையில் சாதி, மத, கடவுள், மூடநம்பிக்கைக்கு எதிராக பெரியாரியல் கருத்தினை மக்கள் மனதில் எளிய வகையில் பதிய வைக்கும் வகையில் வீதி நாடகம் தொடங்கியது. குமரேசன், பிரபு, சந்திரசேகரன், மணிகண்டன் ஆகியோரின் எளிமையான நடிப்பு, குழுமியிருந்த மக்களிடம் விழிப்புணர்வை தூண்டியது. சாதி, மத சடங்குகள், கடவுள் மறுப்பு, உணவு, உடை, இருப்பிடம், கலை இலக்கியங்களில் தீண்டாமை எதிர்ப்பு குறித்து சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட குறும்படப் போட்டியில் வெற்றிப் பெற்ற படைப்புகளுக்கு பரிசளிப்புப் பாராட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. போட்டியில் சைமன் ஜார்ஜ் இயக்கிய ‘செவ்வாழை’, மகராஜன் இயக்கிய ‘போதி விருட்சா’, துளசிதாசன் இயக்கிய ‘அஞ்சனவித்தை’, மணிமாறன் இயக்கிய ‘18 தீக்குச்சிகள்’, பொன்ராசு இயக்கிய ‘ஒரு ஊருல’ ஆகிய ஐந்து படைப்புகள் சிறந்த குறும்படங்களாக தேர்வு செய்யப்பட்டன.

தோழர் கவிக்குமார் இயக்கிய ‘உறவின் கதை’, பாலாஜி இயக்கிய ‘டூல்’ ஆகிய இரு குறும்படங்கள் சிறப்புப் பரிசு பெற்றன. வெற்றி பெற்ற படைப் பாளிகளைப் பாராட்டி, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தலா இரண்டாயிரம் வீதம் பரிசளித்து சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். சிறப்புப் பரிசு பெற்ற இரண்டு குறும்படங்களுக்கு தலா ஆயிரம் வழங்கப்பட்டது. பின்னர் வெற்றி பெற்ற படைப் பாளிகளின் குறும்படங்கள் பார்வையாளர்களுக்கு திரையிட்டு காட்டப்பட்டது. இறுதியாக சுயமரியாதைச் சுடரொளி மேட்டூர் கருப்பரசன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## களமிறங்கிய தோழர்களைப் பாராட்டுகிறோம்!

அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜை போன்ற மதச் சடங்குகளை கொண்டாடக் கூடாது என்று திராவிடர் விடுதலைக் கழகம் களத்தில் இறங்கி செயல்பட்டது. ஆர்ப்பாட்டங்கள், துண்டறிக்கைகள் வழங்குதல், பரப்புரைகள் என்று பல்வேறு களங்களில் கருத்துகளைக் கொண்டு சென்றதோடு, அலுவலகங்களுக்கும் அரசு ஆணைகள், நீதிமன்றத் தீர்ப்புகளை சுட்டிக்காட்டி, தோழர்கள் வேண்டுகோள் கடிதங்களையும் கையளித்தனர். இந்த களச் செயல்பாடுகளுக்காக மயிலாடுதுறை, மேட்டுப்பாளையம், கிணத்துக்கடவு போன்ற ஊர்களில் தோழர்கள் கைது செய்யப்பட்டு 13 நாட்கள் சிறைவாசத்துக்குப் பின் பிணையில் வெளி வந்துள்ளனர்.

மதவெறி சக்திகள் அரசியலில் தலைதூக்கக் கூடாது; அது ஆபத்தானது என்று பல்வேறு அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் பேசி வந்தாலும்கூட, அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு நிகழ்வுகளில் மதச் சடங்குகள் ஊடுருவி நிற்பதைக் கண்டிக்கத் தயாராக இல்லை என்பதே கசப்பான உண்மை. இத்தகைய நிகழ்வுகளின் வழியாகவே அரசு நிர்வாகக் கட்டமைப்பு, மத உணர்வுகளோடு இணைக்கப் படுகிறது. மத உணர்வுகள் ஜாதியத்தோடு நெருங்கி நிற்கிறது. அது தலித், முஸ்லிம்கள், பெண்கள் மீதான அடக்குமுறைகளுக்கு நியாயங்கள் கற்பிக்கும் உளவியலுக்கு இழுத்துச் செல்கிறது.

தமிழ்நாட்டில் மதவெறி சக்திகள் காலூன்ற முடியாமல் தடுத்து நிறுத்தியதில் பெரியாரும் அவர் இயக்கமும் கடந்த காலங்களில் நடத்திய பார்ப்பனிய மத எதிர்ப்புப் போராட்டங்களும் இயக்கங்களும் ஊர் ஊராகச் சென்று மக்களை சந்தித்து பெரியார் நிகழ்த்திய உரையாடலுமே அடித்தளம் அமைத்துத் தந்தது. கடும் எதிர்நீச்சல் போடக் கூடிய – ஊடகங்களின் விளம்பர வெளிச்சங்கள் கிடைக்காத இந்த அடிப்படைக் கடமைகளாற்றுவதில் பலரும் ஒதுங்கிக் கொண்டு விடுகிறார்கள்.

சமூக நீரோட்டத் தோடு இணைந்து நிற்கக் கூடிய விளம்பரமும் வரவேற்பும் கிடைக்கக் கூடிய பாதுகாப்பான செயல்பாடுகளோடு தங்கள் கடமைகளில் திருப்தி அடைந்து விடுகிறார்கள். தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்ட இந்த பாதுகாப்பான செயல்பாடுகள்தான் தமிழகத்தில் பெரியார் முன்னெடுத்துச் சென்ற கொள்கைகளை நீர்த்துப் போகச் செய்யும் சூழலுக்கு உந்தப்பட்டு மத ஆதரவு சக்திகள் வேர் பிடிக்கும் நிலை வந்து சேர்ந்துவிட்டது.

மூடநம்பிக்கை ஒழிப்புப் பரப்புரையானாலும் பார்ப்பனிய மத இழிவுகளுக்கு எதிரான இயக்கங்களானாலும் அவைகள் அரசுகளால் தடைப்படுத்தப்படுகின்றன. இந்த முட்டுக் கட்டைகளை எதிர்கொண்டு அதற்கான விலைகளைத் தருவதற்கு தயாராக வேண்டும் என்பதே – வரலாறு – பெரியாரியல்வாதிகளுக்கு வழங்கியிருக்கும் கட்டளை. இந்த நியாயங் களுக்கு முகம் கொடுத்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் கொள்கை உறுதி மிக்க தோழர்கள் – மனு சாஸ்திர எரிப்பு, ஜாதி தீண்டாமை எதிர்ப்பு, அரசு நிர்வாகத்தில் ஊடுருவும் மதவாத எதிர்ப்பு என்ற கொள்கைத் தளத்தில் தங்களை அர்ப்பணித்து வருகிறார்கள்.

கசப்பான கொள்கை மருந்துகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் கடமைதான் உண்மையான பெரியாரியத்துக்கான பால பாடம். அப்படித்தான் பெரியார் இந்த மண்ணைப் பக்குவப்படுத்தினார்.

அந்தக் கடமையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு களமிறங்கி செயல்பட்டு சிறை சென்று மீண்டிருக்கும் கொள்கைத் தோழர்களை திராவிடர் விடுதலைக் கழகம் பாராட்டுகிறது; வரவேற்கிறது.

# அய்.நா. தரும் ஒப்புதல் வாக்குமூலம்

*[பல்வேறு செய்தி ஏடுகளில் புதைந்து கிடக்கும் செய்திகள், சிந்தனைகளைத் தேடிப் பிடித்து வாசகர்களின் சிந்தனைக்கு தொகுப்பாக முன் வைக்கப்படுகிறது.]*

ஊடகங்கள் பெரிதுபடுத்தாமல் ஒன்றிரண்டு ஆங்கில இதழ்களோடு நின்று போன ஒரு முக்கிய செய்தி இது. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடந்தபோது அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அய்.நா. எந்த முயற்சியும் எடுக்காமல் வேடிக்கைப் பார்த்து வந்தது என்ற குற்றச்சாட்டை இப்போது அய்.நா.வே ஒப்புக் கொண்டுள்ளது. அய்.நா.வில் அதன் பொதுச் செயலாளர் பான்கி மூன், அவரது ஆலாசகர் என்ற பொறுப்பில் இருந்த விஜய் நம்பியார் என்ற இந்தியாவைச் சார்ந்த மலையாள அதிகாரி, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, அய்.நா.வின் பல்வேறு பிரிவுகள் இனப் படுகொலையின்போது மேற் கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளை செய்ய விடாமல் முடக்கினார். இது குறித்த விரிவான தகவலை ஏற்கனவே ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பதிவு செய்திருக்கிறது. அவ்வளவும் உண்மைதான் என்பது இப்போது வெட்டவெளிச்சமாகியிருக்கிறது. ஈழத்தில் நடந்த இறுதிப் போரில் அய்.நா.வின் அமைப்புகள் தங்கள் கடமைகளை ஆற்றுவதில் தோல்வி அடைந்துவிட்டன என்று அய்.நா. பொதுச் செயலாளர் பான்கி மூன் அதன் 68 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கடந்த செப்டம்பர் 24 ஆம் தேதி பேசும்போது குறிப்பிட்டார். அய்.நா. தனது கடமையாற்ற அதன் உறுப்பு நாடுகளும் ஒத்துழைக்க வில்லை என்றும் குற்றம் சாட்டியிருக்கிறார். அய்.நா. இப்படி வெளிப்படையாக தனது தவறை ஒப்புக் கொள்வது வெகு அபூர்வமான சம்பவமாகும் என்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது. பான்கி மூன் இதைப் பேசும் போது இலங்கை அதிபர் ராஜ பக்சேவும் அந்தக் கூட்டத்தில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் அய்.நா. செயல்பாடுகள் குறித்து உள்ளக விசாரணை குழு ஒற்றை பான்கி மூன் 2012இல் நியமித்தார். சார்லால் பெட்ரி என்ற அதிகாரி தலைமையில் நியமிக்கப்பட்ட குழு 8 மாதங்கள் ஆய்வு நடத்தி விரிவான அறிக்கையைத் தயாரித்தது. அய்.நா.வின் பல்வேறு பிரிவுகளுக்கிடையே இறுதி கட்டப் போரில் தயாரிக்கப்பட்ட குறிப்புகள், பதிவுகள், இலங்கை அரசுடன் நடந்த பரிமாற்றங்கள் தொடர்பாக 7000 ஆவணங்களை பெட்ரி குழு கவனமாக பரிசீலித்தது. மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளையும், அய்.நா.வின் அதிகாரிகளையும் சந்தித்து கருத்துகளைக் கேட்டதோடு, வேறு பிற நாடுகளில் இத்தகைய மோதல்கள் நடந்த காலத்தில் அய்.நா.வின் செயல்பாடுகள் எப்படி இருந்தன என்பதையும் ஆய்வு செய்தது. உணவு, மருந்துப் பொருள்களை அனுப்ப வேண்டிய கடமையை செய்ய மறுத்தது. போரில் இறந்தவர்களின் உண்மையான எண்ணிக்கையை பதிவு செய்யாமல் மறைந்தது. இலங்கை அரசு ஆலோசனையைப் பெற்று செயல்பட்டது. அய்.நா.வின் மனித உரிமை அமைப்பு மவுனமாக்கப்பட்டது. பாதுகாப்புக் கவுன்சிலில் இது குறித்த விவாதம் வராமல் தடுத்தது என பல்வேறு முறைகேடுகளில் அய்.நா. ஈடுபட்டது என்பதையெல்லாம் (பார்க்க: மார்ச் 7, 2013, ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’) பதிவு செய்திருக்கிறது. அய்.நா. அமைப்பின் உறுப்புகள் தோல்வி அடைந்துவிட்டது என்று ஒப்புக்கொண்ட பான்கி மூன், இது குறித்து மூத்த அதிகாரிகள் குழு பரிசீலிக்கும் என்கிறார். குதிரை ஓடிய பிறகு லாயத்தை இழுத்துப் பூட்டு கிறார்கள், இந்த மேதாவிகள்! இழந்த உயிர்களை இவர்களால் திருப்பித் தர இயலுமா?

### மதங்களுக்கு சவால் விடும் அறிவியல்

கடவுள், மதங்கள் காலத்துக்கு பொருந்தி வராதவை என்று பேராசிரியர் வசந்த் நடராசன் ‘இந்து’ ஆங்கில நாளேட்டில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தைப் ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம். பார்ப்பனர்கள் பழமைவாதிகளிடமிருந்து கடுமையான எதிர்ப்பைச் சந்தித்தது அக்கட்டுரை. அதே ‘இந்து’ ஏட்டில் பல மறுப்புக் கட்டுரைகள் வெளி வந்தன.

அதில், பேராசிரியர் நடராசனின் கடவுள், மத மறுப்பு கருத்துகளுக்கு ஆதரவு தெரிவித்து, ஜிரேந்திர சர்மா என்ற ஆய்வாளர், ஒரு கட்டுரை எழுதியுள்ளார். மதம் குறித்து அடிப்படையான கேள்விகளை எழுப்புகிறது அவரது கட்டுரை. கட்டுரை சுருக்கம் இதுதான்:

“மதத்துக்கும் அறிவியலுக்குமான முரண்பாடுகள் வெடித்து வருகின்றன. இதில் மதம் தொடர்பாக முன்வைக்கப்பட்டு வந்த கருத்துகள் தாக்குப் பிடிக்க முடியாமல் தடுமாறுகின்றன. நவீன வாழ்க்கையின் தத்துவங்கள் இரண்டு. ஒன்று சமத்துவம்; மற்றொன்று சுதந்திரம். இரண்டுமே மதத்துக்கு எதிரானவைதான் சமூக மாற்றத்தை மதப் பழமைவாதிகளால் ஏற்க முடியவில்லை. 19 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதம் மாற்றங்களை எதிர்த்தது. இப்போது கணினி யுகத்தில் இஸ்லாம் மாற்றங்களை எதிர்க்கிறது. ஜாதி, மதம், பால், இனம், வாழும் நாடு, அல்லது மதம் போன்ற மனிதப் பிரிவுகளில் தனித்துவமான குருதி அடையாளம் எதுவும் கிடையாது. ஜனநாயகம், சமத்துவம் என்ற கொள்கைகள் ‘தங்களுக்கான தனியான அடையாளம்’ என்ற மதக் கோட்பாட்டை தகர்த்துவிட்டன. எந்த ஒரு மதமும் அதன் புனித நூலும் அனைத்து மக்களும் சமமானவர்கள் என்ற கருத்தை முன்வைக்கவில்லை. உண்மையில் ஒவ் வொரு மதமும் அந்த மதத்தைப் பின்பற்றுபவர் களுக்காக மட்டுமே - சொர்க்கத்தையும் ஆன்மிக விடுதலையையும் மோட்சத்தையும் பேசுகிறது. மனித சமூகம் அத்தனையும் உள்ளடக்கி அவர்களுக்கான சிவில் உரிமைகளைப் பேசக்கூடிய ஒரு மதம்கூட இல்லை. அதே போல் பாகுபாடுகள் இல்லாத ஒரு சமூக அமைப்பைக்கூறும் ஒரு மதம் கூட உலகத்தில் கிடையாது. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களை கொலை செய்யக் கூடாது என்று கூறும் மதமோ, ஒரு பெண்ணை பாலுறவு வன்முறைக்கு உட்படுத்தக் கூடாது; கல்லால் அடித்து சாகடிக்கக் கூடாது என்று கூறுகிற மதமோ கிடையாது.

பெண்களையும், பலவீனமானவர்களையும் சமஉரிமையோடு மாண்போடு நடத்தும் மனித நேயம், எந்த மதவாதிகளிடமும் இல்லை. நீ ஏழையாகவோ தீண்டத்தகாதவனாகவோ, பெண்ணாகவோ பிறந்தால் அது கடந்த ஜென்மத்தில் செய்த பாவம் என்று நியாயப்படுத்துகிறது, இந்து மத நம்பிக்கை. சட்டம் தடை செய்தாலும் ‘சதி’யைப் போற்று கிறவர்களும், ஜாதி பஞ்சாயத்து நடத்துகிறவர்களும் இந்து தீவிரவாதிகளாக இருக்கிறார்கள். தொண்டு செய்ய வந்த ஆஸ்திரேலிய மருத்துவரை குழந்தை களோடு கொளுத்தியது இந்து தீவிரவாதம்தானே! இந்த கிரிமினல் குற்றங்களை எந்த இந்துப் புனிதத் தலவரும் கண்டிக்கவில்லை. இஸ்லாமிய ‘ஜிகாத்’ ஆதரவற்ற பெண்களை கல்லால் அடித்துக் கொலை செய்கிறது. வங்க தேசத்தில் பெண்களையும் அதன் அதிபர் முஜிபுர் ரஹ்மான் குடும்பத்தையும் கோரமாகக் கொலை செய்தது இஸ்லாமிய மதவாதம் தான். தஸ்லீமா நசிரின் இஸ்லாமியக் கொள்கைகளை விமர்சித்ததற்காக அவருக்கு கொலை மிரட்டல் விடுப்பதும் அதே மதவாதம்தான். ஆப்கானிஸ்தானில் முதல் பெண் போலீஸ் அதிகாரியாக வந்தவர் மலாலாய் கக்கார்; 40 வயதான அந்தப் பெண், 6 குழந்தைகளுக்குத் தாய். முஸ்லீம்கள் பெரும் பான்மையாக வாழும் ஆப்கானிஸ்தானில் பெண்கள் குழந்தைகள் மீது இழைக்கப்படும் குற்றங்களை அவர் ஆய்வு செய்தார் என்பதற்காக தாலிபான் தீவிரவாதிகள் அவரை சுட்டுக் கொன்றார்கள். அரசும் மதமும் தனித்தனியாக பிரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை எந்த மதமும் ஏற்கவில்லை. மேற்குலத்தில் போப்பின் செல்வாக்கு கொடிகட்டி பறந்த போது கிறிஸ்தவ உலகம், இந்தப் பிரச்சினையை கடுமையாக எதிர்கொள்ள வேண்டியிருந்தது. சமூகத்தை மறுகட்டமைப்புக்கு உள்ளாக்கி வரும் அறிவியலின் சவாலை மதத்தின் அடிப்படையிலான அரசியலால் எதிர்கொள்ளவே முடியாது அவர்கள் நிச்சயம் தோற்பார்கள்” - என்று அந்தக் கட்டுரை கூறுகிறது.

### ஜெய்ராம் ரமேஷ் கூறுகிறார்

மத்திய ஊரகத் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், சென்னையில் நூல் வெளியீட்டு விழாவில் வெளியிட்டுள்ள ஒரு கருத்து மிகவும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும். “தமிழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு வலுவாக உள்ளதால், வளர்ச்சிப் பாதையில் பெரும் முன்னேற்றம் கண்டு வருகிறது. நாடு சுதந்திரம் பெற்றபோது மாநிலங்கள் வரிசையில் 9 ஆவது இடத்தில் இருந்த தமிழகம், தற்போது 4 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. சுதந்திரம் அடைந்தபோது 2 ஆவது இடத்தில் இருந்த மேற்கு வங்கம், தற்போது 9 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. சுதந்திரம் அடைந்த போது கடைசி இடத்தில் இருந்த பீகார் இன்றும் அப்படியே இருக்கிறது. ஆட்சிகள் மாறலாம்; அரசியல்வாதிகள் வந்து போகலாம். ஆனால், நிர்வாக முறையை வலுவாக உருவாக்க வேண்டும். அதைத் தமிழக நிர்வாகக் கட்டமைப்பு செய்துள்ளது” என்று குறிப் பிட்டுள்ளார். தமிழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு, இடஒதுக்கீடு என்ற சமூக நீதித் தளத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பது, அமைச்சர் குறிப்பிட மறந்த செய்தி.

(3 ஆம் பக்கம்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 31.10.2013

# வினாக்கள்... விடைகள்...

+ ஏழுமலையான் கோயிலுக்கு பயங்கரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதால் திருப்பதி தேவஸ் தானத்துக்கு சொந்தமான அனைத்துக் கோயில் களிலும் கண்காணிப்புக் கேமிரா நிறுவ முடிவு.

**– செய்தி**

அருமையான யோசனை. அப்படியே அர்ச்சர் களுக்கும் ஒரு துப்பாக்கியை குடுத்துடுங்க. இடுப்புல செருகிக் கொண்டே அர்ச்சனை செய்வாங்கல்ல!

+ திருவில்லிபுத்தூர் கம்மாபட்டி கிராம மக்கள் மழை வருவதற்காக இரண்டு கழுதைகளுக்கு திருமணம் செய்து, மணமக்கள் ஊர்வலத்தை நடத்தி தடபுடலாக விருந்து வைத்தார்கள். **– செய்தி**

எப்படியோ 'மங்கள' காரியம் நல்லவிதமா முடிஞ்சுடுச்சு' கழுதை குடும்பத்துக்குள்ள ஜாதிப் பிரச்சினை வந்து தகப்பன் கழுதை மண்டையப் போடாம பாத்துக்குங்க.

+ புனே சிறையில் காந்தி பயன்படுத்திய இராட்டை லண்டனில் அடுத்த மாதம் ஏலம். **– செய்தி**

இராட்டையை ஏலம் விட்டது சரி; ஆனா, காந்தி உடம்பில் பாய்ந்த கோட்சேயின் துப்பாக்கிக் குண்டு இருந்தா, அதையும் ஏலம் விட்டுடாதீங்க; ஆர்.எஸ்.எஸ். சொத்தை அவர்களிடமே திருப்பித் தந்துருங்க. அதுதான் கவுரவம்.

+ சென்னை பீர்க்கன்கரணை ஊராட்சியில் சோலார் விளக்கு வசதியுடன் கூடிய 'நம்ம டாய்லெட்'டை அமைச்சர் சின்னய்யா திறந்து வைத்தார். **– செய்தி**

பீர்க்கன்கரணை டாய்லெட்டுக்கு பிரிட்டிஷ் காரனா விமானம் ஏறி வரப்போறான்? 'கழிவறை'ன்னு தமிழில் எழுதி வையுங்கய்யா...

+ மருத்துவர் ராமதாசு தேர்தலுக்கு சமூக 'ஜனநாயக் கூட்டணி'யை அமைத்துள்ளார். ஆனால், கூட்டணியில் இடம் பெறும் அமைப்புகளை அறிவிக்கவில்லை.

**– செய்தி**

அப்படியெல்லாம் அறிவிப்பதற்கு இது என்ன சாதாரண ஜனநாயகமா? 'சமூக ஜனநாயகம்'; புரிஞ்சுக்குங்க!

+ சபரிமலை அய்யப்பன் தரிசனத்துக்கு பக்தர்கள் 'ஆன்லைனில்' முன்பதிவு செய்யலாம்.

**– கேரள காவல்துறை அறிவிப்பு**

'ஆண் லைன்' தரிசனமே வந்துவிட்டது. ஆனா, 'பெண் லைன்' தரிசனத்துக்கு மட்டும் அனுமதிக்க மாட்டீங்க...

+ கேரளாவில் அரசு வேலை பெற வேண்டுமானால் – மலையாள மொழித் திறமை அவசியம்.

**– மாநில அமைச்சரவை முடிவு**

கேரளாவில் மட்டும்தான் முடியுமா, என்ன? நாங்களும் எங்கள் மாநிலத்திலும் மலையாள மொழித் திறமை வேண்டும் என்று தீர்மானம் போடுவோங்க!

+ உ.பி.யில் சாமியார் கனவில் வந்த மன்னர் கூறியதுபோல் தங்கப் புதையல் கிடைக்கவில்லை; சாமியார் என்ன சொல்லப் போகிறார்?

**– செய்தி**

வேறு என்ன சொல்வார்? அடுத்த முறை கனவில் மன்னர் வந்தால் என்னை ஏன் ஏமாற்றினாய் என்று கேட்பதாகக் கூறுவார்!

+ 'இறைவன் என் கண்முன் தோன்றி எனது பக்தன் கணபதியிடம் ரூ.50,000 வாங்கிக் கொள்ளுமாறு' வீட்டுக்கு வந்த சாமியார் கூற்றை நம்பி, கும்மிடிபூண்டி பெரிய புலியூர் கிராமத்தைச் சார்ந்த பக்தர் கணபதி ரூ.50,000–த்தை எடுத்துக் கொடுத்தார். அதன் பிறகு வந்தது போலி சாமியார் என்று தெரிந்து பக்தர் போலீசில் புகார் கொடுத்துள்ளார்.

**– 'இந்து' ஏட்டின் செய்தி**

ஒரு தாழ்மையான யோசனை! இனிமேல், இறைவன் இப்படி தரகர்களை அனுப்பினால், பக்தர்கள் ரொக்கமாக கொடுக்காமல் காசோலை களாக செலுத்தப் பழகிக் கொள்ளுங்கள். காசோலைதான் இறைவனுக்கு நேராகப் போய்ச் சேருமாம்.

+ ரூ.10 கோடி செலவில் பெரியாருக்கு 95 அடி உயரத்தில் சிலை.

**– தி.க. தலைவர் கி.வீரமணி அறிவிப்பு**

'முன்னொரு காலத்தில் ஜாதி, மதம், கடவுளை எதிர்த்து போராட்டங்கள் நடந்தன. அதன் நினைவாக இந்த 95 அடி சிலை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது' என்று கீழே எழுதிப் போடாமல் இருந்தால் சரி!

# 'ஜாதி'க்கு எதிராகக் குரல் கொடுக்கிறது அய்ரோப்பிய நாடாளுமன்றம்

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ஜா**தி அமைப்புகளை ஒன்று திரட்டிக் கொண்டு தலித் மக்களுக்கு எதிராக மருத்துவர் ராமதாசு களமிறங்கியிருக்கிறார். பார்ப்பனிய வாதிகள் மதத்தின் தீண்டாமையையும் வழிபாட்டின் தீண்டாமையையும் சமூகத்தில் 'மேல்-கீழ்' தன்மையையும், சாஸ்திரம், ஆகமம், சடங்கு, வாழ்க்கை முறைகளில் தொடர்ந்து காப்பாற்றிக் கொண்டிருக்கின்றனர். இந்த நாட்டிலிருந்து அய்ரோப்பிய நாடுகளுக்குப் போன பார்ப்பனர்கள், ஜாதியவாதிகள் தங்களுடன் ஜாதியையும் கொண்டுச் சென்றனர். அய்ரோப்பிய நவீன வாழ்க்கை ஒரு பக்கம்; பார்ப்பனிய ஜாதி வேற்றுமைகளைக் கட்டிக்காப்பது மற்றொருபுறம் என்ற இரட்டை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், பார்ப்பன இந்தியாவைப் போல், ஜாதியைப் பாதுகாக்க அய்ரோப்பிய நாடுகள் தயாராக இல்லை. 28 நாடுகளைக் கொண்ட அய்ரோப்பிய ஒன்றியம், ஜாதிக்கு எதிராக இப்போது போர்க்கொடி உயர்த்தி விட்டது. ஜாதி அடிப்படையில் காட்டப்படும் பாகுபாடுகள் மனித உரிமை மீறல்கள்; சர்வதேசக் கேடு (Global Evil) என்று அய்ரோப்பிய நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றிக் கண்டித்துள்ளது.

கடந்த அக்டோபர் 10 ஆம் தேதி அய்ரோப்பிய நாடாளுமன்றம், இது குறித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஜாதியால் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் 'தீண்டாமை'க்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள் என்றும், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், பங்களா தேஷ், இலங்கை ஆகிய நாடுகளில் தீண்டாமை தொடருகிறது என்றும் தீர்மானம் கூறுகிறது. செய்யும் தொழில், பாரம்பர்யம் என்ற அடிப்படையிலும் இந்தப் பாகுபாடு ஏமன், நைஜிரியா, செனகல், சோமாலியா ஆகிய நாடுகளிலும் தொடருவதாக தீர்மானம் கூறுகிறது. கடந்த ஆண்டு டிசம்பர் இறுதியில் இந்தியாவில் ஜாதி அடிப்படையில் தலித் மக்கள் மீது மனித உரிமை மீறல்கள் நடப்பதைக் கண்டித்து, இதேபோல் அய்ரோப்பிய நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், உலகம் முழுதும் ஜாதி அடிப்படையில் உள்ள பாகுபாடுகளையும் தலித் மக்கள் மீது குறிப்பாக பெண்கள் மீது நடத்தப்படும், ஜாதி தொடர்பான வன்முறைகளை சுட்டிக்காட்டி கண்டித்துள்ளது. பெண்கள் மற்றும் தலித் பெண்கள் மீது சமூகத்தில் ஜாதி அமைப்பு காரணமாக வன்முறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. தங்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் அல்லது சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தில் பாதிக்கப்பட்டவர்களே வெளியிடத் தயங்குகிறார்கள். இதனால், தலித் பெண்கள் மைனாரிட்டி சமூகப் பெண்கள் கட்டாய மதமாற்றத்துக்கு தள்ளப்படுகிறார்கள். கடத்தப்படுகிறார்கள், பாலியல் சந்தையில் விற்பனைப் பொருளாக தள்ளப்படுகிறார்கள்.

ஜாதி அடிப்படையிலான பாகுபாடுகளால் உலகம் முழுதும் 260 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சில அரசுகள் இதைத் தடுக்க சட்டங்கள் நிறைவேற்றி பாதுகாப்புத் தர முன்வந்தாலும் அதையும் மீறி இந்த மனித உரிமை மீறல் தொடருகிறது.

குறிப்பாக புலம் பெயர்ந்து வந்த சமூகங்களில் ஜாதியப் பாகுபாடுகளும் தீண்டாமைகளும் நீடிப்பது கண்டறியப்பட்டுள்ளது. நவீன வடிவங்களில் தீண்டாமை பின்பற்றப் படுகிறது. உழைப்புச் சந்தையில் (வர்த்தகம் வேலை வாய்ப்புகளில்) பாதிக்கப்பட்ட சமூகத்தினர் பங்கேற்க முடியாமல், புறக்கணிக்கப்படுகின்றனர். இந்தியா போன்ற சில நாடுகளில் இட ஒதுக்கீடு போன்ற சட்டபூர்வ நடவடிக்கைகள் பொதுத் துறைகளில் தலித் மக்களின் பங்கேற்பை ஓரளவு உறுதி செய்துள்ளது என்றாலும், தனியார் துறைகளில் புறக்கணிப்பும், விலக்கி வைப்பதும் தொடர்கிறது.

தெற்கு ஆசியாவில் கொத்தடிமைகளாக பலியானவர்களில் பெரும்பகுதியினர் பட்டியல் இனத்தவராகவும், பழங்குடியினராகவும் இருக்கின்றனர் என்று சர்வதேச தொழிலாளர் நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. இதன் காரணமாக உலகம் முழுதும் தொழில் நடத்தும் அய்ரோப்பிய நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் உடல் உழைப்பாளர்களாக இந்த மக்களே தள்ளப்படுகின்றனர். விவசாயம், சுரங்கம், ஆயத்த ஆடை தயாரிப்பு போன்ற வேலைகளில் ஈடுபடுவோரில் இந்த மக்களே அதிகம் என்று அய்ரோப்பிய நாடாளுமன்றத்தின் தீர்மானம் கூறுகின்றது. 'தலித் மனித உரிமைக்கான தேசிய இயக்கம்' இந்தத் தீர்மானத்தை வரவேற்றுள்ளது. இந்த மிக முக்கிய செய்தியை தமிழில் வெளிவரும் நாளேடுகளோ, தொலைக் காட்சி ஊடகங்களோ இருட்டடிப்பு செய்துவிட்டன.

'ஜாதித் தேவைதான்' என்று சில தமிழ் அமைப்புகள் வெளிப்படையாகப் பேசக் கிளம்பியிருக்கின்றன. மருத்துவர் ராமதாஸ், ஜாதிய சக்திகளை அணி திரட்டி, தலித் மக்களுக்கு எதிராகவும், ஜாதிக் கலப்பு திருமணங்களுக்கு எதிராகவும் செயல்படும் நிலையில், அய்ரோப்பிய நாடாளுமன்றம் ஜாதிக்கு எதிராக போர்க் கொடி உயர்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பெரியார் தொடங்கிய ஜாதி எதிர்ப்பு இயக்கமும் இட ஒதுக்கீடு உரிமை இயக்கமும் அய்ரோப்பிய நாடாளுமன்றத்தின் குரலாகவே ஒலித்திருப்பது பெரியாரியத்துக்கு கிடைத்த வெற்றியாகும்.

### 1949இல் ஆர்.எஸ்.எஸ். தந்த உறுதி

**கா**ந்தி, கோட்சே எனும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனரால் படுகொலை செய்யப்பட்டவுடன், இந்திய அரசால் ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப்பட்டது. தடையை நீக்க, ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள், நேரு, பட்டேலுடன் பேரம் பேசினார்கள். இந்திய அரசு பல நிபந்தனைகளை முன் வைத்தது. ஆர்.எஸ்.எஸ். ஒரு ரகசிய அமைப்பாக செயல்படக் கூடாது; அதற்கான கொள்கைத் திட்டங்களை வகுத்து வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்; அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்பதெல்லாம் விதிக்கப்பட்ட நிபந்தனை. அந்த நிபந்தனையை ஆர்.எஸ்.எஸ். ஏற்றுக்கெண்டு தனது அமைப்புக்கு சட்டதிட்டங்களை உருவாக்கியதோடு, அரசியல் நடவடிக்கைகளிலிருந்து முழுவதுமாக விலகி நிற்கும் என்றும், (ஆர்.எஸ்.எஸ். ஸின் சட்டதிட்டப் பிரிவு 4(பி)) உறுதியளித்தது. அரசியலில் ஒதுங்கியிருப்பதாக உறுதி கூறிய அதே ஆர்.எஸ்.எஸ். தான் இப்போது பிரதமர் வேட்பாளராக மோடியை நிறுத்தியிருக்கிறது. இந்த விவரங்களை 'இந்து' நாளேட்டில் (அக்.8, 2013) வித்யா சுப்ரமணியன் விரிவாக பதிவு செய்துள்ளார். ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர் குருமூர்த்தி இதை மறுத்து ஒரு கட்டுரை எழுதினார். அதே நாளில் வித்யா சுப்ரமணியன், தனது கருத்தை மீண்டும் உறுதி செய்து, ஆதாரங்களை வெளியிட்டார். பா.ஜ.க.வையும், ஆர்.எஸ்.எஸ்.ஸையும் பசுத்தோல் போர்த்தி அகிம்சையும் அன்பும் நிறைந்தவர்களாக சித்தரிக்க ஒரு பார்ப்பனர் கூட்டம் புறப்பட்டிருக்கிறது. இவர்களின் முகத்திரை கிழித்தெறியப்படுவது மட்டும் உறுதி.

### 'பால்ய விவாகம்'; அய்.நா. எதிர்ப்பு

**பா**ர்ப்பனியம் - சமூகத்தில் திணித்த பல்வேறு கொடுமைகளில் ஒன்று 'பால்ய விவாகம்' அதாவது குழந்தைத் திருமணம். பார்ப்பனர்கள், உயர்ஜாதிக் குடும்பங்களில் பிற ஜாதியினருடன் ஜாதிக் கலப்பு நிகழ்ந்து விடக்கூடாது என்பதற் காகவே இந்தக் கொடூரமான முறையைத் திணித்தனர். இந்த சமூகக் கொடுமை பல்வேறு நாடுகளில் பரவியுள்ளது. இந்தக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க அய்க்கிய நாடுகள் சபையின் மனித

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 30.10.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பார்வையாளர்கள் நடனமாடி மகிழ்ச்சி

(முதல் பக்கத் தொடர்ச்சி)






சு.க.ப.க.வின் திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் பரமேஸ்வரி, மாவட்டச் செயலாளர் அனுப்பட்டி பிரகாசு, திருப்பூர் மாவட்டத் தலைவர் பாரதிவாசன் ஆகியோர் உழைப்பில், திராவிடர்களின் உணவு, உடை, குடியிருப்பு, திருமண முறை, மரணச் சடங்குமுறை போன்ற பிறப்பு முதல் இறப்பு வரையிலான பண்பாட்டுக் கண்காட்சி பார்வையாளர்களுக்கு பல செய்திகளைக் கூறியிருந்தது. தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் சார்பில் மாநில அமைப்பாளர் திருப்பூர் சிவகாமி தலைமையில் அதன் தோழர்கள் அமைத்த அறிவியல் கண்காட்சியும் பார்வையாளர்களைச் சிந்திக்கத் தூண்டியது.

இறுதியில் திராவிடர் உணவு விழாவின் இரவு உணவுகள் கேழ்வரகு களி, கம்பு தோசை, சம்பா கோதுமை உப்புமா, பிரண்டை சட்னி, வாழைப்பூ குருமா, தென்னம்பால் ஆகியவை பார்வையாளர்களுக்கு பரிமாறப்பட்டன. ஆண், பெண், குழந்தைகள் போன்ற எந்த பேதமுமின்றி அனைவரும் தென்னம்பாளையும், மாட்டுக்கறி வகைகளையும், சிறு தானிய உணவுகளையும் உண்டு மகிழ்ந்தனர். திராவிடர் உணவு விழாவிற்கான உணவு வகைகளை அறுஞ்சுவையுடன் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்த ஏற்காடு பெருமாள் தலைமையிலான தோழர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெகுவாகப் பாராட்டி சிறப்புச் செய்தார்.

கருந்திணை 2013 நிகழ்வு திட்டமிடலில் தொடங்கி, இறுதி வரை பல தோழர்கள் முக்கியப் பங்காற்றினர். குறிப்பாக செயலவைத் தலைவர் துரைசாமி, பல்லடம் விஜயன், திருப்பூர் இராவணன், மேட்டூர் சக்திவேல், சேவூர் செந்தில் குமார், திருப்பூர் முகில்ராசு, அகிலன், சண்முகம், மணிகண்டன், மூர்த்தி, ஜீவா நகர் குமார், நகுலன் பிரசாத், பாலு, கொடுமுடி பாண்டியன், கடத்தூர் காந்தி, பல்லடம் மணிகண்டன், வடிவேல், சூர்யா, இராவத்தூர் இரமேஷ், சற்குணம், பார்த்திபன், இராயப்பேட்டை செல்வக்குமார், சென்னை தாமரைக்கண்ணன் ஆகிய தோழர்கள் விழாவைத் திட்டமிட்டு நடத்துவதற்கு பெரும் துணையாக இருந்தார்கள்.

காலையிலிருந்து இரவு வரை 12 மணி நேரமும் சிறிதும் சலிப்புத் தட்டாமல் நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து தொடர்ச்சியாக நடைபெற்றன. நண்பகல் உணவு நேரத்திற்குப் பிறகும், இரவு விழா முடிவடையும் போதும் பார்வையாளர்களில் பெரும்பாலானவர்கள் கலை நிகழ்ச்சிகளில் ஒன்றி, எழுந்து நடனமாடத் தொடங்கினர். தாய், தந்தை - மகன், மகள் - நண்பர் - தோழர் - பொறுப்பாளர் போன்ற அனைத்து நிலைகளையும் கடந்து அனைவரும் ஒன்றாக நெடுநேரம் நடனமாடி விழாவை முடித்து வைத்தனர்.

நமது தோழர்களுக்கிடையேயும் தோழர்களின் குடும்பங்களுக்கிடையேயும், தோழமை அமைப்புகளின் தோழர்களுக் கிடையேயும் உறவை நெருக்கமாக்கும் நோக்கிலும், ஜாதி மறுப்புப் பண்பாட்டைச் செயலாக்கும் நோக்கிலும் இதுபோன்ற விழாக்கள் ஆண்டுக்கு ஒரு முறையாவது நடத்தப்பட வேண்டும் என பங்கேற்றோர் தெரிவித்தனர்.

**செய்தி : மன்னை இரா. காளிதாசு**

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் திறப்பு

## தமிழர் வரலாற்றில் திருப்புமுனை நிகழ்ச்சி

திறப்பு நிகழ்ச்சி : 8.11.13 வெள்ளி மாலை 5 மணி - தஞ்சாவூர்

9, 10.11.2013 சனி, ஞாயிறு
காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை
கருத்தரங்குகள் - இசையரங்குகள்

- தமிழகத் தலைவர்கள்,
- அறிஞர்கள்,
- கவிஞர்கள்,
- உலகத் தமிழர்கள்,
- திரையுலகக் கலைஞர்கள்

பங்கேற்கிறார்கள்.

**உலகத் தமிழர் பேரமைப்பு அழைக்கிறது!**

**தமிழர்களே திரண்டு வருக!**

# சுயமரியாதைப் பேரவை எடுத்த பெரியார் பிறந்த நாள் விழா

பெரியாரின் 135 ஆவது பிறந்த நாள் விழா, சென்னை திருவான்மியூரில் குத்தூசி சா. குருசாமி, குருவிக்கரம்பி சு. வேலு, சுயமரியாதைப் பேரவை சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வால்மீகி தெருவில் 29.9.13 ஞாயிறு காலை நடைபெற்ற இவ்விழாவிற்கு, தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் தலைமை வகித்தார். புதுகை க. இராசேந்திரன் வரவேற்புரை யாற்றினார். மறைந்த சுயமரியாதை வீரர் கழஞ்சூர் சொ. செல்வராஜியின் படத்தை வாலாசா வல்லவன் திறந்து வைப்பதாக இருந்தது. அவர் வர இயலாது போகவே, அவரது உரை வாசிக்கப்பட்டது. செயல்வீரர் திருச்சி வீ.அ.பழனி, திருவுருவப் படத்தை ஓய்வு பெற்ற காவல்துறைக் கண்காணிப்பாளர் ம.பொன்னிறைவன் திறந்து வைத்தார். மதுரை தோல் மருத்துவர் அ.சவுந்தரபாண்டியன், 'சாப்பாட்டிலும் சாதி' என்ற தலைப்பில் உரையாற்ற, இனமானக் கவிஞர் செ.வை.ர. சிகாமணி, பெரியாரின் பிறந்த நாள் கவிதையை அரங்கேற்றினார். அனைவருக்கும் மறைந்த வீ.அ.பழனியின் இளையமகன் வணங்காமுடி பொன்னாடை அணிவித்துச் சிறப்புச் செய்தார்.

இக்கூட்டத்தில் மறைந்த பகுத்தறிவாளர்கள் திருச்சி து.மா. பெரியசாமி, வீ.அ.பழனி, இயக்குநர் மணிவண்ணன், கவிஞர் சாமி. பழனியப்பன், கழஞ்சூர் சொ.செல்வராஜி, பேராசிரியர் பெரியார் தாசன், மகாராஷ்டிராவைச் சேர்ந்த நரேந்திர தபோல்கர் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைக் குழு தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது. குழந்தைத் திருமணங்கள் பெருமளவு நடைபெறும் எத்தியோப்பியா, தெற்கு சூடான், சிரியா, ஏமன் உள்ளிட்ட 107 நாடுகள் இத் தீர்மானத்தை ஆதரித்துள்ளன. ஆனால், இந்தியா இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க மறுத்துவிட்டது. உலகம் முழுதும் நடக்கும் 6 கோடி குழந்தை திருமணங்களில் 40 சதவீதம், அதாவது 2.4 கோடி குழந்தைத் திருமணங்கள் இந்தியாவில் தான் நடக்கின்றன. இந்தியாவில் இந்த பால்ய விவாகம் சட்டத்தை மீறி பரவலாக நடந்து வருகிறது. அய்.நா. தீர்மானத்தை இந்தியா ஆதரித்தால் இந்தியா, இந்தத் திருமணங்களை முழுமையாக தடுத்து நிறுத்த தீவிரமான நடவடிக்கைகளை எடுப்பதோடு அய்.நா.வுக்கும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அறிக்கைகள் அனுப்ப வேண்டும். இதற்கு இந்தியா தயாராக இல்லை. 'இந்துத்துவா' ஆட்சியாகவே காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியும் செயல் படுகிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

**- இரா**

**'புரட்சிப் பெரியார் முழக்கம்'**

**இதழுக்கு உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?**

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 31st October 2013

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN